Registered as a News Paper
பக்கம் - 20

# ஈழநாதம்

விலை: 15.00
வெள்ளிநாதம் Weekly
நாதம்-14 வெள்ளி-23 01-07 ஆகஸ்ட் 2003

## பேச்சுக்களை இழுத்துச்செல்வது?



ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி 01.08.2003

# அலையாய் அலையும் மீனவர் வாழ்வு

வடமராட்சிக்கடற்பரப்பில், தொழிலுக்குச்சென்ற மீனவர்கள் மீது இந்திய மீனவர்கள் தாக்குதல்நடத்தியுள்ளமையானது மிகவும் மோசமான கண்டிக்கத்தக்க செயலாகும்.

எமது மக்களின் உரிமையான பாரம்பரியக் கடற்பரப்பில் அத்து மீறி நுழைந்து எமது கடல்வளங்களைஅபகரிக்கும் நடவடிக்கைகளில் இறங்கியதோடல்லாமல், அவர்களின் தொழிலை, இயல்பாகச்செய்யமுடியாமல் இடையூறு செய்து துரத்தித்தாக்கியமையானது அப்பட்டமான காட்டுமிராண்டித்தனமாகும்.

எமது மக்கள் - மீனவ சமுதாயத்தினர் - கடந்த இரு தசாப்தங்களிற்கும் அதிகமான காலமாகவே தங்களின் கடலில் தமது உயிர்வாழ்தலுக்கான தொழிலை மேற்கொள்ளும் சுயாதீன செயற்பாட்டிற்கான உரிமையை இழந்தவர்களாகி துன்ப, துயர இழப்புகளை சுமந்து தமது இருப்பை முழுமையாக இழந்து அல்லல்பட்டு அலைந்து வந்துள்ளமை சோகவரலாறாகும்.

கடலும் கரையுமென, இயற்கையோடிணைந்த, கடற்தாயை மட்டுமே நம்பிய வாழ்வை வாழ்ந்த மீனவ மக்கள் நிச்சயமற்ற ஆபத்துமிக்க தமது உழைப்புக்கான தொழில் நடவடிக்கையின் போதும் நிறைவாகவும், நம்பிக்கையுடனும், நின்மதியாக வாழ்ந்த காலம் யாவும்அவர்களிடம் இருந்து பேரினவாத யுத்த வெறியர்களின் கடற்படையினரால் ஈவிரக்கமின்றி பறிக்கப்பட்டது. கடலிலிருந்து மட்டுமல்ல. கரையிலிருந்தும் அவர்கள் ஓடஓட விரட்டப்பட்டார்கள்.

சுமார் 20 ஆண்டுகள் அவர்கள் பட்ட அவலம் வார்த்தைகளில் வடிக்க முடியாதது. கடல் வலய சட்டங்களால் அவர்கள் சிந்திய கண்ணீரின் உப்பை கடல் நீரே அறியும்.

இப்போது ஏற்பட்டுள்ள இடைக்கால அமைதியில் அவர்கள் மீளவும் தமது வாழ்வை ஸ்திரப்படுத்த, தமது மண்ணில் நிலைகொண்டு கடலில் தொழில் தொடங்க ஆரம்பித்துள்ளவேளையில் இதுவரை அவர்களுக்குரிமையான கடல் வளங்களை சுரண்டிப்பிழைத்தே சொகுசு கண்டவர்களால் அச்சுறுத்தல்களிற்குள்ளாகிவருகின்றனர்.

சிறிலங்கா கடற்படையினரின் கெடுபிடிகள் இன்னமும் குறைந்தபாடில்லை.

அன்றாடம் தொழில் நிமிர்த்தம் கடலில் செல்லும் மீனவர்கள் கடற்படையினரால் தாக்கப்படும் செய்திகளும் அவர்கள் பிடிக்கும் மீன்கள் அபகரிக்கப்படும் செய்திகளும் வெளிவந்தவண்ணமேயுள்ளன.

இந்தியா, தாய்லாந்து போன்ற வெளிநாட்டு மீன்பிடி வள்ளங்கள் எமது கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து எமது மீனவர்களை தாக்கியும் படகுகளை மோதியும் வலைகளை அறுத்தழித்தும் அட்டகாசம் செய்கின்றன.

கேட்பாரில்லை.

முறைப்பாடுகள் கவனிக்கப்படுவதில்லை.

தமிழ் மீனவர்கள் தானே எக்கேடு கெட்டால் எமக்கென்ன என்ற அலட்சியம். இதேவேளை எமது கடற்பரப்பில் மீன் பிடிக்க சீன மீன்பிடிப்படகுகளுக்கு அனுமதியும் வழங்கப்பட்டிருக்கிறது.

இவையாவும் திட்டமிட்ட செயற்பாடுகளேயாகும்.

கடந்த காலங்களில் தமிழக மீனவர்கள் சிறிலங்கா கடற்படையினரால் தாக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் 'குய்யோ முறையோ' எனக்கூப்பாடு போட்ட தமிழக அரசு - இந்திய மீனவர்களே இப்போது ஈழத்தமிழ் மீனவர்களின் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து அவர்கள் தாக்குதல் நடத்திவருவது. குறித்து என்ன சொல்லப்போகிறதாம்?

யார் என்னசொன்னாலும் எமது மீனவர்கள் மட்டுமல்ல எமது கடற்பரப்பும் பாதுகாக்கப்படவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

-கடற்படையினரிடமிருந்து மட்டுமல்ல...

-அந்நியநாட்டு ஆக்கிரமிப்பு மீனவர்களிடமிருந்துதான்....

எமது மக்களின் கடல் மற்றும் தரை உரிமைகள் முற்றாக வென்றெடுக்கப்படுவதன் மூலமே இதனை முழுமையாக சாத்தியமாக்க முடியும்.

வெறும் கோரிக்கைகளும், மகஜர்களும், முறைப்பாடுகளும் கடலில் எறிந்த கற்களாகவே அமையும்.

## தூரனின் பார்வை

# தமிழ் மக்கள் விழிப்புடன் இயங்க வேண்டிய காலம்

சிறிலங்காவின் விவகாரங்களில் குறிப்பாக இனப்பிரச்சினையில் இந்தியத் தலையீடென்பது ஒருகெட்ட தொற்று நோய் கிருமியின் ஆபத்தான தன்மையையே தொடர்ந்து கொண்டிருக்கிறது என்பதை அண்மைகால 'தொடர்' நிகழ்வுகள் பலவும் தெளிவுபடுத்திவருகின்றன.

உடலின் ஏதாவது ஒரு உட்பகுதியில் உறங்கு நிலையில் பதுங்கி இருந்து விட்டு, பலவீனமான ஆரோக்கியமற்ற அல்லது தனக்கு சாதகமானநிலை ஏற்படும் போது மீண்டும் தனது அகோரத்தன்மையை தீவிரப்படுத்தித்தாக்கும் நோய்க்கிருமிகள் மிகமிக ஆபத்தானவை.

உடனிருந்தே கொல்லும் வியாதியின் விஷமூலங்கள் என்று தான் நாம் இதனைக் கொள்ளமுடியும். இலங்கை மீதான இந்தியா அக்கறை என்பதும், அணுகுமுறை என்பதும், தனது பிராந்திய நலன்களை மட்டுமே கருத்தில் கொண்டாதகவும், புவிசார் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றிக்கொள்ளும் தீவிர முனைப்புடன் கூடிய இராணுவ மற்றும் அரசியல் மூலோபாயங்களை தளமாகக்கொண்டதாகவுமே தொடர்ந்து இருந்து வருகின்றது என்பதே ஆபத்தான எச்சரிக்கையையும், ஆழமான துயரத்தையும் தரும்விடயமாகும்.

தென்னாசியப்பகுதியிலும், இந்து சமுத்திரப்பிராந்தியத்திலும் இந்தியா தனது மேலாதிக்க வல்லமைத்திறனை மேலும் வலுப்படுத்த வரண்ட சுயநலத்தன்மையுடன் கூடிய, அதேசமயம் தொலை நோக்கும், தீர்க்கதரிசன அரசியல் அணுகுமுறையுமற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதென்பது இந்தப்பிராந்திய நாடுகளில் நிரந்தர அனுமதியின்மையையும் உள்ளக அரசியல் குழப்பங்களையும் ஏற்படுத்தும் உள் நோக்கத்தினையே அது கொண்டுள்ளதை உறுதிப்படுத்துகிறது.

அயல் வீட்டை எரித்து அந்தத்தீயில் தன் வீட்டாரை குளிர்காய வைக்கும் குயுக்தி அணுகுமுறையையே சிறிலங்காவின் விவகாரங்களில் இந்தியா மீண்டும் தீவிரப்படுத்த முனைகிறது என்பது அதன் அண்மைக்கால நகர்வுகள் மூலம் பட்டவர்த்தனமாகியுள்ளது.

குறிப்பாக தான் இனிமேல் இந்த விவகாரத்தில் தலையீடு செய்யமாட்டேன் என பாவனை செய்து, ஒதுங்கியிருப்பது போல், உறங்கியிருப்பது போல் இருந்த - உலகிற்கு தன்னை இனங்காட்டிக்கொண்டிருந்த இந்தியா, ஓரக்கண்ணால் எல்லாவற்றையும் ஒரு குள்ள நரித்தந்திரோபாய நோக்குடன் அவதானித்துக் கொண்டிருந்துவிட்டு, குட்டையைக்குழப்பி அதில்நுழைந்து சேற்றில் குதூகலிக்கும் எருமைத்தன செயற்பாடுகளில் காலமறிந்து இறங்கியுள்ளது.

இது வெறும் மூக்கைநுழைக்கும் விடயமல்ல... அடுத்தவரின் மூக்கை அறுக்கும் விடயமே...

சமாதானத்திற்கு வெளியில் ஆதரவு, குழப்பங்களை ஏற்படுத்த உள்ளே ஆதரவு. இந்த நிலைப்பாட்டையே இப்போது இந்தியா ஈழத்தமிழர் பிரச்சினையில் - ராஜதந்திர முறையில் - மேற்கொண்டு வருவதாக அரசியல் ஆய்வாளர் ஒருவர் அண்மையில் கூறியதை இச்சமயத்தில் நினைவு கொள்ளவேண்டியுள்ளது. ஈழத்தமிழரின் அரசியல் உரிமைகளுக்கான போராட்டங்கள் அனைத்தையும் காலத்திற்குக்காலம் வெவ்வேறு வடிவங்களில் வெவ்வேறு மூலோபாயங்களின் அடிப்படையில், இந்தியா தனது மேலாதிக்க சிந்தனையின் நோக்கத்திலேயே அணுகிவந்துள்ளது.

இந்த அணுகுமுறைக்கோளாரின் பிரதிபலிப்பே, இலங்கையின் இனப்பிரச்சினை விவகாரம் விகாரமடையக்காரணமாகும்.

1987 இல் திடீரென இந்தியா மேற்கொண்ட அரசியல் மற்றும் இராணுவ நடவடிக்கைகள் சிறிலங்காவின் இறமையை முற்றாக அவமதித்துப் புறக்கணித்ததுடன் தமிழ் மக்களின் விடுதலைப்போராட்டத்தை நசுக்கி அதை கொச்சைப்படுத்தவும் செய்தது.

இந்தியாவின் அந்த ஒப்பந்தம் இலங்கையில் எரியும் பிரச்சினையை மேலும் அதிகமான ஒரு தீப்பந்தமாகவேமாற்றியது.

தமிழ் மக்களின் மனதில்இந்தியா குறித்து நிறைந்த எதிர்பார்ப்புடன் இருந்த தன்னம்பிக்கை அந்தத்தீயில் முற்றாகவே எரிந்து பொசுங்கியது.

அந்த ஒப்பந்தத்தின் மூலம், இந்தியா அவமானம் மிக்க ஒரு அணுகுமுறைத் தோல்வியை ராஜதந்திர ரீதியில் சந்தித்ததை விட வேறெதையும் சாதிக்கவில்லை.

இந்தியாவுக்கு அதன் மூலம் கிடைத்த ஒரே அசிங்கமான ஆதாயம் சில விசுவாசமான ஒட்டுண்ணி கையாட்களும் தலையாட்டிகளும் மட்டுமே.

இந்த ஒட்டுண்ணித் - தலையாட்டிகளை வைத்துக்கொண்டே மீண்டும் இலங்கைப் பிரச்சினையில் இந்தியா தனது தலையீட்டை அண்மைக்காலத்தில் தீவிரமாக்க தொடங்கியுள்ளதுடன் தன் வல்லாதிக்க அதிகாரத்தை வெளிப்படையாக - அநாகரீக முறையில் அச்சுறுத்தல்பாணியில் வெளிப்படுத்தவும் தொடங்கியுள்ளது.

ஆனந்தசங்கரி விவகாரத்தில் கூட்டணியின் ஏனைய தலைவர்களை அழைத்து, இந்தியத்தூதுவர் நிருபம்சென் அவர்களுடன் நடந்துகொண்ட விதம் குறித்து ஊடகங்களில் வெளியான செய்திகள் இதற்குச்சிறந்த உதாரணமாகும்.

இப்போது இலங்கையில் உள்ள தனது ஆதரவுச்சக்திகளை அதாவது அடியாட்களைப் பாதுகாப்பதிலும் அவர்களை வைத்துக் கொண்டே அரசியல் காய்களை நகர்த்துவதிலும் முனைப்புடன் இந்தியா செயற்பட ஆரம்பித்துள்ளது போல் தெரிகிறது.

டக்ளஸ் தேவானந்தாவின் இந்திய விஜயமும் அவர் அங்கு வெளியிட்ட அறிக்கைகளூடேயான ஒப்பாரியும் இந்தியா மீண்டும் இலங்கைப்பிரச்சினையில் தலையிடவேண்டுமென விடுத்த கோரிக்கையும் ஒரு நாடகத்தின் தொடர் அங்கங்களாகவே நிகழ்ந்துள்ளன.

ஏற்கனவே வரதராஜப்பெருமாள் மூலம் ஈழத்தமிழர் விவகாரத்தில் தனது தலையீட்டை நடந்து முடிந்த சிறிலங்கா பாராளுமன்ற மற்றும் உள்ளூராட்சித் தேர்தல்களினூடாக மேற்கொள்ளமுயன்று தோல்வியைச்சந்தித்த இந்தியா பெருமாளின் செல்வாக்கின்மையை தேர்தல் முடிவுகள் மூலம் புரிந்துகொண்டு இப்போது டக்ளஸை அணுகியுள்ளதாகத்தெரிகிறது.



இதேவேளை டக்ளஸை வைத்துக் கொண்டு சந்திரிகாவையும் கையாள முடிவதுடன், சமாதானப்பேச்சுக்களில் முன்னேற்ற மேற்படாதவாறு குழப்பங்களை ஏற்படுத்த இரு தரப்பையும் உற்சாகப்படுத்தவும் செய்கிறது. இதேவேளை இந்திய இலங்கை உடன்பாட்டுக்காலத்தில் இந்தியத்தூதுவராக விளங்கிய டிக்ஸிற் மீண்டும் இலங்கை விவகாரம் குறித்து வாய்திறக்கத்தொடங்கியுள்ளார். அண்மையில் இந்த மனிதர் 'தமிழ் மக்கள் தமக்கென சுதந்திரமான தனியான ஒரு அரசை அமைப்பதைத் தடுப்பதற்கு தலையீடுகளை மேற்கொள்வதற்கான வாய்ப்புகள்இன்னமும் இந்தியாவுக்கு இருப்பதாக' புதுடெல்லியில் செய்தி நிறுவனமொன்றிற்கு அளித்தபேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

'இலங்கைத்தீவில் தனியொரு இறமையுள்ள நாட்டை உருவாக்குவதே விடுதலைப் புலிகளின் அடிப்படைக்குறிக்கோள். இந்த விடயம் குறித்து இந்தியா ஆழமாக கவனம் கொண்டுள்ளது. எனவும் கூறியுள்ள டிக்ஸிற் 'இலங்கையின் ஒருமைப்பாட்டிற்கு பாதகமான சில விடயங்களை கூட தீர்வாகக் கொண்டுவர நோர்வே நாட்டவர் ஆர்வம் காட்டுகின்றனர்' எனவும் கூறியுள்ளார்.

இவரது இந்தக்கூற்று எச்சரிக்கையுடன் அவதானிக்கப்படவேண்டியதொன்றாகும்.

இருசெய்திகளை இவரின் இக்கூற்று தெரிவிக்கி ன்றது.

விடுதலைப்புலிகள் தமிழ் மக்களுக்கு அவர்களின் அபிலாஷைகளை திருப்தி செய்யக்கூடிய தீர்வொன்றை பெற்றுக்கொடுப்பதை இந்தியா விரும்பவில்லை என்பது ஒரு செய்தி.

நோர்வே தீர்வு முயற்சிகள் இலங்கையின் ஒருமைப்பாட்டை சிதைத்துவிடும் எனச் சிங்களபேரினவாதிகளை தூண்டி அதனை அவர் குழப்ப விரும்புகிறார் என்பது மற்றொரு செய்தி.

இந்திய வெளியுறவுத்துறை ஆலோசகரான டிக்ஸிற்ரின் கூற்று இந்தியாவில் இலங்கை தொடர்பான வெளியுறவுக்கொள்கை என்பது இன்னமும் அதே விகாரத்தன்மையுடன் தான் இருக்கிறது என்பதை தெளிவுபடுத்துவதாகவே உள்ளது.

ஆக இலங்கையில் சமாதானம் ஏற்படுவதையோ, அல்லது தமிழ்மக்களுக்கு நியாயமான தீர்வு ஏற்படுவதையோ, இந்திய அபிலாசைகளுக்கு ஏற்பநடைமுறைப்படுத்த வேண்டுமென்பதையே இந்தியா விரும்புகிறது.

இன்னும் தெளிவாகக் கூறுவதானால் இலங்கை தன் இறமைக்குட்பட்ட விடயங்களில் கூட இந்தியாவின் தலையசைப்பை பார்த்தே முடிவெடுக்கவேண்டும். என்பதை இந்தியாவின் இலங்கைதொடர்பான வெளியுறவுக்கொள்கையாக உள்ளது என்றே உணரக்கூடியதாக இருக்கிறது.

இந்தியாவின் இலங்கை விவகாரங்கள் மீதான அணுகுமுறை, குறிப்பாக தமிழர் பிரச்சினை தொடர்பான அணுகுமுறை முன்னர் - ஒன்றரை தசாப்தங்களுக்கு முன்னிருந்த - அதே நோக்கில் இன்னமும் தீவிரம் கொண்டுள்ளது போன்றே தெரிகிறது.

இதேவேளை இந்தியா- இலங்கை உடன்பாட்டு கையெழுத்தான காலகட்டத்தில் இந்தியாவினால் உருவாக்கப்பட்ட அவர்களின் அமைப்பான ஈ.என். டி.எல்.எவ் குழுவினர் மீண்டும் கொழும்புக்கு வருகை தந்து அலுவலகம் அமைத்து இயங்கும் நடவடிக்கைகளில் இறங்கியுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. இந்தியாவால் உருவாக்கப்படடு, இந்தியப்படை வெளியேறுமுன்னரே தப்பியோடி இந்தியாவுக்கே சென்று இந்திய அரசினதும் உளவுஅமைப்புக்களினதும் அனுசரணையுடனும், பாதுகாப்புடனும் தலைமறைவு வாழ்க்கையை நடத்திய இந்தக்குழுவினரின் மீள்வருகை நிச்சயமாக தமிழ்மக்களின் நன்மைக்காக இருக்கப்போவதில்லை.... இந்தியா தனது அபிலாஷைகளுக்கேற்ப ஒரு பணியை இவர்களிடம் நிச்சயம் ஒப்படைத்தே இருப்பார்கள் அப்படியானால்....?

யானை வரும் பின்னே...மணி யோசை வரும் முன்னே என்ற பழமொழியே நினைவுக்கு வருகிறது!

அதிகம் அடைவதை விட, தேவையைக் குறைத்துக்கொள். - தாமஸ் ஏ.கெம்பிஸ்

# அடுத்த சனாதிபதித் தேர்தல் வரைக்கும் பேச்சுக்களை இழுத்துச் செல்வது?

பிரிட்டனில் நீண்டகாலமாக வசித்துவரும் மூத்ததமிழர் ஒருவர் அண்மையில் இங்கு வந்திருந்தார். சமாதானமுயற்சிகளின் சர்வதேச பரிமாணம் குறித்து கதைக்கும்போது அவர் ஒரு தகவலைச்சொன்னார். கிழக்குத்தீமோர் சுதந்திரத்துக்காகப்போராடிய காலங்களில் லண்டனுக்கு புகலிடம் தேடிவந்த கிழக்குத் தீமோர்ப்போராளி ஒருவர் இப்பொழுது கிழக்குத்தீமோர் அரசாங்கத்தில் ஒரு பெரிய பதவியில் இருக்கிறாராம். ஈழப்போர் பற்றி நன்கு அறிந்து வைத்திருக்கும் அவர், நிலவும் சமாதான முயற்சிகளைப்பற்றிக் கேள்விப்பட்டதும் தொலைபேசியில் தொடர்புகொண்டாராம். சர்வதேச சமூகம் கிழக்குத்தீமோருக்கு முன்பு என்ன செய்தது என்று தமிழர்களுக்குச் சொல்லவேண்டும்.... எமது போராட்டத்தை முன்புநாசமாக்க முயன்றதுபோல உங்களுடைய போராட்டத்திலும் அவர்கள் தலையிடத்தொடங்கி விட்டார்கள். இதுதொடர்பாக தமிழர்களுடன் எமது அனுபவங்களைப்பகிர்ந்துகொள்ள நாங்கள் தயார்.... என்ற தொனிப்பட அவர் கதைத்தாராம்.

உண்மைதான். ஈழப்போரின் சமாதான முயற்சிகள் சர்வதேசமயப்பட்ட அளவிற்கு முன்னேற்றம் குறைவுதான். மட்டுமல்ல, சர்வதேசமயப்படுவது என்பதை அதன் இறுதிவிளைவுகளின் அடிப்படையில்கூறின், போரின் கூரை மழுங்கச்செய்யும் ஒரு பொறிமுறையாகவே யதார்த்தத்தில் காணப்படுகின்றது. பலஸ்தீனத்தில், அயர்லாந்தில் இதுதான் நடக்கிறது.

ஆனால், கிழக்குத்தீமோர் இதற்கெல்லாம் எப்படியோவளைந்து நெழிந்து கொடுத்து முடிவில் கடந்தஆண்டில் தனது சுதந்திரத்தைப்பெற்றுவிட்டது. இதுவிசயத்தில் அவர்களுடைய அனுபவங்கள் தமிழர்களுக்கு பெறுமதியானவையாக இருத்தல்கூடும். ஆனால் கிழக்குத்தீமோரின் அகப்புற நிலைமைகளை ஈழப்போரின் அகப்புற நிலைமைகளுடன் அப்படியே பொருத்திப்பார்க்க முடியாது. களயதார்த்தத்தைப்பொறுத்தவரை இதில் சில ஒற்றுமைகளும் உண்டு மிகக்கூர்மையான வேறுபாடுகளும் உண்டு.

இந்த இரண்டுபோராட்டங்களும் கடந்த நூற்றாண்டின் 70களில் தொடங்கியவை என்பது ஒருஒற்றுமை.

அதோடு இந்த இரண்டு போராட்டங்களிலும் உச்சக்கட்ட சமாதான முயற்சிகள் பெரும்பாலும் மேற்குலகின் பின்னணியில், மேற்குலகிற்கு ஆதரவான நாடுகளின் மேற்பார்வையில் நிகழ்ந்தமை என்பது மற்றொரு ஒற்றுமை.

இதில் விசேசமாக, கிழக்குத் தீமோரைப்பொறுத்தவரை 1996ல் அதன் சுதந்திரப்போராட்டத்தலைவர்களின் இரண்டாம் நிலையில் இருப்பவரான ஹேசேராமோஸ் ஹோர்ட்டி என்பவருக்கும் கிழக்குத்தீமோரின் திருச்சபை மேற்றாணியார் பெலோவுக்கும் கூட்டாக சமாதானத்துக்கான நோபல்பரிசு தரப்பட்டதை முக்கியமாகச்சுட்டிக்காட்ட வேண்டும்.

அடுத்ததாக, 1999 டிசம்பரில் யப்பானில் கிழக்குத்தீமோருக்கு உதவிவழங்கும் நாடுகளின் சர்வதேச மாநாடு ஒன்று கூட்டப்பட்டது. அதில் கிழக்குத்தீமோரைத்தூக்கி நிறுத்தவென்று 520மில்லியன் டொலர்கள் வாக்களிக்கப்பட்டது.

இதில் முக்கியமாக ஒன்றைக் கவனிக்கவேண்டும். மேற்குலகம் யாருக்காவது நோபல். பரிசுதருகிறது என்றாலே அந்தநபர் அவருடைய ஆள்தான் என்று அர்த்தம். அல்லது அவர் அவர்களுடைய சொற்கேட்டு நடக்கிறார் என்று அர்த்தம். அல்லது குறைந்தபட்சம் அந்தப்பரிசின் மூலம் அவரை வசப்படுத்த முயல்கிறார்கள் என்று அர்த்தம்.

மிகக்கவர்ச்சியான, கேந்திர முக்கியத்துவம் மிக்க சமுத்திர வழிகளில் கிழக்குத்தீமோர் காணப்படுகிறது. குறிப்பாக இந்தோனேசியா, ஒஸ்ரேலியா போன்ற மேற்கு நாடுகளுக்கு விசுவாசமான இரு நாடுகளுக்கிடையில் அது காணப்படுகிறது. எனவே கேந்திரமுக்கியத்துவம் மிக்க வர்த்தக வழிஒன்று தொடர்ந்தும் பதட்டமாய் இருப்பதை மேற்கு நாடுகள் விரும்பவில்லை. இதைத்தவிர மிகவும்




முக்கியமாக, ஏற்கனவே 70களில் கிழக்குத் தீமோர் சுதந்திரப்போராட்டத்தில் சீனா மறைமுகமாகச்செல்வாக்குச்செலுத்தும் நிலைமைகள் காணப்பட்டன. இதை வெட்டியாளவேண்டிய மிக வலிமையான ஒருதேவை முன்பு மேற்கு நாடுகளுக்கு இருந்தது.

இதையெல்லாம் கவனத்தில் எடுத்ததால்தான் கிழக்குத்தீமோரில் ஒரு தீர்வைக்கொண்டுவர ஏன் மேற்குநாடுகள் அத்துணை அக்கறையாக இருந்தன என்பதை சரியாக விளங்கிக்கொள்ளமுடியும்.

தவிர எல்லாவற்றையும் விட முக்கியமாக ஒரு சர்வசன வாக்கெடுப்பில் கிழக்குத்தீமோர்மக்கள் சுதந்திரத்துக்கான தமது விருப்பத்தை மிகக்கூர்மையாக வெளிக்காட்டியபின்பு அவர்களைத்தனியரசு அமைக்க விடுவதைத்தவிர வேறுவழி சர்வதேச சமூகத்துக்கு இருக்கவில்லை.

அதோடு, இந்தோனேசியாவை உடைத்து கிழக்குத்தீமோரைப் பிரித்துவிடுவதன் மூலம் இந்தோனேசியாவை பலவீனப்படுத்தலாம் என்ற ஒஸ்ரேலியாவின் பிராந்திய நலன்களுக்கும் இதில் முக்கியபங்கிருப்பதை விமசகர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

ஆனால் ஈழப்போரின் இதுவரையிலுமான சமாதான முயற்சிகளைப் பொறுத்தவரை இலங்கைத்தீவு இரண்டாக




உடைவதைதடுப்பதே அவற்றின் இறுதி இலக்காகக்காணப்பட்டுவருகிறது.

இந்திய - இலங்கை ஒப்பந்தமும் சரி, புரிந்துணர்வு உடன்படிக்கையும் சரி இலங்கைத்தீவு இரண்டாக உடைவதைத்தடுக்கும் நோக்கிலானவைதான்.

அப்படி இலங்கைத்தீவை இரண்டாக உடைக்காத விதத்தில் எட்டப்படும் ஒரு இறுதித்தீர்வு வரையிலுமான இடைக்காலத்தை சமாளிப்பதே இடைக்கால நிர்வாகசபையின் நோக்கம் என்று நம்பப்படுகிறது.

மந்திரிசபைக்குப் பதில்கூறத் தேவையில்லாத, ஆனால் அரசியலமைப்பிற்கு உட்பட்ட ஒரு இடைக்காலநிர்வாக ஏற்பாட்டைப்பற்றி இப்பொழுது விவாதிக்கப் படுகிறது.

இது சமாதான முயற்சிகளை அடுத்த சனாதிபதித்தேர்தல் வரையிலும் இழுத்திழுத்துக்கொண்டுபோக உதவும் என்றும் அந்த சனாதிபதித்தேர்தலில் சமாதானத்தின் பேராலேயே ரணில் பெருவெற்றி பெறுவார் என்றும் அப்படி அவர் வெற்றி பெற்றால், நிறைவேற்று அதிகாரமுடைய அவரை வைத்துக் கொண்டு உருப்படியாக எதையாவது செய்யலாம் என்றும் மேற்குலகம் நம்புகிறதா?


சனானா குஸ்மாவோ

நிலவும் சமாதான முயற்சி களைப்பற்றி அண் மையில் கருத்துத் தெரிவித்த முன்னாள் இந்தியத் தூதுவர் ஜே.என்.டிக்சிற்றும் இத்தகைய தொனிப்படவே கதைத்திருக்கிறார். "எத்தகைய ஒரு இறுதித்தீர்வையும் எட்டாமல் அடுத்த சனாதிபதித்தேர்தல்வரையும் பேச்சுக்களை இழுப்பதே விக்கிரமசிங்க அரசாங்கத்தின் இலக்கு..." என்று அவர் கூறியிருக்கிறார்.

**நிலாந்தன்**

ஆயின், தமிழர்கள் இதில் யாரிடத்தில் நம்பிக்கைகளை முதலீடுசெய்வது? ரணில் என்ற தனிநபரில்? அல்லது அமெரிக்கா தலைமையிலான மேற்குலகிலா?

அடுத்த சனாதிபதித்தேர்தல் வரைக்கும் ரணில்விக்கிரமசிங்கவைப் பாதுகாப்பதன் மூலம், சமாதானம் என்று மேற்குலகம் கூறும் ஏதோ ஒன்றை பாதுகாக்கமுடியும் என்று மேற்குலகம் நம்புகிறது.

அதுவரை யுத்தத்தை ஒத்தி வைப்பதற்கு ஒரு இடைமாறுகாலகட்ட ஏற்பாடாகவே இடைக்கால நிர்வாகசபையை அவர்கள் பார்க்கிறார்கள்.

ஒரு இடைக்கால நிர்வாக ஏற்பாட்டுக்குள் யுத்தத்தின் கூர்முனையை மழுங்கச் செய்துவிடலாம் என்றும் அவர்கள் நம்புகிறார்கள்.

ஆனால், இந்த இடத்தில் அவர்கள் ஒன்றைப்புரிந்துகொள்ளவேண்டும். உலகிலேயே அதிகம் விட்டுக்கொடுப்பற்ற ஒரு போராட்டம் ஈழப்போராட்டம்தான். புலிகளின் இந்த விட்டுக்கொடுப்பற்ற மனோநிலைக்குப் பின்னாலிருப்பது சயனைற்தான். அதாவது சரணடையத் தயாரில்லாத மனோநிலை. இதன் இன்னொரு நீட்சியே கரும்புலிகள்.

ஈழப்போரில் இதுவரை செய்யப்பட்ட எல்லா யுத்தகள அதிசயங்களுக்குப்பின்னாலிருக்கும் மனோநிலை இதுதான். எதிரி என்றும் துரோகி என்றும் அவர்கள் கூறும் நபர்களை மன்னிக்கத்தயார் இல்லாத மனோநிலையும் இதுதான்.

உலகம் முழுவதுக்கும் புதினமாய் இருக்கின்ற ஒருபுது அனுபவமாய் இருக்கின்ற இந்த மனோநிலை கிழக்குத்தீமோரிலோ அல்லது எரித்திரியாவிலோ அல்லது பலஸ்தீனத்திலோ அல்லது அயர்லாந்திலோ தென்னாபிரிக்காவிலோ காணப்பட்டிராத ஒன்று.

கிழக்குத்தீமோர்த்தலைவரும் கவிஞருமாகிய சனானாகுஸ்மோ சிறைபோயிருக்கிறார், வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருந்திருக்கிறார். தென்னாபிரிக்காவில், மண்டேலா ஏறக்குறைய கால் நூற்றாண்டுகாலம் சிறையிருந்திருக்கிறார். பலஸ்தீனத்தில், அரபாத் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்திருக்கிறார்.

இவர்கள் மூன்று பேருமே நோபல் பரிசு பெற்றவர்கள். மூன்று பேருமே மேற்குலகம் செய்ய முன்வந்த சமாதானத்தை ஏற்றுக்கொண்டவர்கள்.

அவர்களுடைய போராட்ட முறைகளின் படியும் அந்தப போராட்டங்களின் பின்னாலிருந்த மனோ நிலைகளின்படியும் அவர்கள் அத்தகைய சமரசமுயற்சிகளுக்கு இணங்கி வந்தமை தர்க்கபூர்வமானதே.

ஆனால், இந்து பத்திரிகை ஆசிரியர் ராமினால் Single - Minded (ஏக சிந்தனை உடை யவர்கள்) என்று அழைக் கப்படும் புலிகள் - அதாவது பிரிவினை தவிர வேறெதையும் பரிசீலிக்கத்தயாராக இல்லாதவர்கள் என்று வர்ணிக்கப்பட்ட புலிகள் - இம்முறை இப்படியொரு சமாதான முயற்சியில் இந்தளவுக்குப்பொறுமை காத்திருப்பது ஒருவித அரசியல் அதிசயமே.

மட்டுமல்ல, அவர்கள் அகச் சுயநிர்ணயஉரிமைக்கோட்பாட்டின் பிரகாரம். ஐக்கிய இலங்கைக்குள் ஒரு தீர்வுக்கு வரத்தயாராகியமை என்பது எந்தவொரு விமர்சகராலும் ஏற்கனவே எதிர்வு கூறப்பட்டிராத ஒன்றே.

புலிகளின் இந்த மனமாற்றத்தை பாதுகாக்கவேண்டிய தட்டிக்கழிக்கப்படவியலாத ஒரு பொறுப்பு ரணிலுக்கும் மேற்கு நாடுகளுக்கும் உண்டு.

இத்தருணத்தை அவர்கள் மேற்சொன்ன கிழக்குத்தீமோர்ப்போராளி கூறியது போல, ஈழப்போரின் கூரை முறிக்கப் பயன்படுத்துவார்களாயிருந்தால் நிலைமைகள் நாலாம் கட்ட ஈழப்போரை நோக்கி நகர்வது தவிர்க்க முடியாததாய் இருக்கும்.

இந்த இடத்தில் கடந்த மாதம் அனுராதபுரத்தில் நடந்த ஒரு சம்பவத்தை சுட்டிக்காட்டுவது பொருத்தமாயிருக்கும். கடந்த மாதம் 12ஆம் திகதி அனுராதபுரத்தில் பொங்கு தமிழ் தெளிவரங்கு ஒன்று இடம் பெற்றது. இதைக்குழப்ப எத்தனித்த ஜே.வி.பி.க்காரர்கள் சொன்னார்களாம்..... புனித போதிமரத் தைத் தாக்கியவர்களை அனுராதபுரத்துக்கு வந்து பொங்குதமிழ் செய்ய அனுமதிக்கக்கூடாது என்று. இதற்கு பதிலளித்த சில முற்போக்கான சிங்கள புத்திஜீவிகள் மற்றும் பத்திரிகையாளர்கள் சொன்னார்களாம்....... தமிழர்கள் முன்பு துப்பாக்கியால் பேசினார்கள் இப்பொழுது வாயால்பேச வந்திருக்கிறார்கள் இத்தருணத்தில் அவர்களைச் செவிமடுக்கத்தவறினால் அவர்களுடன் பேசத்தவறினால் நாலாங் கட்ட ஈழப்போர் தவிர்க்கவியலாதபடி வெடிக்கும். அதன்போது நாங்கள் அனுராதபுரத்தை மட்டுமல்ல ரூவான்வெலிசயவையும் கூட பாதுகாக்க முடியாமற்போய்விடும்...... என்று.

# நறுக்கென...

## தேசபக்தர்களின் பதவிப் பக்தி...



பொதுசன ஐக்கிய முன்னணியை தேசபக்தர்கள் முன்னணியாக உருமாற்றம் செய்யப்புறப்பட்ட தேசபக்தர்களின் தேசியப்பக்தி பதவிப்பக்தியாகிவிட்டதால் உருமாற்ற முயற்சி இடைநடுவில் நின்று இழுபடுகிறது.

பொசனத்தை ஐக்கியப்படுத்து வதை தூக்கிக்கிடப்பில் போட்டுவிட்டு அரசியல் அதிகாரத்தை எந்த வகையிலேனும் முற்று முழுதாக கைப்பற்றிக்கொள்ளும் வெறி மிக்க அபிலாசையுடன் சிறிலங்கா சுதந்திரக்கட்சியும், ஜே.வி.பியினரும் அந்தரங்க சுத்தியற்ற அரவ-அணைப் பொன்றை மேற்கொண்டு, தேசபக்தர்கள் ஐக்கிய முன்னணி என மாறுமுகம் காட்ட முற்பட்ட போதே கதை இப்படித்தான் போகும் என்பது அனைவருக்கும் தெரியும்.

ஒரு காலத்தில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் வெஞ்சினத்திற்கு ஆளான எதிரிகளாக ஜே.வி.பியினரே இருந்தனர். ஜே.வி.பியின் முதல் கிளர்ச்சி, 1971 இல் சிறிமா தலைமையிலான சுதந்திரக்கட்சியின் ஆட்சியின் போது இந்திய அரசின் ஆதரவுடன் இராணுவ இரும்புக்கரம் கொண்டு இரத்த வெறியுடன் அடக்கப்பட்டது.

அதற்கு பழிவாங்குவதைப்போன்று சிறிமாவின் மகளும் இன்றைய சனாதிபதியுமான - சுதந்திரக்கட்சியின் தலைவி சந்திரிகாவின் கணவரும் - நடிகரும் - அரசியல் வாதியுமான விஜயகுமாரணதுங்கவை ஜே.வி.பியினர் தமது இரண்டாவது கிளர்ச்சிக்கால கட்டத்தில் படுகொலை செய்தனர்.

இரத்த வெறிகொண்ட இரு தரப்பினரும் இப்போது இணைய முடியாத வன்மங்களுடன் ஒரு சுயநல உடன்பாட்டின் பேரில் இணைய முற்படுவது தான் சனநாயக கோமாளித்தனத்தின் உச்சமாகும்.

விசுவாசமற்ற - பதவி ஆசைக்கும், அதிகார வெறிக்கும் இடையிலான நபுஞ்சக உறவுக்குத்தான் தேசபக்தி என்ற பெயரா?

- அனுராவிற்கு சந்திரிகாஅக்காவின் கதிரைமேல் ஆசை. அக்காவிற்கோ நிறைவேற்று அதிகாரப்பதவி மீது ஆசை. ஜே.வி.பிக்கோ தமது அரசியல் செல்வாக்கை வலுப்படுத்தி ஆளும் அரசை ஆட்டிப்படைக்கும் சக்தியாக விளங்க ஆசை.

கூட்டணி அமைக்கும் முன்னரே 'சங்கீதக்கதிரை' (Musical Chair)விளையாட்டிற்கான யுக்தி தீவிரமாகிவிட்டது.

எதுவானாலும், சிறிலங்கா தேசமானது இந்தப்பதவிப்பக்தர்களின் அதிகார இலக்கை நோக்கமாகக்கொண்ட பக்திவெறியினால் பாழாகவே போகின்றது.

தேசபக்தர்கள் முன்னணியின் பின்னணி பக்தியை மையமாகக்கொண்டதல்ல.... பதவியை மையமாகக்கொண்டது.

## சிறிலங்காவின் தலைநகரம் வாஷிங்டனா? டெல்லியா?



சிறிலங்காவின் தலைநகரம் 'கொழும்பு' என்பது மெல்ல மறந்து போகும் நிலை ஏற்பட்டுவருகிறதுபோல் தெரிகிறது. இப்போது அண்மைக்கால நிகழ்வுகளைப்பார்க்கும் போது சிறிலங் காவின் தலைநகரம் 'டெல்லி'யா 'வாஷிங்டனா' என்ற குழப்பம் அரசுக்கே ஏற்பட்டுவிடும்போலுள்ளது.

சமாதானப்பேச்சா...? வாஷிங்டன் என்ன தீர்மானிக் கிறதோ அதுவே நடைமுறைப் படுத்தப்படுகிறது.

உதவி வழங்கும் நாடுகளின் மாநாடா அதுவும் அப்படித்தான்... ஆயுதக்கொள்வனவா, பாதுகாப்பா, அபிவிருத்தியா, எதுவானாலும் ரணிலின் நண்பரும் - பொருளாதார ஆலோசகரும் அமைச்சரும், ஒரு அமெரிக்கப்பெண்ணின் கணவருமான மிலிந்த மொறகொட... வாஷிங்டனின் ஆலோசனையைப்பெற விமானமேறி விடுகிறார்.

அவர் ரணிலின் அமெரிக்காவுக்கான விசேட தூதராக செயற்படுகிறாரா அல்லது அமெரிக்காவின் இலங்கை விவகாரங்களுக்கான ஆலோசகராக செயற்பட்டு ரணில் அரசுடன் இயங்கி வருகின்றாரா என்பதே குழப்பமாக உள்ளது.

மொறகொட வாஷிங்டன் பறக்கிறார் என்றால் இதே விவகாரங்கள் தொடர்பாக அனைத்தையும் கூறி ஒப்புவித்து 'கைகட்டி வாய் புதைத்து' நின்று இந்திய ஆட்சியாளரின் சம்மதத்தைப்பெற அல்லது அறிவுறுத்தல்களைப்பெற அமைச்சர் பீரிஸ் 'புதுடெல்லி'க்கு பறந்து வருகிறார்.

என்ன பிரச்சினையென்றாலும் 'தெரிவிப்பது நாங்கள் தீர்மானிப்பது நீங்கள்' என்ற நிலையிலேயே வாஷிங்டனிலும், டெல்லியிலும், சிறிலங்கா கட்டளைகளுக்காக காத்து நிற்கிறது.

முன்னர் பொதுசன ஐக்கிய முன்னணி அரசின் ஆட்சியின் போது 'கதிர்காமர்' 'ஏறுமயிலேறி' உலக வலம் வந்துகொண்டிருந்தது தெரிந்ததே...

அவரும் - பீரிஸும் அந்த ஆட்சியில் இதேபோல்தான் இயங்கினார்கள்...

ஆக சிறிலங்கா தெரிவிக்கிறது.....

வாஷிங்டனோ.... டெல்லியோ தான் முடிவெடுக்கிறது... எனவே 'கொழும்பு' தலைநகரம் என்ற தன்மைமாறி 'தலை'(மை)யற்ற நகரமாகிவருகிறது என்பது சரியாத் தானுள்ளது.

## அமைதியைக் கொல்லும் நோக்கிலான ஆயுதக் கொள்வனவுப் பயணம்



மீண்டும் ஒரு போருக்கான தயாரிப்பு வேலைகளில் சிறிலங்கா அரசு பகிரங்கமாகவே ஈடுபடத்தொடங்கியுள்ளது.

இஸ்ரேலுக்கான சிறிலங்காப்பாதுகாப்பு அமைச்சர் திலக்மாரப்பனவினதும் கடற்படைத்தளபதி தயாசந்தகிரியினதும் திடீர் விஜயமும், பெருமளவு நிதி ஒதுக்கீட்டுடன் கூடிய இராணுவ உபகரணக்கொள்வனவுக்கான விரைவு நடவடிக்கைகளும் இதனை உறுதிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

அமைச்சரினதும், கடற்படைத்தளபதியினதும் இந்த இஸ்ரேல்பயண நடவடிக்கையானது ஏற்கனவே பல மாதங்களின் முன்னர் திட்டமிட்ட ஒன்றெனவும், பல்வேறு சூழ்நிலைகள் காரணமாக பலதடவை ஒத்திவைக்கப்பட்டு கடைசியில் இப்போதுதான் அதனை மேற்கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டதாகவும் பாதுகாப்பு அமைச்சு அறிக்கை 'கரடி'ஒன்றை அவிழ்த்துவிட்டுள்ள போதும் உண்மையில் அரசின் உள்நோக்கமேவேறு.

சில வாரங்களின் முன் தான் பாதுகாப்பு அமைச்சர் மாரப்பன, விடுதலைப்புலிகளின் சரக்குக்கப்பலை கடற்படையினர் சர்வதேச கடற்பரப்பில் தாக்கி அழித்ததையடுத்து, எந்த நிலையையும் எதிர்கொள்ள முப்படையினரும் தயார் நிலையில் இருக்க வேண்டுமென வீராவேச அறிக்கை ஒன்றை விடுத்திருந்தார் என்பது நினைவிருக்கலாம்.

இது ஒரு போரெழுச்சிக்கான முன்னறிவிப்பாகக்கூட இருக்கலாம். அதனைத்தொடர்ந்தே இந்த 'இஸ்ரேல்விஜயம்' என்ற விடயம் நடந்தேறியுள்ளது.

கடற்படைக்கான நவநவீன போர்த்தளபாடங்கள் கடற்கலங்கள் மற்றும் ஏனைய உபகரணங்கள் கொள்வனவுக்கான விரைவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவையாவும் வழமையான பாதுகாப்பு முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் தான் என அரச தரப்பு பூசிமெழுக முற்பட்டாலும் இதனை ஒரு போர் முன்னேற்பாட்டு நடவடிக்கையாக தமிழ் மக்கள் கருதவேண்டிய நிலை தவிர்க்க முடியாத ஒன்றே.

சர்வதேச கடன் உதவிகளுக்கான உத்தரவாதம் எப்போது சிறிலங்காவுக்கு கிடைத்ததோ அப்போதே அரசு தனது அரசியல் மற்றும் போர் மூலோபாயத்திட்டங்களை வகுக்க ஆரம்பித்துவிட்டது என்பதே உண்மை.

அமெரிக்க அரசுடன் போருபகரண கொள்வனவு தொடர்பான உடன்பாடும். இஸ்ரேலிய மற்றும் சர்வதேச ஆயுத வியாபாரிகளின் வருகையும் அவர்களுடனான பேச்சுக்களும் கொழும்பில் வேகம் கொள்ளத்தொடங்கியுள்ளது.

இஸ்ரேல் சென்ற பாதுகாப்பு அமைச்சரும், கடற்படைத்தளபதியும் அங்குள்ள ஆயுத உற்பத்தி மற்றும் இராணுவதளபாட உற்பத்திமையங்களைச்சென்று பார்வையிட்டுள்ளனர்.

சுமார் 30 எண்ணிக்கையிலான நவீன தாக்குதல் பீரங்கிகளை கடற்படைக்கென கொள்வனவுசெய்ய அரசு ஆயிரக்கணக்கிலான கோடி ரூபாய்களை செலவிடவுள்ளது.

இவையாவும் 'குருவி' சுடக்கொள்வனவு செய்யப்படவில்லை...

சமாதானம் 'கடலில்' தான் தொலைந்துவிடப்போகிறது என்ற சந்தேகம் அரசின் நடவடிக்கைகளால் உறுதியாகியே வருகின்றது.

செங்குட்டுவன்

## மதவடி மயிலர்



**செய்தி :** *அமெரிக்காவுடன் இலங்கை அரசு ஆயுதக் கொள்வனவு ஒப்பந்தம்.*
**மயிலர் :** ஆயுதக்கொள்வனவு ஒப்பந்தங்களை மேற்கொள்வதில்காட்டும் தீவிரத்தை சமாதான -மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை அமுல்படுத்துவதில் அரசு காட்டுவதில்லை... போரைத் தீவிரப்படுத்த சாத்தான்களுடன் கூட கூட்டுச்சேரத்தயார் எண்டு கூறின ஆட்களின்ர வாரிசுகளுக்கு வேறையென்ன புத்திவரும் பாருங்கோ... சண்டியாய் எழுவது நொண்டியாய் விழத்தான்பாருங்கோ...

**செய்தி :** *இலங்கையில் சீ.ஐ.ஏ தலையீடு.... சாடுகிறார் சந்திரிகா....*
**மயிலர் :** இலங்கைக்குள்ள அமெரிக்க சீ.ஐ.ஏ க்காரர்கள் முழுதாக உடம்பையே நுழைத்து தங்கடை இருப்பைப்பலப்படுத்திக்கொண்ட பிறகு தான் அம்மா... தலையீடு என்று சாதாரணமாக கொக்கரிக்கிறா... இது ஒட்டகத்துக்கு கொட்டிலுக்க இடங்கொடுத்த கதைதான் பாருங்கோ... சந்திரிகா காலத்திலேயே தலையீடு தொடங்கீட்டுது... அப்பஅவா பேசாமைஇருந்திட்டு... இப்பதான் ஏதோ புதிசா நடந்தது மாதிரியெல்லே புலம்புறா....

**செய்தி :** *மீளக்குடியமர்வுக்கொடுப்பனவு செயலகம் உடனடி நடவடிக்கை...*
**மயிலர் :** செய்தியிலை தான் உடனடி நடவடிக்கை எண்ட அறிவிப்பு.... ஆனாக்கொடுப்பனவு தான் இழுபடுகிறது... அந்தக்கொடுப்பனவைப்பெறவும் கொடுப்பனவு இருக்கவேண்டும் என்று சலித்துக்கொள்வோரே அதிகம் பாருங்கோ...யந்திர கதியிலை உலகம்... மந்தகதியிலை நிர்வாகம் பாருங்கோ...

**செய்தி :** *நாடாளுமன்ற உறுப்பினர்களின் சுகபோகம்: 600 ரூபா உணவு 15 ரூபாவிற்கு வழங்கப்படுகிறது. வறுத்த கோழி இறைச்சியும் உள்ளடக்கம்...*
**மயிலர் :** சனங்களை வறுகிச்சேர்த்த பணத்திலை வறுத்த கோழியென்ன... பொரித்த யானையையும் கூடக்கொடுப்பினம் பாருங்கோ... ஆண்டி கோவணத்துண்டிற்கே அல்லாட... அரசன் பட்டுப்பீதாம்பரத்தில நடந்து திரிஞ்டசானாம்.

**செய்தி :** *ஆனந்த சங்கரியுடன் டக்ளஸ் தேவானந்தா விரைவில் சந்தித்துப்பேச்சு... சிங்களப் பத்திரிகை தகவல்...*
**மயிலர் :** ஆனந்தமான இருவரும் சந்தித்துப்பேசுவது தமிழ்மக்களுக்கு ஆனந்தம் தரும் ஒன்றாக இருக்காது பாருங்கோ....! என்ன தான் இருந்தாலும் சங்கரியார் சங்கதிகள் சந்தோசம் தருவதாய் இல்லை... தலைமையிலை இருக்கிறவை தலை தடுமாறக்கூடாது பாருங்கோ...

**செய்தி :** *இடைக்கால நிர்வாகம் தான் சமாதானத்தின் திறவு கோல். உலக வங்கிப்பணிப்பாளர் பீற்றர் ஹரால்ட் கூறுகின்றார்.*
**மயிலர் :** உலக வங்கிப்பணிப்பாளர் உலகம்அறிஞ்சவர் பிரச்சினையை விளங்கிப்பேசுகிறார்.... ஆனால் உள்ளூர் அரசியல்வாதிகளுக்கு அது விளங்கினால்தானே... அறிஞர்கள் முட்டாள்களுக்கு மத்தியில் உபதேசம் செய்யமுடியாது பாருங்கோ... முதலையும் மூர்க்கனும் கொண்டது விடாதெல்லே...

# வரலாறு எங்களை மன்னிக்கட்டும் என்பார்களா?



வரலாறு எவரையெல்லாம விடுவித்தது? எவரையெல்லாம் விடுவிக்கும்? இன்று பலருக்கு வரலாறு தான் விடுதலையின் வழியாகவும் வரலாறுதான் காக்கும் இரட்சகர்களாகவும் உள்ளது.

இது அன்றைய புரட்சித்தலைவராக இருந்து இன்றைய கியுப சனாதிபதியாக இருக்கும் பிடல்கஸ்ரோ முதல் இன்றைய வல்லரசு சகோதரர்களாக இருக்கும் புஸ் மற்றும் பிளயர் வரை பொருந்தும்.

எப்படி? அதாவது 1953ஆம் ஆண்டு யூலை 26ஆம் திகதி மொன்காடா இராணுவப்படைத்தளம் மீது தாக்குதல் மேற்கொண்டதாக குற்றம் சாட்டப்பட்டு நீதி மன்றில் நிறுத்தப்பட்ட பிடல்கஸ்ரோ கூறிய ஒரு வரலாற்று கூற்றினூடாக நாம் தொடரலாம்.

நீதி மன்றில் விசாரிக்கப்பட்ட பிடல் பின் வரும் புகழ்பெற்ற வரலாற்று கூற்றொன்றைக் கூறினார் ''வரலாறு என்னை விடுவிக்கும்'' என்று.

அன்று பிடல்கஸ்ரோவிற்கு வரலாறு தன்னை விடுவிக்கும் என்ற மனத்துணிவும், தான் தவறுசெய்யவில்லை என்ற நம்பிக்கையும் இருந்தது. அவர் துணிந்து கூறினார் வரலாறு என்னை விடுவிக்கும் என்று.

இன்று அதாவது மொன்காடா சம்பவம் நடைபெற்று ஐந்து தசாப்தங்களிற்குப் பின் இப்போதும் ஒருமுறை வரலாறு நீதியின் முன்நிறுத்தப்பட்டது எப்படி.

இதனை இன்றைய பிரிட்டிஸ் பிரதமர் டொனிபிளேயர் அவர்களின் கூற்றினூடாகப் பார்ப்பதே பொறுத்தமாக இருக்கும்.

ஈராக்மீது மேற்கொள்ளப்பட்ட படையெடுப்பிற்காக அமெரிக்க சனாதிபதி வில்லியம் டபில் யூ புஷ்சும் பிரிட்டிஸ் பிரதமர் டொனிப்பிளேயரும் சமர்ப்பித்த கூற்று தவறானால் "வரலாறு எங்களை மன்னிக்கட்டும்,, என்றார்.

அன்று பிடலிற்கு வரலாறு தன்னை விடுவிக்கும் என்ற நம்பிக்கை இருந்தது.

ஆனால் இன்றையபிரிட்டிஸ் பிரதமர் பிளேயரிற்கோ வரலாறு தன்னை தண்டித்துவிடும் என்ற பயம் இருக்கிறது.

**இலங்கையின் தலைநகர் முதல் எல்லையிலிருக்கும் சிங்கள கிராமங்கள் வரை தவறின் தண்டனைகளை சுமந்தாகிவிட்டது? இன்னும் சுமக்கும் தகு நிலையை அது இழந்துவிட்டது.**

ஆக வரலாற்றின் முன். நிறுத்தப்பட்ட இரண்டு குற்றவாளிகளின் வாக்கு மூலங்களாக அவை இருந்தன.

ஒருவர் வரலாறு நிரூபிக்கப்பட்ட நிரபராதியாக பிடல் மாறினார் பிளேயர் நிரபராதியென நிரூபிக்கப்படாத குற்றவாளியாக இருக்கிறார்.

இங்கு நீதிமன்றின் முன் நிறுத்தப்பட்ட பிடல் என்பது கியுபாவையே குறிக்கிறது. இதே போன்றே நீதியின் முன் நிறுத்தப்பட்ட புஸ்மற்றும் பிளேயர் என்பது அமெரிக்காவையும் பிரிட்டனையும் குறிக்கிறது.

## சிறி. இந்திரகுமார்

இங்கே இவை வரலாற்றின் பதிவாகி சரித்திரத்தின் நீட்சியின் சங்கதிகளாகிப் போகின்றவை.

இப்போது நாம் இந்தச் சின்னஞ் சிறு இலங்கைத்தீவிற்கு வருவோம்.

இந்த இலங்கைத்தீவை வரலாறு விடுவிக்குமா? அல்லது இலங்கைத்தீவை வரலாறு மன்னிக்குமா?

இந்த கேள்வி யூலை மாத முடிவில் கேட்கப்படுவதன் மூலம் இலங்கைத்தீவு விடுவிக்காத சில புதிர்களிற்கும் மன்னிக்கமுடியாத பல குற்றங்களின் கேள்வியாகவும் இருக்கிறது.

ஏனென்றால் இலங்கைத்தீவில் இருபது வருடங்களிற்கு முன் நடந்த படுகொலைகளிற்காக தென்னிலங்கையின் தாய்மாரும் புதல்வியரும். வரலாற்றில் மன்னிப்பு வேண்டிநிற்கின்றனர்.

அதாவது 1983ஆம் ஆண்டு தமிழ்மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைக்காக இலங்கைத் தாய்மார் மற்றும் மகள்மார் மன்னிப்புக் கேட்டுள்ளனர்.

இதேவேளை 1983 கலவரத்தின் உண்மை நிலையைகண்டறியவென அமைக்கப்பட்ட சனாதிபதி ஆணைக்குழு அந்த நிகழ்விற்காக தமிழ் மக்களிடம் மன்னிப்பு கேட்க வேண்டுமென பரிந்துரைத்துள்ளது.

எப்படி இருக்கிறது? இது ஒரு வரலாறு தந்த பாடம்தானே? இதன் விளைவு எப்படி இருந்தது?

இலங்கையின் தலைநகர் முதல் எல்லையிலிருக்கும் சிங்கள கிராமங்கள் வரை தவறின் தண்டனைகளை சுமந்தாகிவிட்டது? இன்னும் சுமக்கும் தகு நிலையை அது இழந்துவிட்டது.

இதன் அறுவடையாக திருவோடு ஏந்திய பிச்சைக்காரணாக காட்சி தருகிறது இலங்கை.

இது வரலாற்றில் இலங்கை இழைத்த தவறு. வரலாறு மன்னிக்காது கொடுத்த தண்டனையாகிறது.

இதற்குள்ளிருந்தும் இலங்கைக்கு அன்று எழுந்த ஒரே கனவு இன்றும் எழுகிறது.

இடிந்த இலங்கையின் பொருளாதாரத்தை நிமிர்த்தி சிறந்த இலங்கையாக அதாவது இன்னுமொரு சிங்கப்பூராக உருவாக்குவது.

**இலங்கைத்தீவில் இருபது வருடங்களிற்கு முன்நடந்த படுகோலைகளிற்காக தேன்னிலங்கையின் தாய்மாரும் புதல்வியரும். வரலாற்றில் மன்னிப்பு வேண்டிநிற்கின்றனர்.**

ஆனால் பங்கீட்டில் தமிழரிற்கான தகுநிலை வழங்கத் தயாரில்லாத மனநிலை.

பொருளாதார உரித்தில் உரியதை வழங்க விருப்பின்மை.

தமிழரிற்கு எதையும் வழங்காது. ஆனால்நாட்டின் தேசிய வளங்களில் எத்தகைய வளங்களாயினும் எவருக்கும் விற்பதற்குத் தயார்நிலை. இது தொடரும்வரை இலங்கைத்தீவு எப்படி சிங்கப்பூராக மாறும்?

உரியதை உரியவரிடம் கொடுக்கும் மனநிலை எழாதவரை இலங்கைத் தீவு சிங்கப்பூராக மாறாது குட்டித்தீவு இரண்டு நாடுகளாகவே மாறும்.

இது எதில் போய் முடியும். இதனை விளங்கிக்கொள்ள சிங்கப்பூரின் முன்னாள் பிரதமர் லீ குவான் யூ கூறிய ஒரு கூற்றின் ஊடாகவே விளங்கிக் கொள்வோம்.

"இலங்கை பொருளாதாரத்தை எட்டியிருக்கவேண்டிய ஒரு நாடாக இருக்க வேண்டியது. ஆனால் இப்போது பொருளாதாரத்தை தவறவிட்ட நாடாக இருக்கிறது'' என்கிறார்.

இலங்கைக்கு புலிகள் வழங்கிய வாய்ப்பையும் தவறவிட்டதாக இருக்கும்.

இப்போது லீ சொன்ன இலங்கை தவற விட்ட பொருளாதாரம் எல்லாம் இலங்கை விட்ட தவறுகளின் வடிவம்.

இன்றும் புலிகள் காட்டும்" அசாதாரன அமைதி நிலை முன்வைத்திருக்கும் மாற்றுத்தீர்வு



இவையெல்லாம் இலங்கை யின் மீட்சிக்கு புலிகள் வாக்களித்த வாக் குறுதிகள். ஆனால் இன்று அரங்கேறுமா? என்பது காலத்தின் பதிலாகவே காத்திருக்கிறது.

இதில் தவறிழைக்கப்பட்டால். அப்போது இலங்கையின் தலைவர்கள் வரலாறு எங்களை மன்னிக்கட்டும் என்பார்களா?

இதுவே இன்றைய கேள்வி. இதுவே நாளைய கேள்வியாகவும் மாறும். ●



# பொறுக்கி எடுத்த பூக்கள்

## ஒரு நிறைவான மனிதர்

"என்வாழ்க்கை மகிழ்ச்சிகரமாகவே உள்ளது. எனக்கு பொறாமை கிடையாது. எனக்குக்கிடைக்க வேண்டிய கௌரவத்திற்கு மேலாகவே நான் போற்றப்படுகிறேன் என்றே நினைக்கிறேன். என் சொல்லுக்கு ஒரு மரியாதை இருப்பதாக நம்புகிறேன். நிறைந்த வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கின்றேன் என்று சொல்வேன்."

-சுபமங்களா செவ்வியில்
உவமைக்கவிஞர் 'சுரதா'



## அனுபவம் என்றால்...?

"அனுபவம் என்பது நம் தலை வழுக்கையான பிறகு இயற்கை நமக்கு வழங்கும் சீப்பு-"

-பெல்ஜியம் பழமொழி

கல்வி ஒருவனை அறிஞனாக்குகிறது
அனுபவம் ஒருவனை மேதாவியாக்குகிறது.
-சீனப்பழமொழி

'அனுபவம்' எல்லா மனிதருக்கும் ஒரு நல்ல ஆசானாகவே இருக்கிறது... ஆனால் பலன் அந்த ஆசானிடமிருந்து கற்பதற்கு தவறிவிடுகிறார்கள். அதுவே துயரமானது.

ஒரு அனுபவக்குறிப்பு



## இளமையின் ரகசியம்

தோமஸ்மூர் என்பவர் ஓர் அறிஞர். அப்போது அவருக்கு வயது 60. இந்த வயதிலும் அவருக்கு ஒரு பழக்கம் இருந்தது. தினமும் அவர் தனது 85 வயதான முதிய தந்தையின் முன் போய் நின்று ஐந்தாறு தரம் துள்ளிக்குதித்து ஓடித்திரிந்து விட்டுவருவாராம்.

அவரது நண்பருக்கு ஏன் இவர் இப்படிச்செய்கிறார் என்ற சந்தேகம் வெகு நாட்களாகவே இருந்தது. ஒரு நாள் வாய் திறந்து கேட்டே விட்டார்.

அதற்கு அந்த மேதை -

'நான் இப்படி என் அப்பா முன்னால் போய் நின்று துள்ளிக்குதித்து ஓடித்திரிவதால் அவருக்கு மனதில் ஒரு தெம்பு உண்டாகிறது. ஆஹா என் மகன் இன்னமும் துள்ளிக்குதிக்கின்ற சிறு பிள்ளையாகத்தானே இருக்கின்றான். அப்படியானால் நமக்கொன்றும் அப்படி அதிக வயதாகிவிடவில்லை என உற்சாகம் அவருக்கு உண்டாகும். அதனால் இன்னும் நீண்ட நாட்கள்உயிரோடு இருப்பார்' என்றாரே பார்க்கலாம்....



## கடைசியாக ஒரு கவிதை



### ஜாடை

குழந்தை அம்மாவின் குரலில்
பேசுவதைப்போலிருந்தது.
இல்லை...
அம்மா தான் குழந்தையுடன்
பேசிக்கொண்டிருந்தாள்.

பா.வெங்கடேசன்

# இணைய நாதம்



தங்கள் சிகையலங்காரங்களை சரிபார்த்துக்கொள்ளும் கியூபன் சிறுமிகள் சான்கியாகோ டி கியூபா இல் இடம்பெற்ற கார்ணிவெல் அணிவகுப்பில் கலந்து கொள்வதற்கு முன்பு தங்களுடைய கரும்பு அறுவடைக்கு பின்பு கொண்டாடிக் கொள்ளும் இந்நிகழ்வில் கியூப சனாதிபதி பிடலும் கலந்து கொண்டார்.



சிலைபோல காட்சி தரும் இம்மனிதன் ஈடுபட்டிருப்பது சேற்றுக்குளியலில். கிரேக்கத்தைச் சேர்ந்த இவர் பிலிப்போயின் வடக்கு நகர் ஒன்றில அமைந்த சேற்றுத்தடாகத்தில் தனது உடலை ஓய்வு படுத்திக்கொள்கிறார். வருடத்தில் ஆயிரத்துக்கும் அதிகமானோர் பங்கு கொள்ளும் இச்சேற்றுக்குளியல் அதிகம் நரம்பியல் சார்ந்த நோய்களை குணமாக்குவதுடன் உடைந்த எலும்புகளையும் குணப்படுத்துவதாக கருதப்படுகிறது.

பயனுள்ள இணையத்தள தளங்கள்
www.google.com
www.goole.com
www.yahoo.com



அவுஸ்ரேலியாவினுடைய புதிய தயாரிப்பான சூரியகல அயுரோரா வேகிக்கிள் அண்மையில் ஜப்பானுடைய சுசகா நகரில் இடம்பெற்ற சர்வதேச பந்தயம் ஒன்றில் ஓடிக்கொண்டிருக்கின்றது. 8மணித்தியாலங்கள் நீடித்த இந்த பந்தயம் FIA மாற்று 'வலுக்கள்' கிண்ணத்துக்காக இடம்பெற்றது. இந்நிகழ்வில் 27 வரையான சூரியசக்தியில் இயங்கும் கலங்கள் பங்கெடுத்தன.



வரலாற்று பெருமைமிக்க வைரக்கல் ஒன்று இது றொபேட் லைவ் என்ற இந்தியருக்கு சொந்தமானது. இவர் வெங்காலின் கவர்னராகவும் இருந்தவர். இவ் வைரத்துனுடைய பெறுமதி 01,040,000-1360,000 அமெரிக்க டொலராகும். அண்மையில் இவ்வைரம் லண்டனில் கிறிஸ் ரைஸில் பார்வைக்காக திறந்து வைக்கப்பட்டது. இதுசெப்ரம்பர் 24 இல் கிறிஸ் ரைஸில் இடம்பெறும் இந்தியக்கலைப்பொருள் காட்சியில் வைக்கப்படவி ருக்கிறது.

# நன்றி நவில ஓர் நாள்

"எந் நன்றி கொண்டார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு"

—அல்பேர்ட் பெர்னாண்டோ

இன்று நேற்றல்ல. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே திருவள்ளுவர் திருவாய் மலர்ந்தருளிய வேதமிது.

அமெரிக்கர்கள் வருடத்தில் ஒரு நாளை நன்றி சொல்ல ஒதுக்கியிருக்கிறார்கள். அதற்காக மற்ற நாளில் அமெரிக்கர்கள் நன்றி சொல்ல மாட்டார்களா? என்று யாரும் கேட்டுவிடாதீர்கள். அமெரிக்கர்களிடமிருந்து அதிகம் கற்றுக்கொள்ளவேண்டும். அமெரிக்கவாழ் தமிழர்கள் உட்பட இந்தியர்கள் ஒருவரை ஒருவர்நேருக்கு நேர் சந்திக்க நேர்ந்தால் கூட பார்க்காத மாதிரி ஒதுங்கியும், முகத்தைத்திருப்பிக்கொண்டும் செல்வதை பெரும்பாலும் அமெரிக்காவில் காணமுடியும். அதே நேரத்தில் அறிமுகமில்லாத ஒரு அமெரிக்கர் ஒருவரை ஒருவர் சந்திக்க நேரிட்டால் ஹலோ...ஹாய் என்பார்கள். எப்படி இருக்கிறீர்கள்? என்றெல்லாம் கூட விசாரிப்பதும், உதவி என்ற வகையில் அல்லாமல் ஒரு சாதாரண தகவலைச் சொன்னால் கூட நன்றி என்று நாலுமுறை நாவலிக்காமல் சொல்லுகிறவர்கள் அமெரிக்கர்கள்

வருடம் முழுக்க எங்களுக்காக உழைத்தீர்கள், உங்களுக்கு எங்கள் நன்றிகள்!முதலாளிகள், தொழிலாளிகளுக்கும் நிர்வாகம் தங்கள் ஊழியர்களுக்கும் ஒருவருக்கொருவர் நன்றி பரிமாறிக்கொள்ளும் நன்நாளாக, ஆண்டுதோறும் நவம்பர் மாதம் நான்காம் வாரத்தில் வியாழக்கிழமை அனுசரிக்கப்படுகிறது.

"உதவி" என்ற மூன்றெழுத்தைச்செய்யும் போதோ, பெறும்போதோ, அடிமனத்து வானில் உதயமாகும் மூன்றெழுத்துதான் "நன்றி" அந்த நன்றியை கொடுக்கிறவருக்கும் பெறுகிறவருக்கும்தான் எவ்வளவு பேரானந்தப்பெருவெள்ளம் மனதில் பொங்கிவழிகிறது. இன்றைக்கு அமெரிக்கா முழுமைக்கும் இந்த நன்றி நவிலப்படுகிறதற்கு காரணம்யார்? இங்கிலாந்து...! ஏன்?

இதற்கும் ஒரு பின்னணி உண்டு. அது என்னவென்று பார்ப்போமா?

**01**

# தெருவில் கிடந்த காதல் கடிதம்

நீண்ட நாட்களின் பின்பு கடவுளே உமக்கு ஒரு கடிதம் வரைகிறேன்.
அன்பின் கடவுளே,

என்னைப்பற்றி அறிய நீர் நலத்துடன் ஆவலாய் இருப்பீர் என எண்ணி இந்த மடலை எழுதுகிறேன். என் ஒவ்வொரு உறுப்புக்களிலும் ஊற்றெடுத்த உணர்வுகளை காற்றிலே கலந்த கனவுகளாக மிதக்கவிட்டு உம்மிடம் சமர்ப்பிக்கின்றேன். சரியானவள் மனதில் முட்டிக்கரை தட்ட கருணை புரிவாய். உருவமற்றஉணர்வுகளை சுமந்து கொண்டு விடிகின்ற எனது ஒவ்வொரு விடியலும் கணமேனும் கனிவு கிடைக்குமா என்று காற்றைப் பார்த்துக்கேட்கும் அந்த ஒரே கேள்வியை உனக்கும் சொன்னால் எனக்கும் ஆறுதல். "காற்றே உனக்குமா கருணையில்லை இந்த கனத்த இதயத்தின் கவலைகளைத் தாங்கிச்சென்று தூதுரைக்க"

என் மீது கரிசனைகொண்டவரே உமக்கு தொடர்ந்தும் எழுதுகிறேன். என் கண்களின் பார்வைக்குள் கானல் நீராகவே தெரியாத என்னவளின் உருவத்தை எண்ணிப்பார்க்க முடியாத பாசத்தின் பரிதவிப்புக்களுடன் பாழடைந்த கற்துண்டில் தலைவைத்து படுத்திருக்கும் எனது எண்ணத்தில் கடந்த கால நிகழ்வுகள் விம்பங்களாக விரிகின்றன. வாச றோசா மலர்கள் பதித்த பாதையிலே பயணித்த என் கால்கள் வதை றோசா முட்கள் மேலே நடக்கின்றன. பல கோடி சோகத்தின் வேதனைகள் இதயத்தைக்கோடிட்ட முகாம் கட்டகண்கள் கணமும் கங்கை நதியாக சிவக்கின்றன. "எனக்குப்புரிகின்றது உங்கள் வேதனையின் வெளிப்பாடுகள் " என கூட இருந்து கூறியவள் கூட்டை விட்டகன்ற கிளியாய் தோழிகளுடன் வானத்தில். நானோ பாதணிகள் அற்ற பாதங்களுடன்,கசங்கிக்கிழிந்த கந்தலுடன் பாழடைந்த கற்துண்டில் பறட்டைத்தலையுடன் படுத்துக்கிடக்கின்றேன்.

என் மீது கருணைகொண்ட கடவுளே இப்போது உனக்கு கடுகளவாவது புரியும். என் உள்ளக்கவலைகள் இடைவிடாது எழுதுகிறேன். இரங்கிக்கேட்பாய். நான் வழமான வாழ்வுபெறத்துடித்த போது வாழ்க்கைக்குள் நிறைவேறாத என் கனவுகள் நிஜம் கொண்ட மனச்சுமைகளின் நீள்கோடுகளாக நீண்டு கொண்டே செல்லுகின்றன. மகிழ்வுகள் என் மனதுக்குக்கிடைத்த மறுகணமே மண்ணாகிப்போகின்றன. துன்பங்களும் கவலைகளும் என் கனிந்த வாழ்வை கண்ணீராக்கவே என்னுடன் காத்திருக்கின்றன. என் இதயத்தின் காயங்களை காலங்களாவது கரைக்கும் என நான் காத்திருந்தால் இந்தக்காலங்களே காய்ந்து போகும் கண்ணீரை என்னுள்ளிருந்து ஊற்றெடுக்க வைக்கின்றன. என்னவள் விபரிக்க முடியாத ஏக்கத்தின் தவிப்புகளோடு மூலையோரம் நின்று என்னில் உரிமை கொண்டாடிய அவளன்பின் அடிச்சுவடுகள் என் உள்ளத்திற்கு ஆறுதலை எடுத்துச்செல்ல கிடைத்த அவகாசம் எனக்கு நீடிக்காமல் போனதென்ன என்று நீண்ட மௌனத்தில் என்மனம்நிலைத்தது. கடவுளே என் கவலைகள் எல்லாம் இப்பொழுது நீர் கண்டிருப்பீர் என நான் நினைக்கிறேன்.

கருணைக்கடவுளே, சில காத தூரத்தில் இருந்து கேட்ட குயிலின் கூக்குரலில் என் நீண்ட மௌனம் கலைய கணீர்என எனக்குக்கிடைத்த செய்தியை உமக்கும் எழுதுகிறேன். நீ தலை வைத்து சாய்ந்த இந்தகல்லுக்கும் உரிமை கொண்டாட கனபேர் முண்டியடிப்பர். பாழாய்ப்போன வாழ்வை எண்ணி வானம் பார்த்து வாடிப்படுக்காதே. நீ ஏங்கித்தடுமாறு ஆவலாய் பார்க்கும் வானம் கூட உன்னை எட்டிப்பார்க்கும் காலமிது. சோகங்கள் உனக்குள் வட்டமிடுவதை உன்னால்தடுக்க முடியாது. நீ முயன்றால் உன் இதயத்துள் துன்பத்துண்டுகளால் முகாம் கட்டாமல் துண்டிக்கலாம். உணர்வற்ற இதயத்துடன், உறக்கமற்ற இரவுகளுடன், விடியலை நோக்கி விழி நீருடன் போராடிய உன் வாழ்க்கையை உடைத்தெறிந்து உலகைப்பார். வாலிபத்தின் வசந்தங்களுடன் வட்டமிட வேண்டிய உன் சிறப்பு வாழ்க்கையை விரக்தியின் சிறைக்குள் சிறகொடித்து வீணாக்கி விடாதே.

பொங்கி வரும் கடலுக்கும் சுற்றி வரும் சுழல் காற்றிற்கும் நீ நடுங்கினால் நடுக்கடலில் அள்ளிவர முடியுமா? எனவே வாழ்வு என்பது சவாலில்தான் கருத்தரிக்கின்றது. வாழ்க்கை என்பது போராட்டத்தில் தான் பிறக்கிறது. வரலாறு என்பது துணிச்சலில் தான் வளம் பெறுகிறது. கதிரவன் மறைவது மடிவதற்கல்ல. புத்துணர்ச்சியுடன் மறுபடியும் புலருவதற்கே. எனவே எதுவும் எதற்கெதற்கும் முடிவல்ல. முன்னேற்றத்தின் ஏணிகள் என்கிறது சரித்திரம். ஆனால் இவற்றை எல்லாம் ஏற்க மறுத்து ஏங்கித்தவித்து நிலை குலைந்து நிற்கிறது என் மனம். என் உணர்வுக்குமுறல்களை விரக்தியின் விம்மல்களாக உனக்கும், என்னவளுக்கும் புரியும் படி இந்த வரிகளில் வடிக்கின்றேன்.

"அலைகள் அடித்தாலும் உதைத்தாலும் கரை உருவம் மாறலாம் இடம் மாறுவதில்லை"

கடவுளே ஒரு வேளை நீர் நினைக்கலாம் நான் ஏன் உமக்கு இந்த மடலை வரைய வேண்டும்என்று. ஆனால் இந்தக்கடைசி வரிகளில் உமக்குத்தெளிவாகும். கடவுளே கடந்துசென்ற என் காலங்களில் கசப்புக்களை உன் காலடியில் காணிக்கையக்குகின்றேன். என் நிலை கடைக்கண் நோக்கி உரியவளிடம் பரிந்துரைத்து கடக்கப்போகும் என் காலங்களை கனிவாக மாற்ற கருணை புரிய இரந்து வேண்டி இந்த மடலைத்தூது விடுகின்றேன்.

ம.பிரான்சிஸ்க்

# விந்தையான உணர்வுகளும் விசித்திரமான குழந்தைகளும்



டெனி லண்டனில் பிறந்து வளர்ந்தும், பிசிறில்லாமல் தமிழில் சரளமா மழலை மொழியிலான தேர்ச்சியோடு சுட்டித்தனம் போடும் 5 வயதுகளே நிரம்பிய அற்புதக் குழந்தை.

வெளிநாட்டு வாழ்க்கையிலாய் இருக்க வேணும், இல்ல முதற்குழந்தை என்பதனாலோ என்னவோ புஷ்டியாய் மொழு மொழு என்று சுடர்விடும் மெழுகுவர்த்திபோல.

கம்பி முடி: பூனைக் கண்கள், வெள்ளைக் காரன் போல: கூர்மதி: காதுத் தூக்கணத்தைக் குலுக்கிக் கொள்ள விரும்புகிறவளாய், அதைக் குலுக்க கவனம் எடுக்கிறவளாய் இருக்கவேணும்.

டெனிக் குட்டி என் தங்கை மகள். சமாதான ஆசுவாசத்தைப் பயன்படுத்தி என்பதனை விட யுத்தநிறுத்த ஆசுவாசத்தைப்பயன்படுத்தி என்னைப்பார்க்க வந்திருப்பவள். 5 லட்சம் மக்களும் கால்போன போக்கில்போன இடப் பெயர்வோட பிரிந்தவர்கள். இப்பதான் சந்திக்கிறன்.

டெனிக் குட்டி ஆளைத்தெரியாமலே அழுங்காய் ஒட்டிக்கொண்டாள். பெரியம்மா பெரியம்மா என்று எத்தனையோ தடவைகள் சொல்லிக்குடுத்தும் ஆன்ட் என்று தான் அழைப்பேன் என்கிறாள்.

பெரியப்பா இல்லாமல் பெரியம்மா என்று அழைக்கமாட்டாளாம். என் தங்கைக்கும் இந்தக்கோபம் மாறேல்ல. எவ்வளவோ எடுத்துச் சொன்ன பிறகுதான் அவள் திருமணத்திற்கு சம்மதித்துப்போனாள்.

அக்காள் இருக்க தங்கை செய்வது தவறு என்பது அவள்வாதம்.

அவள் அன்பை அடகுவைக்க நான் ஒண்டும் சம்பிரதாயசாக்கடைக்க மூழ்கின அடிமட்ட முட்டாள் அல்ல.

அவள் தன் மனதுக்கினியானை தேர்வு செய்து கொண்டிருந்தாள். அவள் தேடல் போலவே அவள் அன்பிற்குரியவனும் மனமொத்தவன்.

நான் இடையில்...

என் தேடல் தொடர்ந்து கொண்டுதானிருக்கிறது சீதன பாதன பயோடேற்றாவோட அல்ல. மானசீகமான மனுசத்தேடல் கொண்டு பொருந்தினா பொருந்தும் இல்லத்தொடரும்.

சயிற் எடு என்று கட்டளை இட்டவள் நான் தான்.

டெனிக் குட்டி, ஏ போ அப்பிள் (A for Apple) என்று நான் சொல்லிக் குடுப்பதை ஆட்சேபித் துவிட்டு நோ ஆன்ட் நோ ஏ போ அட்டம் (No Atom) என்றாள்.

நானும் அவள் வந்த நாளிலிருந்து அவளை உன்னிப்பாய் கவனித்துக்கொண்டுதான் வாறன்.

எங்கட கற்றல், கற்பித்தல், எதிர்பார்ப்புக் களுக்கும் அங்கத்தே கற்றல், கற்பித்தல் எதிர்பார்ப்புகளுக்கும் இடைவெளிகள் அதிகம் எண்டு புரிகிறது.

குழந்தைகளின்ர உலகம் விசித்திர மானது. அதுகளின்ர உணர்வுகள் விந்தை யானவை. அவையளில பிழையா படம் வரைஞ்சிடக்கூடாது. பேந்து எந்த றேசராலும் அதை அழிக்கேலாமல்போடும்.

எங்களில வரையப்பட்டபடங்களால தானே நாங்கள் இன்னும் நலிந்து போயிருக்கிறம்.

அவையள அவையின்ர உலகத்தில விட்டு, நுணுகி ஆராய்ந்து நுட்பமா வழிப்படுத்த வேணும்.

உளவியல்ல கூட பட்டம் பெற்றிருக் கிறது தான் சிறப்பு.

குழந்தை ஆசிரியர்கள் கூடிய பயிற்சிகளைப்பெற்றிருக்கவேணும். கற்பித்தல் முறைமைகள், காப்புமுறைகள் என்று விசேட கவனம் செலுத்தி சிறப்புப் பயிற்சிகளைப்பெற்ற தகுதி வாய்ந்தவர்களாய் இருக்க வேணும்.

அவை இவையில்ல குறை சொல்லிக் கொண்டிருக்கின்றதை விட்டுட்டு நெருக்கடி நிலையைக் கவனத்திற்கொண்டு எல்லோருமே கவனமெடுக்கவேணும்.

அமெரிக்காவும்யப்பானும், நையிரியா வும்.... கண்டு பிடிப்புக்களை கலக்கு தெண்டா, கால்பதிக்குதெண்டா அமெரிக்கக்குழந்தை 05 வயதில இன்ரநெற்றில இணையுதெண்டா ஏன் மூக்கில விரலை வைப்பான்.

வளம் அப்பிடி, வாய்ப்புகள் அப்பிடி, போதிப்புகளும் அப்பிடியிருக்கையில் அதுகள் இமையத்தையும் இதயத்தையும் தொடுங்கள் தானே!

இது நாங்கள் தார் றோட்டையும் தண்டவாளங்களையும் கூட A-9 றோட் செப்பனிட முதல் கீறியல்லோ காட்டி விளங்கப்படுத்திக்கொண்டிருந்தநாங்கள்.

குழந்தை வளர்ப்பு, குழந்தைக் கற்பித்தல் வழிகாட்டல்கள், தயார்படுத்தல்கள் பல்வேறுபட்டபலதரப்பட்ட பயிற்சிநூல்கள், பயிற்சி வகுப்புக்களில கனக்கவேண்டாம் ஒரு 25%

யலில சிறப்புப்பட்டம் எனக்கு. படிப்பிக்கிறது தமிழை சிறப்பாய் எடுக்கிற மாணவர்களுக்கு.

என்னட்ட, என்னட்டப் படிக்கிற மாணவர்களிட்ட என்னெண்டு சிறப்பை எதிர்பார்க்கிறது!

தமிழைத்தான் விடுவம் என்ர தாய் மொழியாயும் தமிழ் மொழி இருக்கிறதால தமிழ் மொழியிலேயே கற்றுக்கொண்டதால சமாளிக்கிறன். அரசியலை. உளவியலைப் படிப்பி எண்டா என்ன செய்யிறது படிப்பிக்கலாம். பயிற்சிவேணும். 'பானைக்க போடமா அகப்பையில வாவெண்டா' என்னெண்டுவாறது...

நிலவரத்தைச் சொன்னா! விளங்க வேணும். விளங்காததுகளை என்ன செய்யிறது.

பெறுபேறு சிறப்பா வராதாபோது கேள்வி மட்டும் வரும். என்ன படிப்பிச்சுக் கிழிச்சனீர் எண்டு.

திருப்பிக்கதைக்க கனநேரம் செல்லாது. விளங்காததுகளோடவிளப்ப மில்லாம கதைச்சுக்கொண்டிருக்க விசர்தான் பிடிக்கும்.

"வினோ! மாற்றம் எடுத்துக்கொண்டு போ" எண்டு விளங்கினதுகள் சொல்லுதுகள்.

ஆனா அந்தாள் அனுமதி தராது. ஆசிரியர் பற்றாக்குறை அது இது எண்டு ஊரிப்பட்ட கணக்குக்காட்டும்.

'ஊசி போகும் இடம் பார்ப்பார், உலக்கை போற இடம் பாரார்' மாதிரி நிலமை. "பாவற்கொட்டை போட்டால் என்ன சுரக்கண்டே முளைக்கும்" எண்டு கறுவிக்கொள்ளத்தான் என்னால் முடிகிறது.

எல்லாத்தையும் அலசி ஆராஞ்சு பார்த்தால் அனுப்பப்படும் வரையில அனுசரிஞ்சு போனதை விடவேற என்ன வழி....

'கண் கெட்ட பிறகு சூரியநமஸ்காரம' மாதிரி இல்லாட்டிச்சரி என்று தோன்றுது.

என்ர அனுபவத்தில உந்தச்சிவப்புப் புள்ளிகள் பச்சை குத்தின மாதிரி ஆர் ஏன் எதுக்கெண்டில்ல குத்தினது குத்தினதுதான் நாசிகள் ஆரை விட்டு வைச்சவை...

நல்லதுகள் கெட்டதுகள் எல்லாத்துக் கும் நல்ல புள்ளிகள் விழுகிறது எண்டு மில்ல. விழாமல் போவதுமெண்டுமில்ல சந்தர்ப்பம் சூழல் சாதகமா இருந்தா எல்லாம் சாதகமா இருக்கும். இல்லாட்டி அம்போதான்.

வாழ்க்கையில சில சுழிகள் சுழற்று கிறபோதுதான் எல்லாத்துக்கும் மேல ஏதோ ஒரு சக்தி தொழிற்படுவதாய் பிரக்ஞை தோன்றுது.

சில மனிசர்கள் ஏனோ மனச் சாட்சியை வெட்டிப்புதைச்சுப்போட்டுதுகள் போல செயற் படுறதைப் பார்க்க அரியண்டமாயிருக்கும்.

அருவருப்பிலேயே எட்ட நிண்டுடுவன். ஒதுக்கம் கண்டு ஒதுங்கட்டும் எண்டு.

அம்மா அடிக்கடி சொல்லுவா,

பிள்ளை, கற்க கசடறக் கற்றவை கற்ற பின் நிற்க அதற்கு தக என்று.

நானும் எவ்வளவோ முயன்று போட்டன். ஆரும் புரிந்சுகொண்டாத்தானே! ஒரு கை தட்டினா சத்தம் வருமே! இரண்டு கையுமல்லோ சேரவேணும்.

## எட்வின்

வருவாய்க்கான தொழில் மட்டும் தான் எண்டா பேசாம தாற பணியை செய்துபோட்டு கோயில் மாடு மாதிரி தலையாட்டிக்கொண்டு என்ன செய்தாலும் எஜமான விசுவாசமாய் நன்றியுள்ள நாய் வலைக்குழைத்துக் கொள்கின்றதுபோல குரைந்துகொண்டால் வம்பில்லைத்தான். ஆனால், மனம் நிறைய மாட்டன் எண்டு அவஸ்த்தைப்படுத்துகிறது தான் குடைச்சலாக்கிடக்கு.

சிலவேளையில மனநிறைவும் மண்ணாங் கட்டியும்! ஏதோ தந்த பணியைச்செய்திட்டு மற்றையவை மாதிரி நானும் என்ரை பாடும் எண்டு இருந்திட்டாச்சோலியில்ல எண்டு தோன்றும் ஆனா என்ர கெட்ட குணம் அது நீடிக்காது.

அடுத்த கணமே எல்லாம் மறந்துபோய் புதிய ஒழுங்கு முறையில் புதிய யுத்திகள் தொடர்பாய் கதைக்க வெளிக்கிட்டுவிடுவன். உலகப் போக்கிலை இயல்வா ஒரு தேடல் அமைஞ்சு போச்சுப்போலை. மாற்றங்கள் எப்படியோ எனக்கு வந்து சேந்திடும். அப்படி வடிவமைக் கோணும். இப்படி வடிவமைக்கோணும் எண்டு எப்பவும் ஏதோ ஒரு திட்டம் விரியும்...

குழந்தைகள்தான் ஒவ்வொரு தேசத்தினதும் மாபெரும் சொத்து! எண்டது ஏன்தான் மற்றவைக்கு பதியிது. இல்லையோ...

சீனாக்காரன் நாங்கள் சின்னப்பிள்ளையளா இருக்கேக்க "மாஓ சேதுங்கின்ர" படத்தை அட்டைப்படமாப்போட்டு பளபள எண்ட வழு வழுப்பான தாளிலை அடிச்சு வெளியிடுறவன் சைன எழுத்து எங்களுக்குத் தெரியுமே! உறை போடுறதுக்கு அடிபட்டு வேண்டுகிறதுதான்.

இப்ப நினைக்க பெரிய ஆச்சரியமாய் இருக்கு. 8/=,6/=க்கு விற்க அந்தப் புத்தகம் என்னெண்டு

இருக்கே இஞ்ச.

சிறுவர்கள் போரில இணைகிறாங்கள் எண்டு மட்டும் தொண்டை கிழியக் கத்துறாங்கள்.

இந்த மண்ணில இருந்து அயல்நாடு களுக்கு அடிச்சுத்துரத்தப்பட்ட எத்தினை பிள்ளைகள் அத்தனை அவலங்களுக்குள்ளை யும் சாதனைகள் படைச்சுவருவதாய், செய்தி களைக்கேக்கிறம், பார்க்கிறம்.

வாய்ப்பு அப்பிடி வசப்படுத்துதுகள். வான்முட்டுதுகள்.

இது என்னடா எண்டா.. பொருளி

நீதி நியாயம், சத்தியம், உழைப்பு எண்டு சாகிறசனங்கள்தான் சல்லடை போடப்படுவதாய் உணர்ந்திருக்கிற.

சல்லடை எண்டதுக்காக சத்தியம் எண்டு வாழுறதுகளை அதுகளைக்கைவிடவும் முடியிதேல்ல

பேந்து மனச்சாட்சியே அதுகள படாத பாடு படுத்திப்போடும்.

ஒவ்வொருத்தனுக்கும் அவன்ர மனச்சாட்சிதான் நீதிபதியாயும் அதேநேரம் எதிரியாவும். நல்லவர்களுக்குத் தான் இதுவும் பொருந்தும்.

கட்டுபடியாகும்.

அவன்ரை வேலை அண்மையில தான் தெரிஞ்சுது. அந்த மனுசன் விபரம் சொல்ல எப்படியெல்லாம் செயற்படுகிறாங்கள் எண்டு ஆச்சரியமாயிருந்தது.

அட்டைப்படத்தில இருக்கிறதை ஆர் எண்டு விவேகமுள்ள பிள்ளை கேக்காமா விடுமோ! விபரம் கேக்க தன்ரை பாட்டில சீனான்ரை கொள்கை விதைக்கப்படும். தன்ர கொள்கையை உலகம் பூராகவும் பரப்பசீனா கையாண்ட தந்திரம் அது.

இப்ப ஆர்மிரேஜ் அக்காசி... அவையிவை எண்டும் நிறையப் பேர் வருகினம். நாங்கள் தான் விழிப்பாய் இருக்கவேணும்.

மக் ஆதர் படம் பார்த்தாக்களுக்குத் தெரியும். அமெரிக்க நேச நாடுகள் எண்ட போர்வையில நேசநாடுகளை காபாந்து பண்ணிறன் எண்ட போர்வையில எப்படியெல்லாம் பண்பா கௌரவமா நடந்து பசுபிக் தீவுகளை வசப்படுத்தி தன்ரை எகாதிபத்தியத்தை விரிச்சு தளம் அமைச்சுக் கொண்டது என்று.

ஜப்பானான ஜப்பானே விழுந்துது. இண்டைக்கும் அதிகமான மக்கள் அமெரிக்க விசுவசிகளா இருக்கிறதை மறந்து போடக் கூடாது.

இண்டைக்கும் தென்கொரிய ஆதரவு என்னெண்டு நினைக்கிறீங்கள். அப்ப விதைச்ச விதைதான் 2ஆம் உலகப் போர் காலம்எங்க நாங்கள் எங்க.

இப்பவும் எங்கட பிள்ளையள் யுனஸ் கோவன்ர நீல பாக்கோட போறதைப்பார்க்க கலக்கும். தவிர்க்கேலாத சூழல். ஆனா நிலப்பாட்டை சின்னனிலையே சொல்லி வைச்சுவிட வேணும்.

ஆரும் தன்ரை வீட்டு சோலி கிடக்க மற்றவன்ரை வீட்டு சோலிக்கு பரிகாரம் தேட முனைகிறான் எண்டா விழிப்பாய் இருக்க வேண்டாமோ.

விசையங்களை விபரங்களை விளங்கிக் கொள்ளுங்கோ.

உண்மைகளை சொல்லுறவனுக்கு காலம் இல்லை. உலக வரலாறுதான்.

அதுக்காக கண்ணை மூடிக்கொண்டு இருக்கேலாது தானே!

ஏன் ஆரம்பகால வரலாறுகளுக்குப் போவான். 1960களில் வாழ்ந்த எங்கடை முனியப்பதாசனை எடுத்துப் பார்ப்போமே.

அறியாமைகளை எடுத்துச்சொல்லி அற்புத உலகத்தை சிருஷ்ரிக்க வேண்டாம். இயல்பான வாழ்க்கையைப் புரிஞ்சு கொண்டு வாழும் இயல்பும் இழந்து அடிமையா! ஏதிரிகளா கண்டதே காட்சி! கொண்டதே கோலம் எண்டு வளமாய் வாழ சிறுசுகளிலேயே பழக்கப்படுத்திப் போடவேணும்.

கைகட்டி நிற்கப்பழக்கிப்பழக்கி அது வளர்ந்தும் தன்ரை உரிமைகள் அபகரிக்கப்பட்டதையே உணராமல் எது நடந்தாலும் நடக்கட்டும் எண்டு பார்த்திருக்க பழக்கப்பட்டுபோட்டுது.

தயவு செய்து உதுகளில கொஞ்சம் கவனம் செலுத்துங்கோ. தங்கட உரிமைகள் ஆளுமைகளை அதுகள் தாங்களா அறிவால அறிவியலால உணரவேணும்.

அந்தந்த நாடுகள் அரிச்சுவடிலேயே "ஏபோ ஆட்டம்" (அ -அணு) ஏ.போ அமெரிக்கா எண்டு சொல்லிக் குடுக்குது.

நாங்கள் இப்பவும்.

அ - அம்மா, இ - இறகு, த - தம்பி, து - தும்பி...

எப்பிடி உருப்படுங்கள்.

ஏன் அ - அணு எண்டுற மாதிரி இ - இம்ரான், த - தமிழீழம் து -துமிக்கி (துவக்கு) துணைப்படை வி - விண்கலம் எண்டு சொலிக் குடுக்க வருகுதில்லை.

எவ்வளவு பிள்ளையள் பல்கலைக் கழகம் வரை போய் படிப்பை பாதியிலே விட்டிட்டுப் போனதுகள்.

'பல்கலைக் கழகம்' அல்லோ! அது தான் பலதும் புரிய அதுகள் உதறிப்போட்டு ஓடியிருக்குதுகள்.

டெனி, டிஜிற்றல் றேடியோவை ஓண் பண்ணி என்ர சிந்தனையக்கலைக்கிறாள்.

'ஆனா அவன்னா இனா...

கசடதபற வல்லினமாம்

ஙஞணநமன மெல்லினமாம்

..............................

மங்கை நானும் ஆசைகொண்டு

..............................

வேடன் நானும் மானைக் கண்டு

மயங்கி திண்டு பேசும் பேச்சல்லோ...

..............................

அரிச்சுவடியில சொல்லிக் குடுக்குற படிப்பிலையே இது.... இப்பிடியெண்டா எப்படிஉருப்படும் எங்கட சமுதாயம்..:

பொன்னான மனம், மாசுறும் தோற்றங்களுக்குத் தாழ்ந்து குனிவதில்லை. - வில்லியம் ஷேக்ஸ்பியர்

# இரட்டையர்கள் எப்போது அதிசயமானார்கள்?

ஈரானின் ஒட்டிப்பிறந்த சகோதரிகளைப்பற்றியும், அவர்களைப் பிரித்தெடுப்பதற்காக முயற்சித்தபோது வைத்தியர்களின் முயற்சிகள் பலிக்காது அவர்கள் இறந்தது பற்றியும் உலகம் பூராகவும் அந்தச்சகோதரிகளுக்காக கண்ணீர் சிந்தியதையும் பற்றி. அந்த நினைவுகள் எம் மனத்திரையைவிட்டு சரியாக அகன்றிராத நிலையில் அது போன்ற ஒட்டிப்பிறந்த இரட்டையர்கள் பற்றிய கதைகள் மேலும் வெளிவரத்தொடங்கியுள்ளன.

நாங்கள் இங்கே பார்க்கப் போகின்ற 'சென்க்'மற்றும் 'என்க்' ஆகிய இரட்டையர்கள் தோன்றியது தாய்லாந்தில் என்றாலும் பிற்காலத்தில்அவர்கள் அமெரிக்கர்கள் ஆனார்கள்.

விதி என்பது என்ன? அதை எப்படி தீர்மானிப்பது என்ற வினாவிற்கு சரியானதொரு விடை இந்த இரட்டையர்கள் என்று சொன்னால் அது சரியானதே.

இந்த அனைத்துத் தடைகளுக்கும் ஊடாக பிள்ளைகள் இருவரும் நன்றாக வளர்ந்தார்கள். ஓடுதல், நீந்துதல், பாய்தல் என அனைத்திலும் ஈடுபட்டார்கள். 8வயதாக இருக்கும் பொழுது அவர்களது தந்தையார் மரணமானார்.இதனால் பொருளாதாரக்கஷ்டம் அதிகரித்தது. பிள்ளைகள் இருவரும் தாராயில் அதிகரிப்பு ஏற்பட்டதை தெரிந்துகொள்ளமுடிகிறது. முதல் மாதத்தில் 10 டொலராகவும், பின்பு 50 டொலராகவும் இறுதியாக மாத த்திற்கு 100 டொலராகவும் அவர்களுக்கு வழங்கப்பட்டன.

அவர்களுக்கு 21 வயதாகியபோது சுதந்திரமாக நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு அவர்களுக்கு சந்தர்ப்பம் கிடைத்தது. அமெரிக்க கலாச்சாரத்தையும் மொழியையும் கற்றுக் கொள்வதற்கு அதிக விருப்பத்தைத்தெரிவித்த அவர்களைப்பற்றி செய்திப்பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகின.

இரட்டையர்களில் இடப்புறம் இருந்தது சென்க். அவர் தனது சகோதரரைவிட உயரம் குறைவு. சென்க் எப்பொழுதும் கோபப்படுபவர். மற்றையவரை அதிகாரம் செய்வதற்கு

**வல்வையூரான்**

எப்பொழுதும் முயற்சி எடுத்தார். என்க் சமாதானமாக இருப்பதற்கு முயற்சிசெய்தார். அவர் வெளியில் உள்ளவற்றை தெரிந்து கொள்வதற்கு முயற்சிசெய்தார். இருவர்க்குமிடையில் வேறுபாடுகள் இருந்தாலும் ஒத்த தன்மைகள் அதிகம் இருந்தன. இருவரும் எதனைச்செய்தாலும் ஒரே விதமாகவே நடவடிக்கை எடுத்தார்கள். அவர்களது விருப்பு பல தடவைகளில் ஒருமித்திருந்தது. பழக்கங்களும் ஒன்றாய்இருந்தன. அடிக்கடி ஒருவர்க்கொருவர் கலந்துரையாடாவிட்டாலும் தீர்மானங்கள் ஒன்றாகவே இருந்தன.

விசேசமான குழந்தைகளாகையால் இந்த இருவர்களினதும் முன்னேற்றம் மற்றும் வாழ்க்கை முறைபற்றி அறிக்கைகளை வைத்துக் கொள்வதற்கு வைத்தியர்கள் முயற்சி செய்தார்கள்.அதனால் இருவரினதும் நிலவரம் அடிக்கடி பிரபல்யமானது. இந்த இருவரையும் பிரித்தெடுக்க முடியாதா என்றே அநேகபேர் கேள்வி எழுப்பினார்கள். அப்பொழுது இருந்த தொழில்நுட்பத்தின் பிரகாரம் அந்த இருவரையும் சிறிய வயதிலேயே ஆபத்துக்களின்றி பிரித்து எடுக்கக் கூடிய நிலவரம் இருந்தது. அப்பொழுது அமெரிக்க வைத்தியர்கள் இந்த இருவரையும் வைத்தியப்பரிசோதனைகளுக்கு உட்படுத்தினார்கள்.

1932ஆம் வருடம் சுதந்திர மனிதர்களாக வெளிவந்த தன்பின் மேலும் 7வருடங்கள் இருவரும் ஒன்றாக கண்காட்சிகளை நடத்தினார்கள். இந்தக்கண்காட்சிகளுக்கிடையே 'ஜேம்ஸ் கெலோவே' என்கின்ற வைத்தியர் விடுமுறையைக் கழிப்பதற்கு 'வில்கேஸ்பொறோ'வுக்கு வருமாறு அழைப்புவிடுத்தார். அந்த விடுமுறை இவ்விருவரினதும் வாழ்க்கையை மாற்றியது. சாதாரண மனிதர்கள் அதிகப்பேர்களோடு அறிமுகமாகிக்கொள்வதற்கு இயலுமாக இருந்ததோடு கண்காட்சியினை நடத்துவதைக் கைவிட்டு சுதந்திரமாக வாழ்க்கை நடத்துவதற்கு இருவரும் தீர்மானித்தார்கள். அப்பொழுது வடக்கு கெரோலினா பிரதேசம் விவசாயத்திற்குப்பெயர் பெற்றிருந்தது. இருவரும் விவசாயம் செய்துகொண்டு வாழ்க்கை நடத்துவதற்கு முடிவு செய்தார்கள். அவ்வேளையில் மிகவும் பணக்காரர்களாக அவர்கள் இருந்தமையால் ஆயிரம் ஏக்கர் காணியை விலைக்குப்பெற்று விவசாயம் செய்யத்தொடங்கினார்கள். இதற்கிடையில் அமெரிக்கப் பிரஜைகளாவதற்கு அவர்கள் விண்ணப்பித்தார்கள். (B) பன்கர் என்னும் அமெரிக்கப் பெயரை அவர்கள் பாவிக்கத்தொடங்கியது அதன்பின்பே. விவசாயத்தில் ஈடுபட்டபோதுதான் அவர்கள் எடிலயிடே மற்றும் செலியேட்ஸ் என்கின்ற இரு சகோதரிகளைப் பற்றி ஆர்வம் காட்டினார்கள். முதலில் எடிலயிடேவுடன் சென்க் காதல் தொடர்பு கொண்டார். அவர் சகோதரிகள் இருவரில் இளையவர். அப்பொழுது அவளுக்கு வயசு 17. அதன் பின்பு என்க் மற்றும்செலிக்கும் இடையில் காதல் பரிணமித்தது. ஆனால் திருமணம் பற்றிய பிரச்சினைகள் ஏற்பட்டன. மனிதர்கள் பலதையும் கதைத்தார்கள். யுவதிகளின் பெற்றோர் தொடர்பிற்கு எதிர்ப்புக் காட்டினார்கள். திருமணத்தின் பின் பிரச்சினைகள் பல ஏற்படும் என பலர் கூறினார்கள். ஆனால் காதலர்களது இணைப்பு பலமானது என்பதைத்தெரிந்து கொண்ட பெற்றோர் திருமணத்திற்கு அனுமதி கொடுத்தார்கள். இப்பொழுது அனைத்துப் பிரச்சினைகளுக்கும் ஒன்றாக ஒட்டி இருப்பதே காரணம் என எண்ணி வேறுவேறாக பிரிவதற்கு அவர்கள் தீர்மானித்தார்கள்.

இரகசியமாக(F) பிலிடெல் (F)பியா நோக்கிச்சென்ற இரட்டையர்கள்பிரித்தெடுக்கும் சத்திரசிகிச்சைக்கு ஆயத்தமானார்கள். ஆனால் சத்திரசிகிச்சை ஆரம்பிப்பதற்கு அதோ இதோ என்று இருந்த நேரத்தில் மனைவியர் இருவரும் தங்கள் கணவன்மாரை சத்திரசிகிச்சை செய்ய வேண்டாமென கேட்டுக் கொண்டார்கள்.

திருமணம் 1843இல் நிகழ்ந்தது. மணமக்கள் புதிய வீட்டில் குடியேறினார்கள். ஆனால் அதிக காலம் செல்வதற்கு முன்பே வீட்டில் இடவசதி போதாதிருந்தது. விவாகம் முடிந்து ஒரு வருடம் ஆவதற்குள் 'செலி' பெண் குழந்தை ஒன்றைப்பெற்றெடுத்தார். அதற்கு 6 நாட்களுக்குப்பின்பு எடியும் பெண்குழந்தை ஒன்றைப் பெற்றெடுத்தார்.

1860 இல் எடிக்கு7 பிள்ளைகளும் செலிக்கு 9பிள்ளைகளுமாக இருந்தார்கள்.

இந்தக் காலத்தில் எடி வேறாக வாழ்வதற்கு முடிவு எடுத்தார். சகோதரிகள் இருவருக்கிடையேயும் அடிக்கடி மோதல்கள் உண்டானதே அதற்குக்காரணம். இதனால் சகோதரர்களுக்கிடையேயும் மோதல்கள் உண்டாயிற்று. சென்க் அதிகமாக தனது சகோதரனைத்தாக்கினார். சென்க் அதிகம் குடிப்பதற்கும் ஆட்பட்டிருந்தார். எப்படியாயினும் இருவரும் தம் இருவர்க்காகவும் தியாகம் செய்ய நேர்ந்தது. மனைவிமார் வேறுவேறாக வசிப்பதனால் ஒரு வீட்டில் மூன்று நாட்கள் வீதம் வசிப்பதற்கு சகோதரர்கள் ஒப்புதல் அளித்தார்கள். அந்த சகோதரர்களுக்கு நேர்ந்தது இலேசான ஒரு காரியம் அல்ல்.

மனைவிமார் வேறுவேறாக வாழத்தொடங்கியவுடன் சொத்துக்களையும் பிரிப்பதற்கு சகோதரர்கள் தீர்மானித்தார்கள். அதற்குப்பிற்பட்ட காலத்தில் பணப்பிரச்சினை ஏற்பட்டபோது மீண்டும் கண்காட்சியை நடத்துவதற்கு இருவரும் தீர்மானித்தார்கள். 1849இலும் 1853இலும் கண்காட்சிகளை நடத்தினார்கள். 1860 இல் மீண்டும் கண்காட்சியை நடத்துவதற்கு தீர்மானித்த அவர்கள் கலிபோர்னியாவிற்குச் சென்றார்கள். 4 மாதங்கள் கண்காட்சியை நடத்திவிட்டு திரும்பியபோது வடக்கு கரோலினா மற்றும் தெற்குக்


சிறுபராயக்காட்சிகள்

இந்த இரட்டையர்கள் மிகவும் வறிய குடும்பம் ஒன்றிலே ஒட்டிப்



கண்காட்சி சுவரொட்டி

பிறந்து அமெரிக்காவிற்குச்சென்று உலகின் பிரசித்தி பெற்ற இரட்டையர்களாக, இடங்களுக்கு அதிபதிகளாக- செல்வந்தர்களாக திருமணமும் முடித்து பலகுழந்தைகளுக்கும் தந்தையர்களாகிய இவர்களைப்பற்றிய கதை புதுமையானதே.

அவர்கள் 1811 இல் பிறந்தார்கள். அந்த நாட்களில் சமூகம் முன்னேறிஇருக்கவில்லை. நம்பிக்கைகள் மற்றும் மதப்பற்றுகள் அவர்களது வாழ்க்கையின் பிரதான அம்சமாக விளங்கியது. இந்த இருவரையும் கண்டு பலர் அச்சப்பட்டனர். அந்தப்பிள்ளைகளுக்குப்பக்கத்தில் செல்வதற்கு விரும்பவில்லை. இராட்சதர்கள் பிறந்திருக்கிறார்கள் என மனிதர்கள் கூறினார்கள். மன்னர் குழந்தைகளைக்கொன்று விடுவதற்கும் ஆணை பிறப்பித்தார். ஆயினும் பிள்ளைகளது அதிஸ்டம் பிள்ளைகளைக்கொன்றுபோடுவதற்கு தாயார் அனுமதிக்கவில்லை. அரசன் தனது ஆணையை நிறைவேற்றவும் இல்லை. இதற்கிடையில்அந்த இரட்டையர்களைப்பிரித்தெடுப்பதற்கு முயற்சி செய்த வைத்தியர்களும் இருந்தார்கள். ஆனால் தாயார் அதற்கும் அனுமதிக்கவில்லை.

முட்டைகளை விற்றுச்சீவித்தார்கள். றொபேட்ஹன்டர் என்ற பிரித்தானிய வியாபாரி அந்தப்பிள்ளைகள் இருவரும் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த சமயத்தில் கண்டார். அவர் இவர்களது தாயாரிடம் பிள்ளைகளின் எதிர்காலத்தைப் பற்றி எடுத்துச்சொல்லி 3000 டொலர் செலுத்துவதாக வாக்குறுதியளித்து அவர்களை விலைக்குப் பெற்றுக்கொண்டார். ஆனால் தாயாருக்குக்கிடைத்ததோ 500 டொலர் மாத்திரமே.

அதன் பின் பல வருடங்கள்ஹன்டர் தனது அமெரிக்க நண்பனான கப்டன் அபெல்கொபின் என்பவரோடு இணைந்து, அந்தப்பிள்ளைகளைகண்காட்சியில் காண்பிப்பதன் மூலம் பணம் சம்பாதிக்கத் தொடங்கினர். அரங்குகளில் அந்த இருவரையும் கண்டுகளிப்பதற்காக வருகை தருபவர்களிடம் 50சதவீதம் வசூலித்தார். ஒரு நாளைக்கு நான்கு மணிநேரம் அவர்கள் காட்சிப்பொருள் ஆக்கப்பட்டார்கள். பிள்ளைகளுக்கு மிகவும் குறைந்த ஓய்வே கிடைத்தது.

1829 இல் பொஸ்டன் நகரில் இடம்பெற்ற கண்காட்சியைப்பார்ப்பதற்கு 61,000பேர் வருகை தந்ததாகவும், அங்கு அவர்கள் தங்கள் திறமையையும் சக்தியையும் காண்பித்ததாகவும் அறிக்கைகள் கூறுகின்றன.

இந்தக்கண்காட்சிகளினால் அவர்களுக்கு பலவிதமான தடைகள் ஏற்பட்டாலும் கேடுகள் விளையவில்லை. ஆனால் அவர்களது முகாமையாளர் அவர்களைச் சரியாகக்கவனிக்கவில்லை. அதில் ஒரு நிகழ்வானது, இரட்டையரை இங்கிலாந்துக்குக்கொண்டு சென்ற வேளை 'கொபின்' முதலாம் வகுப்பிலும் பிள்ளைகள் இருவரும்வேலைக்காரர்களின் பிரிவிலும் பயணம்செய்தார்கள். காலங்கள் கழிந்தபோது அவர்களுக்கு வழங்கப்பட்ட சம்பளமுறை


இரட்டையர்களின் இளம்பராயத்தோற்றம்


பிள்ளைகளோடும் மனைவிமாருடனும்சகோதரர்கள்(இரட்டையர்கள்)

(14ஆம் பக்கம் பார்க்க)

## அத்தியாயம் 07

**"இந்த மண் எங்களுக்கு கடவுள் மாதிரியடா. எங்களுக்கு நல்லது தான் தரும். நாங்கள் கஷ்ரப்பட்டால் அதுக்குத்தக்க பலன் கிடைக்கும். அதுக்காக இந்த மண்ணுக்கு நாங்கள் செய்யிற படையல் தான் இது."**

# தாமரைச்செல்வியின் பச்சைவயல் கனவு

வாய்க்காலில் தண்ணீர் பாய்ந்தோடிக் கொண்டிருந்தது.

வாய்க்காலுள்குள் மாடுகளை இறக்கிக்குளிப்பாட்டிக் கொண்டிருந்தான் சிவம். மயிலரிடம் காசு கொடுத்து வண்டில் மாடுகள் வாங்கியிருந்தார்கள் நல்லவெள்ளை மாடுகள்.

சிவத்துக்கு வாய்க்காலில் மாடுகளை தண்ணிக்கு விடுவதும் குளிப்பாட்டுவதும் முக்கிய வேலைகளாய் ஆகிவிட்டது. காய்ச்சல் வந்ததில் கொஞ்சம் மெலிந்து போயி ருந்தான். காய்ச்சல் நன்றாக குறைந்து அவன் கொஞ்சம் தேறியதும் தங்கள் வண்டிலி லேயே இருவரும் ஊருக்குப்போய் வந்தி ருந்தார்கள்.

ஊரில் நின்ற இரண்டு நாளும் ஆச்சியும் அன்னமும் ஒடியற்கூழும் புளிக்கஞ்சியும் காச்சிக்கொடுத்தார்கள். ஆசை தீரபுளிவெட்டையில் கிளித்தட்டு மறித்தான். சிவலையையும் வெள்ளையையும் தடவிக்கொடுத்தான். அவனுக்கு ஒருவித மரியாதை வீட்டில் இருந்தது.அப்பு முணுமுணுக்கவில்லை. உழைக்கிறபிள்ளை என்ற மதிப்பு அவனுக்கு திடீரென்று ஏற்பட்டது போலிருந்தது. இது அவனுக்கு மகிழ்வையே ஏற்படுத்தியது.

அதனால் மூன்றாம்நாள் அண்ணனோடு விருப்பத்துடனேயே புறப்பட்டு வந்தான். வேலாயுதம் வண்டிலில் அமர்ந்திருக்க அவன் கம்பு வைத்து மாடுகளை செலுத்தினான். எதிர்க்காற்று வெற்று மார்பில் மோதியபோதும் தலைகலைந்தபோதும் உற்சாகமாகவே இருந்தது. காய்ச்சல் வந்த உடனும் அழுததை நினைக்க இப்போது வெட்கமாக இருந்தது.

மாடுகளை வாய்க்கால் நீருக்குள்ளிருந்து கரைக்குக்கலைத்தான் அதே வாய்க்காலில் சிறிது தூரத்தில் நின்று நந்தாவதியும் அருநோசின் மனைவி மெனிக்காவும் தமது பிள்ளைகளுடன் குளித்துக்கொண்டிருந்தார்கள். இவர்கள் அநுராதபுரப்பக்கமிருந்து வந்தவர்கள் என்பதை அண்ணன் மூலம் அறிந்திருக்கிறான். எங்கிருந்து எங்கே வந்திருக்கிறார்கள் என்று அவன் ஆச்சரியப்படுவதுண்டு. இந்த நீர்ப்பாசனக்காணியை பண்டா வாங்கி ஏழெட்டு வருடமாகிறதாம். பண்டாவும் அருநோசுவும் நல்ல உழைப்பாளிகள். தங்கள் மனைவி பிள்ளைகளுடன் இந்தக் காட்டுக்குள் வந்து வசிக்க அவர்களுக்கு எவ்வளவு துணிச்சல் இருக்கவேண்டும் என்றும் அவன் வியப்பதுண்டு.

அவன் மாடுகளை சாய்த்துக் கொண்டுவந்து கொட்டிலுக்குள் கட்டினான். குடிசைக்கு பின்புறம் நின்று வயலைப் பார்த்தான். தூரத்தில் வேலாயுதம் மண்வெட்டியுடன் வரம்பில் நடப்பது தெரிந்தது. பயிரின் பசுமையும் அவை காற்றுக்கு அசைவதும் அழகாய் தெரிய இமைக்காமல் பார்த்துக்கொண்டிருந்தான்.

பயிர்கள் வளர்ந்து குடலை தள்ளி கதிர் பிடித்தது பொன்நிறத்தில் நெற்கதிர்கள் முற்றிச்சரிந்து நின்றன.

" தை பிறந்திட்டுது. நல்லநாளில புதிர் காய்ச்ச வேணும். வாற வெள்ளிக்கிழமை தைப்பூசம் வருகுது. அண்டைக்கு புதிர் காய்ச்சலாம்."

வேலாயுதம் நெற்கதிர்களை கொய்து எடுத்து வந்தான்.

ஒரு கட்டு நெற்கதிரை மாவிலையோடு சேர்த்து குடிசை வாசல் மேல்தடியில் கட்டினான். போன வருடம் கட்டிய நெற்கதிரும் மாவிலையோடு வாடிப்போய் பக்கத் தில் இருந்தது.

மிகுதிக்கதிரை கசக்கி நெல்லைப் பிரித்து எடுத்தான். ஓலைப்பாயில் பரவி முற்றத்தில் சிறிது நேரம் காயவைத்தான். நெல்லைக்குற்றுவதற்காக யோசித்துக் கொண்டிருந்தபோது நந்தாவதி தான் குற்றித்தருவதாக எடுத்துப்போய் குற்றி அரிசியாக்கி கொண்டுவந்து கொடுத்தாள். தைப்பூசம் அன்று வேலாயுதம் சிவத்திடம் பத்துசதம் கொடுத்து "மயிலற்ற கடையில கற்பூரமும் வெத்திலை பாக்கும் வாங்கி வா" என்றான். சிவம் காசு வாங்கிக்கொண்டு மாடுகளை வண்டிலில் பூட்டினான். "ஏன் வண்டில் எடுக்கிறாய் உதிலநடந்து போய் வாங்கி வாறதுக்கு" சிவம்தயங்கி நின்றான்.

"இல்லையண்ணை வண்டிலில போயிட்டு வாறன்" "சரிசரி போயிட்டுவா" தடுக்க மனம் வராமல் தலையசைத்தான்.

மாடுகள் சதங்கை ஒலியுடன் மண் தெருவில் நடந்தன. வண்டிலில் அமர்ந்து மாடுகளை விரட்டிக்கொண்டு பிரயாணம் செய்வதில் ஏற்படும் மகிழ்ச்சி தனியானது.

மத்தியான நேரத்து வெய்யில் சுள்ளென்று எரித்தது. பரந்தன் சந்தியில் இருந்த மயிலரின் கடையை நோக்கிப் போனான். இப்போது மேலும் ஒன்றிரண்டு கடைகள் தோன்றியிருந்தன. கடிதங்கள் அடங்கிய காக்கிப்பை தோளில் தொங்க காக்கித்துணியில் சேட்டுக்காற்சட்டை அணிந்த ஏரம்பு விசில் ஊதி கடிதம் கொடுத்துக்கொண்டிருந்தான். சந்திக்கு முன்னதாக ஒருநீளக்கொட்டிலில் தபால் கந்தோர் இயங்கத்தொடங்கியிருந்தது. மயிலரின்கடை வாசலில் வண்டிலை நிறுத்திக்குதித்து இறங்கினான். நாலைந்து ஆட்கள் மூட்டை முடிச்சுடன் கிழக்குப்பக்கம் திரும்பிய வீதியில் நடந்து போய்க்கொண்டிருந்தார்கள். சமீபநாட்களாய் பரந்தனில் மனிதர்களின் நடமாட்டம் ஓரளவு தென்படுகிறது.

அவன் கடைவாசலுக்கு போனபோது அவன் வயதையொத்த ஒரு இளைஞனுடன் மயிலர் கதைத்துக்கொண்டிருப்பதைப் பார்த்தான். சிறிது தயங்கி நின்றான். அவனிடம் திரும்பிய மயிலர்.

"என்ன சிவத்தான் என்ன வேணும்..." என்று கேட்டார்.

"கற்பூரமும்வெத்திலை பாக்கும் வேணும்"

" என்ன விசேசம்"

" இண்டைக்கு புதிர் காச்சிறம் அண்ணை"

"அட, தைப்பூசமெல்லே. விசேசம் தான். எட்டுச்சதம் தா."

உள்ளங்கை விரித்து எட்டுச்சதம் எண்ணிக்கொடுத்தான்.

கிடுகு வேய்ந்த சிறு கொட்டில். காட்டுத்தடிகளினால் வரியப்பட்ட தட்டுகளில்புகையிலை, பனங்கட்டி, ஒடியல், பனாட்டு ஒரு புறமும் சிறு சிறுசாக்குப்பைகளில் மல்லி,மிளகாய், உப்பு போன்றவையும் வரிசையாய் வைக்கப்பட்டிருந்தன.

" கொஞ்சம் பொறு காத்திகேசு. சிவத்தானுக்கு குடுத்திட்டுவாறன்." '

அப்போதுதான்சிவம் திரும்பி அவனைப்பார்த்தான்.

நாலுமுழவேட்டி கட்டி மேலே சேட்டு அணிந்திருந்தான். மெல்லிய மீசை. நெளி நெளியாய் தலைமயிர். கையில் ஒரு துணிப்பை வைத்திருந்தான்.

"இந்தத்தம்பி காத்திகேசு. இங்கால முரசுமோட்டையில இவைக்கு நீர்ப்பாச்சல்காணி கிடக்கு. முந்தி தகப்பன் வந்து வயல் செய்தவர். அவர் மோசம் போன பிறகு இந்தத்தம்பிதான் வந்து செய்யுது. சாவகச்சேரி ஆட்கள் இப்ப போற கரிக்கோச்சியில ஊருக்குப் போக வெளிக்கிடுறார்"

அவன் சிவத்தைப்பார்த்து சிரித்தான். ஏனோ பார்த்த முதல் பார்வையிலேயே அந்த முகமும் சிரிப்பும் சிவத்துக்கு மிகவும் பிடித்துப்போனது. சேட்டுப் போட்டிருந்த அவனை கொஞ்சம் மதிப்போடு பார்த்தான். இந்தக் காட்டுக்குள்தன்வயதைஒத்த ஒருவனைக் கண்டதால் ஏற்பட்ட மகிழ்ச்சியுடன் சொன்னான்.

" எனக்கு சிவப்பிரகாசம் பேர். முழுப்பேர் ஒருதரும் சொல்லிக்கூப்பிடுறேல்லை. எல்லோரும் சிவம் எண்டுதான் கூப்பிடுவினம்."

பிறகு கேட்டான்.

" இங்கயிருந்து முரசுமோட்டை கன தூரமா?"

"கிழக்குப்பக்கத்தால மூண்டு கட்டை போகவரும். நீங்கள் எங்க இருக்கிறீங்கள்."

" பரந்தன் சந்தியிலயிருந்து மேற்காக ஒண்டரைக்கட்டை போகவரும். அஞ்சாம் வாய்க்கால் எண்டு சொல்லுறது. கரிக்கோச்சி வெளிக்கிட்டிடும் வாங்கோ கொண்டு போய் ஸ்ரேசனில விட்டுவிடுறன்.

"கொஞ்சத்தூரம் தானே நான் நடந்து போறன்."

"இல்ல வாங்கோ கெதியாய் போயிடலாம்"

ஓம்மோனை பரந்தன் சந்தி தாண்டி விட்டுவிடுவான். களைச்சுக்கொண்டு போக வந்திடும்"

"சரியண்ணை. போயிட்டு வாறம்"

வண்டிலில் சிவம் ஏற அவனுக்கு அருகாக காத்திகேசுவும் ஏறிக்கொள்ள வண்டில் புறப்பட்டது. தங்களைப்பற்றியும் தங்கள் வீட்டாக்கள்பற்றியும் கதைத்துக் கொண்டே போனார்கள்.

காத்திகேசுவின் கதைகளைப் பார்த்தால் கொஞ்சம் வசதியுள்ளவனாய் தெரிந்தது. சாவகச்சேரியில் சின்னதாய் ஒரு கல்வீடு இருக்கிறதாம் சாவகச்சேரி விதானைக்கு சொந்தக்காரராம்.

ஒரு நாளைக்கு தான் ஐந்தாம் வாய்க்காலுக்கு அவர்கள் வீட்டுக்கு வருவதாகச்சொன்னான். அவனையும் முரசுமோட்டைக்கு வரச்சொல்லிக் கேட்டுக் கொண்டான். ஸ்ரேசன் வாசலில் வண்டில் நின்றது.

" கரிக்கோச்சி நிற்குது கொதியாய் போய் ஏறுங்கோ"

காத்திகேசு அவனைப்பார்த்து சிரித்துத்தலையாட்டிவிட்டு உள்ளே போக அவன் வண்டிலைத்திருப்பினான். இவனை மாதிரியே தானும் சேட்டுப்போட்டுக்கொண்டால் நன்றாய் இருக்கும் என்று நினைத்துக் கொண்டான்.

சிவம் வீடு வந்த உடனும் சமையல் அலுவலைத்தொடங்கினார்கள். மண் பானையில் புதுஅரிசி போட்டு காய்ச்சி இறக்கி வைத்துவிட்டு நாலைந்து கறிகள் வைத்தார்கள். சமையல் முடிய பொழுது சாய்ந்து கொண்டு வந்தது. கதிர்கள் முற்றிச்சரிந்திருந்த வயலின் நடுவே மூன்று தடிகளை வேலாயுதம் கொண்டுபோய் முக்கோ ணமாய் நட்டான். வெள்ளை வேட்டித்துணியால் மூன்று தடிகளையும் இணைத்துக் கட்டினான். வீட்டுக்கு வந்து பெரிய வாழையிலையில் பச்சையரிசிச் சோறும் கறிகளும் போட்டு அப்படியே கடகத்துக்குள் எடுத்து வைத்து வயலுக்கு கொண்டு போனான். இன்னொரு வாழையிலை, மூன்று இளனி, வெத்திலை பாக்கு, வாழைப்பழம், கற்பூரம், தேசிக்காய் எல்லாவற்றையும் சிவம் எடுத்துக் கொண்டுபோனான்.



வயல் நடுவே வெள்ளைத்துணி கட்டியதடிகளின் மீது கடகத்தை வேலாயுதம் வைத்துவிட்டு முன்னால்இலை வைத்து வெத்திலை, பாக்கு, தேசிக்காய் எல்லாவற்றையும் அதில் வைத்தான். மூன்று இளனிகளையும் முகப்புச் சீவி நடுவே வைத்து அதன் மீது கற்பூரத்தை வைத்தான். சிவம் தேங்காய் எண்ணெயில் தோய்த்து பந்தம் கொழுத்தி இரு பக்கத்திலும் நட்டு வைத்தான்.

வேலாயுதம் கற்பூரம் கொழுத்தி விட்டு ஒரு வினாடி கண்மூடி நின்றான். பிறகு தாங்கள் திரும்பிவரும் வழி தவிர்ந்த மூன்று திசைகளையும் பார்த்து கூ... என குரல் எழுப்பிக் கூவினான். அந்த வெட்ட வெளியில் அவன் குரல் கலந்து தேய்ந்து மறைந்தது. காற்று குளிராய் வீசியது.

" வா, பிறகு வருவம்"

இருவரும் திரும்பி வீட்டுக்கு வந்தார்கள்.

சிறிது நேரத்தின்பின் மறுபடி வயலுக்குப்போனார்கள்.

கற்பூரம் எரிந்து முடிந்திருந்தது. பந்தங்கள் இன்னமும் எரிந்துகொண்டிருந்தன. முன்னால்நின்று கைகளைக்குவித்துக்கும்பிட்டார்கள்.

வேலாயுதம் கண்களை மூடித் திறந்தான்.

" இந்த மண் எங்களுக்கு கடவுள் மாதிரியடா. எங்களுக்கு நல்லதுதான் தரும். நாங்கள் கஷ்ரப்பட்டால் அதுக்குத்தக்க பலன் கிடைக்கும். அதுக்காக இந்த மண்ணுக்கு நாங்கள் செய்யிறபடையல்தான் இது."

சிவம் பந்தம் எரியும் வெளிச்சத்தில் வேலாயுதத்தைப்பார்த்தான். இவனுக்குத்தான் எத்தனை நம்பிக்கை. இந்த மண் எங்களுக்கு வாழ்வுதரும் என்று.

வேலாயுதம் கத்தி எடுத்து இளனிகளை வெட்டி இரண்டாய் பிளந்து வைத்தான். படையலுக்கு தண்ணீர் தெளித்து கடகத்தோடு எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு வீட்டுக்கு வந்தார்கள். " நீ போய் பண்டா அருநோசு வீட்ட சொல்லிப்போட்டு வா. முன்னால செல்லத்துரை அண்ணை வீட்டையும் சொல்லி விடு. அவையள் தங்கட புதிர் சாப்பிட்டிட்டினம். அதால எங்களோட வந்து சாப்பிடுவினம்."

சிவம் போய் சொல்லி விட்டு வந்த சிறிது நேரத்தில் எல்லோரும் வந்தார்கள்.

பக்கத்தில் கைவிளக்கு கொழுத்தி வைத்துவிட்டு வேலாயுதம் நிலத்தில் இலையை எடுத்து வைத்து சோறு கறி எல்லாவற்றையும் குழைத்தான். எல்லோரும் வந்து முன்னால் வட்டமாக அமர்ந்து கொள்ள எல்லோருக்கும் இலைகளில் வைத்த குழையலை சிவம் எடுத்துக்கொடுத்தான். பெரியஇலையில் மேலும் சோறு கறி போட்டு குழைத்து வேலாயுதம் கொடுக்க வாங்கி சிவமும் பக்கத்தில் அமர்ந்து கொண்டு சாப்பிட்டான். அந்த சோற்றுக் குழையல் மிகவும் ருசியாக தொண்டைக்குள் இறங்கியது.

"இந்தமுறை வேலாயுதனுக்கு நல்ல வேளாண்மை. நல்லாய் பொலிஅடிக்கும்."

செல்லத்துரை சொன்னதைக்கேட்டு சிவம் வேலாயுதத்தைப்பார்த்தான். அவன் முகம் மலர்ந்துபோயிருந்தது.

" இந்தமண் எங்களுக்கு வாழ்வு தரும்."

அந்த வார்த்தைகள் வெகுநேரத்துக்கு காதுகளில் இரைந்துகொண்டேயிருந்தது. (தொடரும்....)



பரிவும் தேவையும் மனித இனம் அனைத்தையும் சுற்றம் ஆக்கிவிடும். - எட்வின்ஆர்னால்ட்

சிறுகதை

# வெகுமதி



ஆதிலட்சுமி சிவகுமார்

மதியம் ஒரு மணி நாற்பத்தைந்து நிமிடம். புதுக்குடியிருப்பில் இருந்து அவளைச் சுமந்து வந்த பஸ் அவளை இறக்கி விட்டு- தெருப்புழுதியை வாரிக்கொண்டு போனது. அவள் மணல் ஒழுங்கையினூடே நடக்கத்தொடங்கினாள். போட்டிருந்த செருப்புகளையும் மீறி வெயில் கால்களை எரித்தது. தாகம் மேலிட்டது.

சந்தியில் கடைவைத்திருக்கும் மகனுக்கு மதியச் சாப்பாடு கொண்டு கார்த்திகேசு ஐயா எதிரே நடந்து கொண்டிருந்தார்.

'எங்க மேன போட்டு வாறாய்...?'

'புதுக்குடியிருப்புக்கு ஐயா.....'

'இண்டைக்கு நாளைக்கெண்டு மழை ஏமாத்துது.... வெயில் தாங்க ஏலாம சனம் சாகப்போகுது.... ஊ' கூகூ...'

'ம்.... மழை மட்டுமே ஏமாத்துது... மனுசரே மனுசரை ஏமாத்துகினம்...' அவள் கூறியது அவருக்குக் கேட்டிருக்க நியாயமில்லை. அவர் அவளை விலத்திப்போய்க்கொண்டிருந்தார்.

எதிர்க்காற்று குடையை அவளிட மிருந்து பறித்தெடுக்கப் போர் தொடுத்தது. இயன்றவரை முய ன்று, முடியாமற்போக, அவள் குடையை மடக்கிச்சுருக்கிக் கொண்டாள்.



வாசற்படியில் அம்மா குழந்தையுடன் அமர்ந்திருந்தாள். அம்மாவைக்கடந்து அவள் உள்ளேபோய் தொப்பென்று நிலத்தில் அமர்ந்தாள். மூத்தவள் சிந்து பாயில் தலகணியை அணைத்தபடி நித்திரையாயிருந்தாள்.

அவள் எதுவும் பேசாமல் சுவரிலிருந்த திருமணப்போட்டோவையே பார்த்துக்கொண்டிருந்தாள். அவளாக எதையும் சொல்லட்டும் என்று காத்திருந்த அம்மா பொறுமை இழந்து போய்.

'அவையள் என்ன சொன்னவை பிள்ளை?...'என்று கேட்டாள்.

'அவையள் என்னத்தைச் சொல்லிறது?... ஆளைப்பிடிச்சு வைச்சிருக்கினம்....... எவ்வளவோ புத்திமதி சொல்லிச்சினம்..... குனிஞ்ச தலை நிமிராம இருந்தார்....'

அம்மா மௌனமாக இருந்தாள்.

'நீ என்ன சொன்னனி?...'

'பிள்ளையளையும் என்னையும் விட்டிட்டு எப்பிடி உங்களாலை இருக்கமுடியுது?... பிள்ளையள் அப்பா.... அப்பா... எண்டு அழுதுகள்.... நான் உங்களோடை சண்டை பிடிச்சனானா?... எண்டு கேட்டன்.... வாங்கோ வீட்டை போவம் எண்டன்...... அசையாம இருக்கிறார்...'

தாயின் கண்களில் இருந்து கண்ணீர் பொலு பொலுவென விழுந்தது. அவள் எழுந்து உள்ளே போனாள். அறைக்குள்ளும் அவளும் அவனும் எடுத்துக்கொண்ட திருமண போட்டோ மணக்கோலத்தில பெரிய மீசையுடன் பற்கள் தெரியச் சிரித்தபடி அவன். அவளுக்கு உயிரைப் பிழிவதாயிருந்தது இப்போது.

அவன் சந்திக்குச் சற்றுத் தொலைவிலிருந்த மினி திரையரங்கில் காசாளராக வேலை செய்துகொண்டிருந்தான்.

அவளுடைய சினேகிதி பாமினியின் பதினெட்டாவது பிறந்த நாளுக்குமிக நெருங்கிய சினேகிதிகள் ஆறுபேரை படம் பார்க்க அழைத்துச் சென்றாள்.

அப்பொழுதுதான் அவனை அறிமுகம் ஏற்பட்டது. அந்த அறிமுகம் வளர்ந்துகொண்டிருந்தது. அவனுடைய பெற்றோர் இராணுவக்கட்டுப்பாட்டுப்பகுதிக்குள் இருந்தார்கள் . அவன் அங்கு செல்லப்பயந்து உறவினர்களுடன் தங்கி இருந்தான். ஏலெவல் வர்த்தகப் பிரிவில் படித்துக்கொண்டிருந்தவன், வீட்டுக்காரரின் தொடர்பு முற்றாக அற்றுப்போக திரையரங்கில் வேலைக்குச்சேர்ந்தான்.

அவனுடைய அறிமுகம் வளர வளர அவளுக்கும் படிப்பில் நாட்டம் அருகிக்கொண்டு வந்தது. அவனுக்கும் அவளுக்குமிடையிலான காதல் ஊரெங்கும் பற்றி எரிந்து அம்மாவிடம் வந்தபோது அம்மா துடித்துப்போனாள்.

அப்பா இறந்து முழுதாக ஒருவருடம் நிறைவுறாத நேரத்தில் அவளின் காதல் அம்மாவுக்குப் பேரிடியாகிப்போனது.

'அப்பாவும் எங்களை விட்டிட்டுப்போட்டார்.... நீ தானே குடும்பத்திலை மூத்தனி.... நீ ஒழுங்கா இருந்தாத்தானே அதப் பாத்து தம்பி தங்கச்சியளும் ஒழுங்கா இருக்கும்....'

அம்மாவைப் பொறுத்தளவில் காதலிப்பது என்பது ஒழுக்கக் கேடானவிடயம். அப்படித்தான் அம்மா வளர்ந்திருந்தாள்.

'மற்றப் பெடியள் மாதிரி யில்லையணை அவர்.... நல்லவர்... எங்கட குடும்பநிலமையெல்லாம் தெரியும்... அவருக்கும் இஞ்ச ஒருத்தரும் இல்லை.... மனுசருக்கு மனிசர் அன்பாயிருக்கிறது பிழையே....' அவள் அம்மாவுக்குக் குழையடித்தாள்.

அவன் ஒரு நாள் வீட்டுக்கு வந்தான். அப்பாவின் ஆண்டுத்திவசம் நெருங்குவதால்- உறவுகள் திக்குத்திக்காய் சிதறிப் போன நிலையில் அம்மாவுக்கும் ஒரு கைஉதவி அவசியமாயிருந்தது.

அவன் ஓடிஆடி அப்பாவின் ஆண்டுத்திவசத்தை முன்னின்று நடத்தினான், காலம் தோறும் அந்தக்குடும்பத்துடனேயே வாழ்பவன் போல. அம்மாவுக்கு அவனுடைய சுறுசுறுப்பும், நிதானமும் பிடித்துப்போயிற்று. தம்பி தங்கைகள் அவனுடன் ஒட்டிக்கொண்டார்கள்.

சாப்பிட வந்தவர்கள் அவனைக் கேள்விக்குறியுடன் பார்த்த பொழுது 'என்ர மருமகன்.... மைதிலியைக் கட்டப்போறார்...' என்று நெற்றிக்கு நேரே பதிலளித்தாள். அம்மா.

'இப்ப கலியாணத்துக்கு என்ன அவசரம்... மைதிலிக்கு பதினேழு வயது தானே.... ஆகச் சின்னவயதிலை கலியாணம் கட்டுறது கூடாதெண்டெல்லே டொக்டர்மார் சொல்லுகினம்...?"

முரசு மோட்டை அன்ரி அம்மாவிடம் கேட்டா.

'பெடியன் வீட்டை நெடுகலும்வந்து போறான்... இப்பிடியே விடுறது நல்லதில்லை.... அயலட்டைச் சனமும் நாலுகதை கதைக்கப்பாக்கும்... நானும் ஆம்பிளைத்துணை இல்லாதனான்...'

அவனுக்கு யாரும் இங்கில்லாததால் மிகவும் எளிமையாகத் திருமணம் நடந்தது. நாலைந்து சினேகிதர்கள் மட்டும் வந்திருந்தார்கள். அவன் அவளின் மேல் உயிராக இருந்தான்.

'இந்த அநாதைக்கு.... அன்பெண்டாளென்னவென்று உணர வைச்சது நீ ஒருத்திதான் மைதிலி...' என உருகுவான். தினமும் மாலைப் பொழுதுகளில் கோயில், குளமென்று கூட்டிச்செல்வான். அவனே ஒரு குழந்தையாகிக் குதூகலிப்பான். அவளை அவன் பிரிந்திருக்கும் நேரமென்றால் திரையரங்கில் பணிசெய்யும் நேரம் மட்டுமாகத்தான் இருந்தது.

'நீ எப்பவும் இப்பிடியே சந்தோசமாக இருக்கவேணும் மைதிலி...' இது அவன் அடிக்கடி சொல்லும் வார்த்தைகளாயின.

'நாங்கள் போன பிறப்பிலை செய்தபுண்ணியத்தாலைதான் இப்ப இப்பிடி ஒரு பெடியனை ஆண்டவன் எங்களுக்குப் பரிசளித்திருக்கிறார்...' அம்மா அவனையும் அவளையும் பார்த்துப் பரவசப்பட்டுப்போவாள்.

திருமணமாகி வருடம் ஒன்று பூர்த்தியாவதற்குள் அவள் முதலாவது பெண்குழந்தையைப் பெற்றுக்கொண்டாள். அவன் குழந்தையைப் பார்த்துப் பார்த்துப் பூரித்தான்.

'குட்டி மைதிலி... குட்டி மைதிலி...' என்று கொஞ்சினான். குழந்தைக்காக கடையிலிருந்த பொருட்களையெல்லாம் வாங்கிக் குவித்தான். அவனுடைய அன்பில் அவளும் குழந்தையும் திளைத்துப் போனார்கள்......

மிக விரைவில் அவள் இரண்டாவது குழந்தைக்கும் தாயாகிப் போனாள். இருபது வயதில் இரண்டு குழந்தைகள். சினேகிதிகள் அவளைக் கேலி பண்ணினார்கள்.

குடும்பம் பெரிதாகிவிட்ட தால்திரையரங்க வேலைமட்டும் வருமானத்துக்குப்போதாமற் போக- பகலில் வேறு வேலைகளுக்கும் அவன் போகத் தொடங்கினான். பாடுபட்டு, உடம்பை வருத்தி அவளுக்கும், குழந்தைகளுக்குமாக உழைத்தான்.

கால ஓட்டத்தில்.... சமாதான சூழல்... அவனுக்குள் ஒளிந்திருந்த தாய்ப்பாசம் எட்டிப்பார்க்கத் தொடங்கியது. ஊரிலிருக்கும் அம்மாவுக்கும் கடிதம் போட்டான்.

கடிதம் அனுப்பிய ஒன்பதாவது நாள். ஒருமதியப்பொழுது. அம்மா உறவினரின் செத்தவீடு ஒன்றுக்காக ஸ்கந்தபுரம் போயிந்தாள். மைதிலி மகனுக்கு குளிக்க ஊற்றிவிட்டு ஈரம் உலர்த்திக் கொண்டிருந்தாள்.

படலையைத்திறந்து உள்ளே வந்தவர்களை- அவனுடைய தாயும், தங்கையுமென ஊகித்துக்கொண்டவள். 'வாங்கோ....' என்று உற்சாகத்துடன் வரவேற்றாள்.

அவசர அவசரமாக மீண்டும் அரிசி போட்டு வடித்து உணவு கொடுத்தாள். 'அவருக்கு நெடுக உங்கடை நினைப்புத்தான் மாமி.... மாமா சுகமா இருக்கிறாரே .... குட்டித்தம்பி வளர்ந்திட்டானோ...' அன்பாக அரவணைத்தாள்.

'நீங்கள் வாறதெண்டு தெரிஞ்சிருந்தா அவரே முகமாலைக்கு வந்து கூட்டிவந்திருப்பார்.... இந்த வெயிலுக்கை அலைஞ்சு போனியள்...'

'மாமி... இஞ்ச பாருங்கோ... மூத்தவள் சரியா உங்கள மாதிரித்தான்.... அப்பாவில சரியான பாசம்.... அழக்குள்ளையும் அம்மா எண்டு அழுறேல்ல... அப்பா எண்டு தான் அழுறது.....'

மாலையில் அவன் களைத்துப் போய் வீடு வந்தான். வாசலில் புதிய செருப்புகளைக்கண்டு யாரோ வந்திருக்கிறார்கள் என்று தயங்கியவன், வந்திருப்பது அம்மாவும் தங்கையும் என்றவுடன வானத்தில் பறந்தான்.

தாய் அவனைக்கட்டிப் பிடித்துக்கொண்டு அழுதாள்.

'உன்ர வயசுக்காறப் பெடியளெல்லாம் உல்லாசமாத்திரிய..... நீ மட்டும் ஏன்ராசா..... சுமை சுமக்கிறாய்?...' என்று கொதித்தாள். கணவனுக்கும், மாமிக்கும், மைத்துனிக்குமாக அவள் மாலைத்தேனீர் தயாரித்துக்கொடுத்தாள்.

'நீ இப்படிப் போயிட்டாய்.... வயசுக்கு வந்த ரெண்டு தங்கச்சிகளையும் நானென்ன செய்ய?...'

அவனுடைய தாய் மீண்டும் மீண்டும் அழுதாள்.

மறுநாள் காலையில் அவர்கள் புறப்பட்டார்கள். அவனுடைய தங்கைக்கு அவள் புதிய சட்டை வாங்கிக்கொடுத்தாள். தேசிக்காய், கொய்யாப்பழம் என்று பிடுங்கிக் கொடுத்தாள். செவ்வந்தி நாற்றுகள் கொடுத்தாள்.

'மாமி, மாமாவை கேட்டதாகச் சொல்லுங்கோ.... கெதியில நாங்களும் ஊருக்கு வருவம்....' என்று மனநிறைவோடு வழியனுப்பினாள். அவன் அவர்களை பஸ் ஏற்றிவிட்டு வந்து வேலைக்குப் போனான்.

இப்பொழுது சில நாட்களாய் அவன் முன்பு மாதிரி இல்லை. வலிமைமிக்க தாயின் கண்ணீர் அவனை வாட்டுவதாக அவள் நினைத்துக்கொண்டாள்.

சரியாக அவன் உணவு உட்கொள்வதில்லை. உறங்குவது அதைவிடக்குறைவாக இருந்தது. வேலைக்குப்போவதுகூட அரிதாக இருந்தது. திரையரங்கில் போகாத நாட்களுக்கு காசு கழித்துவிட்டு சம்பளம் கொடுத்ததில் மிகவும் குறைந்தளவு பணமே அவன் கொண்டுவந்தான். அதுகூட சட்டைப்பையில்தான் இருந்தது.

அவனை நினைக்க அவளுக்கு அழுகைவந்தது.

'ஏன் பிள்ளை.... உனக்கும் அவருக்கும் ஏதும் பிரச்சினையே?..' அம்மா கூடக்கேட்டாள்.

'ஏன் ஒரு மாதிரித்திரியிறியள்?.... எனக்குச்சொல்லக்கூடாத அப்பிடி என்ன பிரச்சினை உங்களுக்கு?... சொல்லுங்கோ...... சொல்லுங்கோ' அவள் அழுதபடியே கேட்டாள்.

அவன் அவளையே பார்த்துக்கொண்டு இருந்தான். அவனுடைய தாடைகள் மெலிந்து ஒட்டியிருந்தன.

➡



# நூல்நோக்கு

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | செவ்வரளிப்பூக்கள் (கதைத்தொகுதி) |
| ஆசிரியர் | : | ந.கிருஸ்ணசிங்கம் |
| விலை | : | 140/= |

**செவ்வரளிப்பூக்கள்** நூலைப் பற்றி அறிவதற்கு முன்பு இந் நூலாசிரியரைப்பற்றி வாசகர்களும் அறிந்திருப்பது அவசியமாகின்றது. தமிழர் தாயகத்தின் வானொலியான புலிகளின் குரலில் பணிக்காக தன்னை இணைத்துக்கொண்டவர் தான் இந்நூலாசிரியர் ந.கிருஸ்ண சிங்கம்.

நல்ல ஒரு கலைஞன், சிறந்த நிகழ்ச்சித்தயாரிப்பாளன், பட்டறிவுள்ள படைப்பாளி, கலைத் துறையில் தனது கால்களை ஆழப் பதித்துள்ள இவர் புலிகளின்குரல் வானொலி சேவைக்காலத்தில் பல ஆரோக்கியமான படைப்புகளை வானலையில் அள்ளி வழங்கிய வர்.

தற்போது நோர்வே ஒஸ்லோ வில் புலம் பெயர்ந்து வாழும் இந் நூலாசிரியர் தாயகக் கனவோடு தனது கலைப்பணியினைத் தொடர் வது சிறப்பானதும் பாராட்டுதற் குரியதுமாகும்.

புலிகளின்குரல்வானொலி வெளியீட்டுப் பிரிவின் கன்னி வெளியீடாக மலர்ந்துள்ளதும் இந் நூலாசிரியரின் "செவ்வரளிப் பூக்கள்" சிறுகதைத்தொகுப்பே.

யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் கைலாசபதி கலையரங் கில் கடந்த 12.07.2003 அன்று தாயக மண்ணில் பிரசவமானது செவ்வரளிப்பூக்கள் தொகுதி.

ஒரு இலட்சிய வேட்கை யுடன் விடுதலையை நேசிக்கின்ற ஒரு மனிதனின் படைப்பை விமர் சனத்திற்கு உள்ளாக்குவதை விட உண்மையான மனிதர்கள் உயரிய இலக்கியங்களைப் படைப்பதை யிட்டு நாம் பெருமைகொள்ள வேண்டும்.

18 சிறுகதைகளை உள்ள டக்கியுள்ள இத்தொகுப்பில் வெளிவந்துள்ள படைப்புகள் ஒவ் வொன்றும் வெவ்வேறு உணர்வு களை வாசகர்களுக்கு வாசிப்பின் தூண்டுதலையும் ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை.

விடுதலைப் போராட் டத்தின் விழுமிய வடிவங் களை தாங்கியதாகவும் அதற்கூடாக ஆழமான உயிரோட்டமுள்ள படைப்பாக இருப்பது இதுவரை எமது கைகளுக்கு கிடைத்த படைப்புகளை விட சற்று வித்தி யாசமான சுவையுடையது என்பது வாசிப்பின் போது புலனாகின்றது.

தமிழர் தாயகத்தின் பல் வேறு கோணங்களின் அசைவு களையும் மொழி நடையினையும் படைப்பாளன் செவ்வரளிப்பூக் களில் புகுத்தியிருப்பதானது மேலும் மணம்வீச ஏதுவாக அமைந் துள்ளது.

விடுதலைப் போராட்டத்தின் அகமும் புறமுமான பக்கங்கள் படைப்பாளனால் ஆழ்ந்து அலசப் பட்டிருப்பது சிறுகதைத்தொகு ப்பின் சமநிலையை பேணுவதற்கு வாய்ப்பாக அமைந்துள்ளது.

படைப்பாளன் தாயகத்தி லும், புலம்பெயர்ந்தநடுகளிலும் உள்ள நடைமுறை வாழ்வியல் சிந்தனைகளை சம்பவங்களில் ஒன்றினைத்து படைக்கப்பட்டிருப்ப தானது உணர்வுமிக்கதாகவும், ஆழமானதாகவும் அமைந்திருக்கின் றது.

படைப்பாளனின் நேரடி அனுப வங்களின் பகிர்வு சிறுகதை ஒவ் வொன்றிலும் பிரதிபலிக்கின்றமை யானது தாயகப் படைப்பாளர் களுக்கும், புலம்பெயர்ந்த படைப் பாளர்களுக்கும் பல தகவல்களை தருவதும் சிறப்பானதுதான்.

படைப்பு திறனுக்கேற்ற கற்பனைகளுக்கு அப்பாற்பட்டு சிறு கதையூடாக இவ்வாறான விட யங்கள் பெறுவது வாசகர்களுக்கு சுவையானதாக அமைந்துள்ளது.

புலம்பெயர்ந்து தாயகக் நினைவுகளோடு வாழும் மக்க ளுக்கு தாயக நினைவுகளை மீட் டிக்கொள்ளவும் இது நல்ல ஆரோக்கியமான முயற்சி என்பது படைப்பாளனின் எண்ணக்கரு மலர்ச்சி இச்சிறுகதை தொகுப்பு.

இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ள "வெள்ளை தமிழிச்சி" படைப்பாளனின் ஆதியுயர் கற் பனை வெளிப்பாட்டின் வித்தியாச மான பிரதிபலிப்பு.

இது இப்படைப்பாளனின் இரண்டாவது வெளியீடு. புலம் பெயர்ந்துள்ள தாயகஎழுத்தாளர் களின் சிந்தனையையும், செயற்பாட் டையும் தூண்டிவிட இத்தொகுதி வழி சமைக்கும்.

இதனைத்தான் "ஊரின் வேரொன்று நோர்வேயில் பூக்கி ன்றது" என கவிஞர் புதுவை இரத் தினதுரை இப்படைப்பாளனுக்கு வாழ்த்துரை வழங்கி இருக்கின்றார்.

படைப்பாளர்கள் பலர்பல தடை தாண்டி உருவாக்கி வெளியிட் டுள்ள, இடம் பிடித்துள்ள வெளியீ டுகளின் வரிசையில் ந.கிருஸ்ண சிங்கத்தின் செவ்வரளிப்பூக்களும் மணம்வீசும் என்பதை உறுதிபடக் கூறலாம்.




ஆனாலும் ஒன்று இது வெறும் விமர்சனத்திற்கும், விளம் பரத்திற்குரியநூலல்ல. தாயக நினைவோடு புலம்பெயர்ந்து வாழும் ஒரு உணர்வு மிக்க படைப் பாளனின் இலக்கிய அர்ப்பணிப்பு

**எஸ்.வி.ஆர் கஜன்**

---

தோள்ப்பட்டைகளில் குழிகள் விழுந்திருந்தன. மீசை அலங் கோலமாய் வளர்ந்திருந்தது. ஓவென்று கதற வேண்டும் போல இருந்தது அவளுக்கு.

'சொல்லுங்கோ.... என்ன பிரச்சினை உங்களுக்கு?...' மீண்டும் அவள் கேட்டாள்.

'அப்பாவுக்கு ஏலாது... அம்மா பாவம்.... ரெண்டு குமர்ப்பிள்ளை யளை வைச்சுக் கொண்டு கண்ணீர் விடுறா..... உழைச்சுக் குடுக்க வேண்டியநான்... ஒண்டுமில்லாம கல்யாணம் செய்து என்ர சுயநலத் தோடை... எப்பிடி நிம்மதியா வாழுறது?...' அவள் அவனுடைய அந்தப் பதிலில் அதிர்ந்து போனாள்.

அவன் சயிக்கிளை எடுத் துக் கொண்டு வெளியே போனான். அவள் அப்படியே அமர்ந்திருந் தாள்.

போனவன் நாலைந்து மாதங்களாகியும் வரவில்லை. அவனை ஊரில் தாய்வீட்டடியில் கண்டதாக உறவினர் ஒருவர் கூற... அவள் அவனைத்தேடி குழந்தைகளுடன் ஊருக்குப் போனாள்.

'அவனோ.... அவன் இஞ்ச வரேல்லையே...'

படலையடியில் வைத்தே அவ னுடைய தாய் அவளைத்திருப்பி அனுப்பினாள். பசியுடனும் கவலை யுடனும் அவள் திரும்பினாள். அவ தூறான வார்த்தைகளையும் ஆறாத காயங்களையும் சுமந்துகொண்டு அவள் வீட்டுக்கு வந்தாள்.

'எவ்வளவு அன்பாயும் பாசமாயும் இருந்தவர்.... எப்பிடி மனம் மாறிப் போனார்?...'

அவளுக்குள் பெருத்த வியப்பாயி ருந்தது.

கடைக்குச் சாப்பாடு கொடுத்து விட்டு கார்த்திகேசு ஐயா வீட்டுக்கு வந்திருந்தார்.

'மேன... உவன் பெடியன்ர விஷ யத்தை கடையடியிலை கேள்விப் பட்டனான்...'

ஊர் முழுவதும் தமது குடும்பப் பிரச்சினை பரவிவிட்டதை அவரின் கதை மூலம் அவள் உணர்ந்து கொண்டாள். அவளுக்கு கண்ணீர் முட்டிக்கொண்டு வந்தது. வசந்த காலத்து மலராய் மணம் வீசிக் கொண்டிருந்த தன்வாழ்வில் இப்படி யானதோர் பிரளயம் ஏற்பட்டதை அவளால் ஏற்றுக்கொள்ள முடியா திருந்தது. சுவரில் தொங்கிக் கொண்டிருந்த திருமணப்புகைப் படத்தை அவள் பார்த்துக்கொண் டிருந்தாள். அவனுடன் வாழ்ந்த வாழ்க்கையின் பசுமையான நினை வுகள் அவளைச்சுட்டு எரிப்பன வாய் அவள் உணர்ந்தாள்.

'இப்ப அவன் என்ன சொல்லுறான் பிள்ளை?...'

'காவல்துறையில அறிவிச்சிருக்கு ஐயா.... அவை ஏதும் நடவடிக்கை எடுப்பினம் தானே...'

அம்மாதான் அவருக்குப்பதில் சொன்னாள்.

'நான் ஒண்டு சொல்லுறன் பிள்ளை... குடும்பத்திலை இவ்வ ளவு அன்பா இருந்தவன் இப்பிடி மாறிப்போனான் எண்டால்... இதிலை ஒரு சங்கதி இருக்குது பிள்ளை....?

'............................'

'ஆரோ இதுகளைப் பிரிச்சு வைக்க மருந்தோ, மந்திரமோ செய்திருக் கினம்... இல்லாட்டி....ம்.... அவன் எவ்வளவு நல்லபிள்ள....' 'ஓம ய்யா... நானும் அப்பிடித்தான் நினைக்கிறன்.... ஊரில இருந்து தாய்க்காரி வந்திட்டுப்போன பிறகு தான் ஆள் இப்பிடி மாறிப்போ னது...'

'பாத்தியே..... நீ அங்க இஞ்ச யெண்டு பிள்ளைய அலைய விடாம உதுக்கு ஏதும் அலுவலப் பார்.... மருந்தாலைமாறின மன த்தை மருந்தாலை தானே மாத்த வேணும்....'

'சமாதானம் வந்திட்டுது.... அவற்ற ஆக்களிட்ட போய்வரலாம்... எல் லாரும் சந்தோஷ்மா வாழலாம் எண்டு நினைச்சன்.... ஆனா எனக்கு கிடைச்ச வெகுமதி பிரிவுதானே....' அவள் உள்ளே குமுறினாள். தலை யைப் பிடித்துக்கொண்டு அழு கையை அடக்கமுயன்றாள்.

ஏணைக்குள் உறங்கிக்கொண்டி ருந்த கைக்குழந்தை வீறிட்டு அழுதது. அவள் எழுந்து குழந்தை யைத் தூக்கிக்கொண்டு பாலூட்டு வதற்காக உள்ளே போனாள்.

உள்ளேயும் திருமணக்கோல த்தில் அவன் அவளைப் பார்த்துச் சிரித்துக்கொண்டிருக்கும் புகைப் படம் தெரிந்தது.

---

# துயரத் துயரம்



களைத்துப் போன துயரத்தை
எழுந்து ஆடும்படி
விடாப்பிடியாக நிற்கின்றார்கள் சிலர்
எவ்வளவோ காலம் ஆடிய
மரணத்தை நெருங்கிய
வயது போன துயரம் அது

துயரத்தை ஆடவைத்து
அதன் மகிழ்ச்சியில் மூழ்கிப்போன
எத்தனையோ பேரின் கண்ணீரில்
கப்பலோட்டி காரியமாற்றி சிலர்
மகிழ்ச்சிக் கடலுக்குள்ளேயே
பரம்பரையை பெருப்பித்தவர்கள்

துயரம் களைத்துப் போனதை
ஜீரணித்துக் கொள்ள முடியாத சிலர்
குழந்தைப் பிள்ளைத் தனமாக
அடம் பிடிக்கின்றார்கள்
துயரத்தை எழுந்து ஆடும்படி

துயரம் இனி எழுந்தாடு மெனில்
அது பெருந்துயரத்தோடு ஆடும்
அது கண்ணீர் விடும்
கண்ணீர் ஆடவைத்தோரை
மீள முடியாதபடி மூழ்கடித்து
தானும் மரணிக்கும்.

**பொன்.காந்தன்**

# மௌனம் உலவுகின்றது



கரைகள் வெகுதூரம்
என்பதற்காக
அலைகள் தடுமாறிப் போவதில்லை!

பனி தூவுகின்ற
நீரினால்
மலைகள் மூழ்கிப் போவதில்லை!

அதர்மத்தின்
அழிவாற்றல் கண்டு
தர்மத்தின்
அறிவாற்றல் வணங்குவதுமில்லை!

இப்போ....
காலத்தின் சோதனை
நிகழ்கின்றது – அதனால்
மௌனம் உலவுகின்றது...!

**சிவலிங்கம் - தராசு**

# அது அல்லது கறுப்பு பற்றியது

எப்பொழுதும் கறுப்பு ஆடைகளை
நான்
அணிந்து கொள்வதை விரும்புவதில்லை.
அதற்கு துணிவு மில்லை
என் தாய் கறுப்பென்பதால் கூட
அவளோடு என் உறவுகள்
அவ்வளவாயில்லை
ஏனெனில
எனக்கு எப்பொழுதும் கறுப்பு
பிடிப்பதில்லை.
அது எனக்கு சோறு போட்டதில்லை
புத்தகம் தந்தது அல்ல
மாறாக
வாழ்வின் ஏக்கங்களை துண்டு
போடுகிறது.
என்னை விகாரப்படுத்த
முயல்கிறது.
என்பதால்....
கறுப்பு என்றுமே கொடியது
இருந்தும்,
சில கறுப்புகளின் சிதைவுக்கு
பின்னால்
வெளிர்ப்பு ஏற்படுவதை
என்னால் நம்பமுடிவதில்லை
அதிசயமாய் பார்க்கின்றேன்
அந்த உண்மையை.

**சாதுரியன்**

உலகத்தில் எனக்குத் தேவைப்படாத பொருட்கள் ஏராளமாய் இருக்கின்றன. – ஸாக்ரட்டீஸ்




## குட்டிக்கதை

# நிமிர்வால் இணைவோம்

வீணன் நான் எங்கட இடத்திற்கு நாளைக்குப் போறன். அப்ப இருந்த யாழ்ப்பாணம் எனக்குத் தெரியும். ஆனால் இராணுவம் யாழ்ப்பாணத்தை ஆக்கிரமித்ததுக்குப் பிறகு இப்பதான் போறன். அதுவும் எங்கட மாவீரர்களின்ர உயர்ந்த உயிர்த்தியாகத்தால சமாதானம் எண்டு வந்ததால்தான் போறன். இனி நான் தனிய, எனது நண்பனான நீ இஞ்ச வன்னியில, நான் அங்க யாழ்ப்பாணத்தில எவ்வளவு பாசமாய் எங்கட நட்பு வளர்ந்திட்டு. அதற்குப் பிறகு இப்ப இருவருக்கும் பிரிவு வந்திட்டுது. ஆனால், நட்பால் பிரியாமல் அங்கேயும் நான் இருப்பன்.

"என்ன வீணன் நீ அழுகிறாய்"

இல்ல மதுவன் எனக்கு இண்டைக்குத்தான் பிரிவின் துயரம் புரியுது. இது ஆழமானது என்பதை உணர்கிறன். இந்தப் பிரிவுக்கு காலந்தான் இட்டுச் சென்றது என்பதைப் புரிந்து கொள்கிறன். நாம் இருவரும் நட்பைத் தொடர்வம். இதுவரைக்கும் எனக்கு நீ விளங்காத பாடங்களை ஆசிரியர் புகட்டுவது போல ஊட்டினாய்.

''செல்வத்துள் சிறந்த செல்வம் கல்விச் செல்வம்'' என்றும் "இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்றும் பல உதாரணங்களுடன் எனக்குக் கற்பித்தாய்.



இனிமேல் எனக்குப் புத்திமதி கூறி கல்வியினைத் தொடர யார் இருக்கினம். சமாதானம் என்ற போலித்திரை வந்து மூடியதால நாம் இருவரும் பிரிந்து விடும் காலம் வந்துவிட்டது. இருவரும் மீண்டும் இணைவோம் என்ற நம்பிக்கையுண்டு.

வீணன் எமது நட்பு என்றும் அழிந்திடாது. நாம் உயிருடன் இருந்தாலும் சரி இல்லாவிட்டாலும் சரி எமது நட்பு இந்த ஈழமண்ணில் நிலைத்து நிற்கும். இந்தக்கணம் பிரிகிறோம். எமது பிரிவு கற்றலில் சிறந்தது நிமிர வேணும்.

**ஓவியன்**

# வாரம் ஒரு குறள்



எம்மில் பலர், அடுத்தவர்களுக்கு உபதேசம் செய்வதிலேயே ஊக்கம் செலுத்துகின்றோம். ஆனால் அதன்படி எவரும் நடந்து கொள்வதில்லை. அடுத்தவருக்கு உதவுங்கள் என்று சொல்கிறோமே தவிர அவர்களுக்கு உதவுவதில்லை. இந்த விடயத்தில் நீரை எடுத்துக்கொள்ளுங்கள். இந்த நீரைப்பாவித்து நாம் எமது கடமைகள் பலவற்றை முடிக்கின்றோம். உணவைச் சமைக்கப் பாவிக்கின்றோம். அதனாலாக்கிய உணவை உண்கின்றோம். அத்துடன் நீரையும் ஆகாராமாக்கிக் கொள்கின்றோம். உணவை உண்டாக்குவதற்கு உதவியாகித்தானும் உணவாகி நிற்கின்ற தன்மைபோல நாமும் அடுத்தவருக்கு நல்வழிகளைத் தெரிவிப்பதோடு நல்லவர்களாகவும் இருக்க வேண்டும் என்று உணர்ந்து கொள்ளலாம் அல்லவா.

இதற்கு இந்தக் குறளைப்பாருங்கள்.

**"துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித்**
**துப்பார்க்குத் துப்பாயதூஉம் மழை."**

## குறுக்கெழுத்துப் போட்டி 31

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | | 03 | | | 06 |
| 07 | 08 | | | | |
| | | | 16 | | |
| | | | 22 | 23 | |
| | | 27 | | | |
| 31 | | | 34 | | |

### இடமிருந்து வலம்

01. காடு.
07. வயல் சூழ்ந்த நிலம்.
16. வாரம் தலைகீழாக உள்ளது.
23. பழம்.
27. குழப்பத்திற்கு எதிரானது.
31. முக்கனிகளில் ஒன்று.
34. காட்டு மரம்குழம்பி உள்ளது.

### மேலிருந்து கீழ்

01. தேவலோகப் பசு.
03. வாழை இனங்களில் ஒன்று.
06. நெருப்பு.
08. வெண்மைக்கு எதிரானவை குழம்பி உள்ளது.
22. இளமைக்கு எதிரானவை குழம்பி உள்ளது.
23. இருப்பதற்கு பயன்படுவது.
27. கடலில் தோன்றுவது.

### குறுக்கெழுத்துப்போட்டி இல.29 இன் விடைகள்

**இடமிருந்துவலம்**

01. பாசம்.
05. மாதா.
07. கந்தன்.
13. வதந்தி.
23. ஆடு.
32. தீ

**மேலிருந்துகீழ்**

01. பாகவதர்.
02. சந்திர(ன்)
03. தந்திரம்.
06. தாலாட்டு.
16. தருமன்.
23. ஆண்டு.

**குறுக்கெழுத்துப்போட்டி இல.29 இன் பரிசுக்குரியவர்**

**த.சசிகலா, தரம் -11 பாரதிசிறுவர் இல்லம், வள்ளிபுனம்.**

**குறுக்கெழுத்துப்போட்டி இல.29இன் பாராட்டுக்குரியவர்கள்.**

01. s. யோகா, தொல்புரம் கிழக்கு, சுளிபுரம்.
02. இ.ஜெனத், தரம்-03, கிளி/இராமநாதபுரம் அ.த.க.பாடசாலை.
03. பா.அஜிர்தன், வெள்ளாங்குளம், மன்னா.
04. பா.தர்ஷன், C.C.T.M.S. வவுனியா.
05. சி.கதிர், புதுக்குடியிருப்பு.

இளையவர்களே!

மேலுள்ள கட்டத்தை வெட்டி சரியான சொற்களை இட்டு நிரப்பி தங்கள் பெயர் முகவரியை இணைத்து அனுப்புங்கள்.

குறுக்கெழுத்துப்போட்டி இல.31
**வெள்ளிநாதம்**
**ஈழநாதம்.**
முதன்மைச்சாலை,
கிளிநொச்சி.

# மாம்பழம்

**வண்ண வண்ண மாம்பழம்**
**வாய்க்கு ருசியாம் மாம்பழம்**
**உண்ண உரமும் தந்திடும்**
**உணவாம் நல்ல மாம்பழம்.**

**வாசம் உள்ள மாம்பழம்**
**மனதைக்கவரும் மாம்பழம்**
**ஆசைதீர்க்கும் மாம்பழம்**
**ஆவல் ஊட்டும் மாம்பழம்.**

**கறுத்தக் கொழும்பான் மாம்பழம்**
**கண்ணைக்கவரும் மாம்பழம்**
**சிறுவர் விரும்பும் மாம்பழம்**
**எவரும் புகழும் மாம்பழம்.**

**சு.கௌரீஷன்,**
**வவுனியா/தமிழ்**
**மத்தியமகா.வித்தியாலயம்**

## கைவண்ணம்



**ர.அனோஜிதன், ஆண்டு-01, சிறி/சுப்பிரமணிய வித்தியாலயம்.**



ப. நிசாந், தரம் -02, இராமநாதபுரம் மேற்கு, அ.த.க பாடசாலை.

## சிரித்து மகிழ்வோம்

01) **ஆசிரியர்** காகம் ஏன் தண்ணீரில் மூழ்குவதில்லை
**மாணவன் :-** அது கரையுமேசேர்.

02) **ஒருவர் :-** திரையுலகத்தையே கலக்கிற மாதிரி ஒரு படம் எடுக்கப் போறன்.
**மற்றவர்:-** படத்திட பெயர் என்ன
**ஒருவர்:-** கரண்டி

03) **தந்தை:-** ஏன்ரா இப்படி எல்லாப் பாடத்திலேயும் முட்டை வாங்கியிருக்கிறியே. எதிர்காலத்தில் நீ எப்படியடா பிழைப்பாய்?
**மகன்:-** முட்டை வியாபாரம் செய்வேன்.

**யோ.மதுர்சன், சுவிஸ்.**

# சுப்பிரமணிய பாரதியார்



நாவலர் என்றால ஆறுமுக நாவலர்,. பாரதி என்றால் சுப்பிரமணிய பாரதியார். அத்தகு புகழ் வாய்ந்தவர்கள் இவர்கள். ஆயிரத்து எண்ணூற்று எண்பத்து இரண்டாம் ஆண்டு(1882) டிசம்பர் மாதம் பதினோராம் திகதி ஒரு புனித நாள். அன்றுதான் கீழ்த்திசை வானிலே ஓர் ஒளிச்சுடர் உதயமாயிற்று. சின்னச்சாமி ஐயரும் இலட்சுமி அம்மாளும் செய்தவப்பயனாய் அச்சுடர் எட்டயபுரத்தில் உதயமானது. "ஒளி படைத்த கண்ணினாய் வா..வா... வா.." என்று அவரே பாடியது போல ஒளி படைத்த கண்கள், நிமிர்ந்த எடுப்பான தோற்றம், உள்ளத்துடிப்பை உணர்த்தும் மீசை இவையெல்லாம் இவர், ஓர் இலட்சிய புருஷர் என எடுத்து விளக்கின.

ஐந்தாம் வயதிலே அன்னையை இழந்தார். "தாயோடு அறுசுவைப் போம்" என்ற பழமொழி இவர் வாழ்விலும் உண்மை ஆகிவிட்டது. எனினும் தாய்க்குத் தாயான சிற்றன்னையின் அரவணைப்பிலே தேறுதல் கண்டார். சம்மந்தர் 'அம்மே அப்பா என அழுதபோது ஞானப்பால் ஊட்டிய சக்தியானவள் தாயை இழந்த பாரதிக்கும் ஞானப்பால் ஊட்டினார்.

கவிதையின் வல்லமை கண்டு, சொல்லின் வளம் கண்டு எட்டயபுரச் சமஸ்தான புலவர்கள் பாரதி என்னும் பட்டம் வழங்கிக் கௌரவித்தனர். அன்றிலிருந்து பாரதமும், இப்பேருலகமும் வியக்கும் பாரதி ஆனார்.

சகோதர சகோதரிகளே!

மறுமலர்ச்சிக் கவிஞனான பாரதி பெண்விடுதலைக்குக் குரல் கொடுத்த பெரும் குயில் அல்லவா?

"ஏட்டையும் பெண்கள் தொடுவதைத் தீமையென்று எண்ணியிருந்தவர் மாய்ந்து விட்டார்"

இனிப்பாட்டைப் பாடுங்கள். ஏட்டைப் புரட்டுங்கள். நாட்டை வளப்படுத்துங்கள் என்கிறார்.

''பிறநாட்டு நல்லறிஞர் சாஸ்த்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்'' என்று ஆதங்கம் கொண்ட கவிஞன் அல்லவா?

சின்னச் சின்னப் பாப்பாக்களைப் பார்த்து ''சாதிகள் இல்லையடி பாப்பா, குலத் தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்'' என்று அறிவுறுத்துவார்.

உலகத்து மக்களின் வாழ்வையும் அவர்களின் சீர்கேடுகளையும் கண்டு நெஞ்சு பொறுக்குதில்லையே என்று இரத்தக் கண்ணீர் விட்டார். விடுதலைக்குயிலாக இப்பேருலக விடுதலைக்காகப் பாடித்திரிந்தார்.

புதுமைப் புலவனை, புரட்சிப் பாவலனை, மறுமலர்ச்சிக் கவிஞனைப் போற்றாதாரும் உளரோ? "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் - இனிதாவது எங்கும் காணோம்" என்று பாரதியார் பாடியது போலவே யானறிந்த பாவலரில் பாரதிபோல் வல்லவனை எங்கும் காணேன்.

**கு.மணிமேகலை.**

# பொது அறிவு

01) உலகிலேயே மிகப் பெரிய நாடு எது?
சோவியத் ரசியா

02) உலகிலேயே மிகப் பெரிய பாலைவனம் எது?
சகாராப்பாலைவனம்.

03) உலகிலேயே மிகப் பெரிய கடல் எது?
தென்சீனக்கடல்.

04) உலகிலேயே மிகப் பெரிய சமுத்திரம் எது?
பசுபிக் சமுத்திரம்.

05) உலகிலேயே மிகப் பெரிய நதி எது?
அமேசன் நதி.

06) உலகிலேயே மிகப் பெரிய வளைகுடா எது?
மெக்சிகோ வளைகுடா

07) உலகிலேயே மிகப் பெரிய தீப கற்பம் எது?
சவுதி அரேபியா.

08) உலகிலேயே மிக உயரமான ஏரி எது?
தித்திக்கா ஏரி/டிடிக்காஏரி

**கி.சரிதா, தரம் -10,**
**கொக்கிளாய் அ.த.க.பள்ளி**

பகுதி–03



தொடர்கதை

அத்தியாயம் -03

பிளானறி ஓ கொணரின்

# இடம் பெயர்ந்தவன்

சு.மகேந்திரன்



பாதிரியாா கடைசியாக வந்த போது ஏற்பட்ட கலவரம் போன்ற உரையாடலால், சிறிதுகாலம் அங்கு வருவதைத் தவிர்த்து இருந்து இடம் பெயர்ந்தவன் இன்னும் தூக்கி எறியப்படாது கண்டு, தைரியத்துடன் அங்குவரத்தலைப்பட்டார். எங்கு விட்டாரோ அந்த இடத்தை மீண்டும் நினைவுபடுத்திக் கொண்டு மதஅறிவுரைகளைக் கூற ஆரம்பித்தார். அவள் அவரது அறிவுரைகளை எதிர்பார்த்துக் கொண்டிருக்கவில்லையாயினும், அவர் அறிவுரைகளை வழங்கினார். யாருக்கு அறிவுரைகள் கூறும் போதும் கைக்கொள்ள வேண்டிய புனிதச் சட்டங்களிலிருந்து ஒருவரைவிலக்கணத்தையோ, அல்லது கைக்கொள்ள வேண்டிய புனிதச் சட்டங்களிலிருந்து, ஒரு மறுக்கமுடியாத உண்மையையோ, ஒவ்வொரு உரையாடலின் போதும், நடுநடுவே புகுத்தியபடியிருப்பார். அவள் தனது வீட்டின் தலைவாசலிலிருந்து கொண்டு பரிகாசமும் மானபங்கமும் உண்டாகும் பாவனையில் காலை ஆட்டியபடி பேச்சில் ஒரு ஆப்பைவைப்பதற்கான தருணத்தை எதிர்பார்த்தபடியிருந்தாள். ஆனால் இது தெரிந்தும், அதனை சிறிதும் லட்சியம் செய்யாமல் நேற்று பட்டணத்தில் நடந்த ஒரு நிகழ்வைக்கூறுவது போல், "கடவுள் தன்னால் உண்டாக்கப்பட்ட தனது ஒரே மகனான யேசுக் கிறிஸ்துவை தனது தலையை சிறிது குனிந்து கொண்டார் - "மனித இனத்தின் மீட்பராக அவர்......"

அவள் பாதர் பி.்.லைன் எனக்கூறிய போது, அவர் துள்ளி எழுந்தார். 'நான் இப்போது ஒரு முக்கியமான விஷயம் பற்றிப் பேசப்போகிறேன்'

கிழவரின் வலது கண்ணின் கீழ் இருந்த தசை பின்னோக்கி அசைந்தது.

என்னைப்பொறுத்த அளவில் கிறிஸ்து கூட ஒரு இடம் பெயர்ந்தவர், எனக் கூறிப்பயங்கரமான பார்வையுடன்அவரைப்பார்த்தாள்.

அவர் தனது கைகளை மேலே சற்று உயர்த்திபின் தொடைகளில் அவற்றை நழுவவிட்டார். அவள் கூறியதைக் கருத்தில் கொள்வதுபோல், 'ஆ' என முணுமுணுத்தார்.

'நான் அந்த மனிதனை இங்கிருந்து போகச்சொல்லப் போகிறேன்' என்றாள் மிஸிஸ் மக்கின்ரயர். அவனுக்கான எந்தக் கடமைப்பாடும் எனக்கு இல்லை. எனது கடமைப்பாடு சொந்த நாட்டுக்காக ஏதாவது செய்தஎனது நாட்டினருக்கேஉரியது. அது எங்கிருந்தோ வந்து, தாங்கள் எடுக்கக் கூடிய சலுகைகள் எல்லாவற்றையும் பெறவந்தவர்கட்கு செய்வதாக இருக்கமுடியாது, எனத் தனது தர்க்கத்தின் எல்லா அம்சங்களையும் துரிதகதியில் நினைவில் நிறுத்திக்கூறிக்கொண்டிருந்தாள். அவள் பேசி முடித்தபின் ஏதாவது தனிப்பட்ட சம்பாஷனைக்கு, அவளை இட்டுச்செல்வதற்குக் குறியாக இருந்தார். ஒரு தனிப்பட்ட பிரசங்கத்தைக்கேட்பது போன்ற தோரணையுடன், அது முடியும் வரை பாதிரியார் பொறுத்திருந்தார். இதிலிருந்து வேறுவழி ஒன்று உள்ளதா என அவரது கண்கள் ஓரிருமுறை முத்தத்தில் அலைந்தன. ஆயினும் மிஸிஸ் மக்கின்ரயர் பேச்சை நிறுத்தவில்லை. தான் எப்படி முப்பது வருடங்களாக,இந்த இடத்தை எங்கிருந்தோ வருவதும் போவதுமாக இருக்கும் மனிதர்களுடன்தன்னந்தனியாக நடத்திக் கொண்டு போவதையும், ஆனால் அவர்களோ ஒரு கார் வாங்குவதையே குறியாக இருப்பதையும் விளக்கினாள்.அவர்கள் போலந்திலிருந்து வந்தால் என்ன ரினிசியிலில் இருந்து வந்தால் என்ன, எல்லோரும் ஒரே மாதிரியானவர்களாகவேயிருக்கிறார்கள் என தான் அறிந்து வைத்திருக்கிறாள் எனவும், எல்லாம் சரியாகிவந்தவுடன் கௌசக் குடும்பத்தை அங்கிருந்து அகற்றத்தான் தயக்கம் காட்டப்போவதில்லை எனவும் கூறினாள்.

'பணக்காரர்கள் போலத்தோன்றுபவர்கள்தான் உண்மையில் ஏழைகள், ஏனெனில் அவர்கள் பலவற்றைப்பேணவேண்டியிருக்கிறது. நான் சாப்பாட்டுக் கணக்குகளைச் செலுத்துகிறேன் என உங்களுக்குத் தெரியுமா? தனது வீட்டை திருத்தவேண்டும் என்ற விருப்பம் இருந்தும் அதுமுடியாமல் இருப்பதையும் சொன்னாள். கணவரின் கல்லறை மேலுள்ள நினைவுச்சின்னத்தை, திருத்த வேண்டுமென்ற விருப்பமிருந்தும், புதுப்பிக்க முடியாமலிருப்பதையும் சொன்னாள். இந்தவருடம் தான் செலுத்தவேண்டிய காப்புறுதிப்பணம் எவ்வளவு என அவரால் அனுமானிக்கமுடியுமா? எனக்கேட்டு கடைசியில் அவர் அவளை காசினால் நிறைந்து போயிருக்குமொருவனாக நினைத்துக் கொண்டிருக்கிறாரா' என அவள்கேட்டபோது, ஒரு எள்ளி நகையாடக்கூடிய கேள்வியொன்றை செவிமடுப்பது போல் சடுதியாக அவரிடமிருந்து எருதுவின் உறுமல்போன்ற அருவருப்பான ஒலி ஒன்று கேட்டது. அவள் அந்தச் சந்திப்பின் பிறகு ஈடாடி விட்டாள். ஆயினும் அவளில் அவரை வென்று விட்டதற்கான அறிகுறி ஒன்று தெரிந்தது. வரப்போகும் முதலாம் திகதி இடம் பெயர்ந்தவனுக்கு ஒரு மாத நோட்டிஸ் கொடுப்பதற்காகத்தீர்மானித்து, அதனை சோட்லியிடமும் கூறினாள். தான் பழகிய பெண்களிலேயே, தனது மனைவி மட்டும் தான் சொன்னபடி எதையும் செய்யும் செயல்திறன் மிக்கவள். அவன் போலிலிருந்து வந்தவன். பாதிரியாலும் பிசாசாலும் அனுப்பப்பட்டவன் எனக்கூறியிருக்கிறாள். அவரது பிரார்த்தனைக்கூட்டங்களில் மிஸிஸ் மக்கின்ரர் கலந்துகொள்வதற்கு முன்பே, அவளை பாதிரியார் ஏதோ ஒரு கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறார் எனச் சோட்லி சந்தேகத்துக்கு இடமின்றி தெரிந்து வைத்திருந்தான். ஏதோ ஒன்று அவளை உள்ளுக்குள்ளால் உருக்கி வருவதுபோல் தோன்றியது. மெலிந்தும் மனநிம்மதியுமின்றி இருக்கும் அவளுக்கு, கூர்மையுடன் எதனையும் நோக்கும் பண்பும் குறைந்துகாணப்பட்டது.

பால்கறக்கும் பாத்திரம் எவ்வளவு அழுக்காக இருந்தாலும், அது இப்போதெல்லாம் அவளுக்குத் தெரிவதில்லை. பேசாமலிருக்கும் போது கூட அவளது வாய் சும்மா அசை போட்டபடியிருக்கும்... போலிஸ்காரன் எந்த பிழையும் விடாமலிருந்தாலும் கூட, அவனைக்கண்டால் அவளுக்கு எரிச்சலாகவே வந்தது. சோட்லி அவள் விரும்புவது போல் காரியங்களை ஒரு போதும் செய்யாமலிருந்தாலும்கூட, அவள் அவற்றைக்கருத்தில் கொள்வதில்லை. போலிஸ்காரனும் அவனது குடும்பத்தவர்களும் கொழுத்துக் கொண்டேயிருக்கிறார்கள் என்ற நினைப்புடனேயே இருந்தாள்: அவர்களது முகத்தில் தெரிந்த பள்ளங்கள் எல்லாம் மறைந்து வருவதுடன், ஒவ்வொரு சதத்தையும் சேர்க்கிறார்கள் என சோட்லிக்கு சுட்டிக்காட்டினாள்! ஆமாம் மடம் விரைவில் 'உங்களைக்கூட வாங்கிவிடுவார்கள்' என."அது அவளை உசுப்பிவிடுமென்ற" நினைப்பில் தைரியமாக சோட்லி மறுமொழி சொன்னான். 'அவன் நான் முதலாம் திகதிவரை பொறுத்திருக்கிறேன்' என்றான் சோட்லி.

(தொடரும்)

## ஊக்கமாத்திரை

# மதிதனைக் கெடுக்கும் மது எனும் அரக்கன்

பஞ்சமா பாதகங்கள் எவை என்று ஆசிரியர் மாணவர்களைக் கேட்டார். கொலை, களவு, கள், காமம்,சூது என்று உடனடியாகவே மாணவர்கள் ஒருமித்த குரலில் பதிலளித்தார்கள்.

'அதிலே கள் என்பதை ஏன் நடுவே வைத்திருக்கிறார்கள்' என்று அடுத்த கேள்வியைக் கேட்டார்.இம்முறை ஊசிவிழுந்தால் கேட்கும் அமைதி. ஆசிரியர் மாணவர்களின் முகங்களை நோக்கிப் பார்வையைப் படரவிட்டார்.

சிறிது நேரத்தின்பின் ஒரு மாணவன் கள் மிகவும் கூடாததாக இருப்பதால் என்றான்.'கொலையை விடவா?, காமுகனின் பாலியல் வல்லுறவைவிடவா?' மீண்டும் ஆசிரியரின் வினா. மாணவர்களிடையே மறுபடி மௌனம்.

ஆசிரியர் தொடர்ந்தார். 'சரியான பதில்தான். ஆனால் காரணம்தான் தெரியாது விழிக்கிறீர்கள். ஆம்! கள் என்று நாம் குறிப்பிடுவது சகலவிதமான போதைப்பொருட்களுக்குமான ஒருகுறியீடுதான். போதைப்பொருட்கள் மிகவும் ஆபத்தானவை. போதையின் அடிமையாக இருக்கும் ஒருவன் எதையும் செய்யத்தயங்கமாட்டான். நல்லது எது?, கெட்டது எது? என்று சிந்திக்க போதை மயக்கம் இடமளிப்பதில்லை. எனவே இவன் போதை வசப்பட்டிருக்கும் வேளையில் கொலையும் செய்வான், களவும் செய்வான், காமத்தின் வசப்பட்டு பாலியல் வல்லுறவிலும் ஈடுபடுவான், சூதுகளையும் புரிவான். ஏனைய பஞ்சமாபாதகங்கள் அனைத்தையும் மதுதூண்டக் கூடியது என்பதால் அதுவே பஞ்சமா பாதகங்களில் நடுநாயகமாகச் சொல்லப்படுகிறது. ஆசிரியரின் விளக்கம் மாணவர்களுக்குத் திருப்தியளித்தது.

அண்மைக்காலமாக சர்வதேச மட்டத்திலும், தேசிய மட்டத்திலும், ஏன் எமது தமிழர் தாயகத்தின் இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிகளிலும் கூடபோதைப்பொருள் பாவனை பெருகிவருகிறது.

மதுபானங்கள்,அபின்கஞ்சா முதலான இயற்கைப்போதைப் பொருட்கள், மோபியா பெதடீன் எல்.எஸ்.டீ போன்ற இரசாயனப் போதைப் பொருட்கள், புகைத்தல் என்பனவும் போதையேற்படுத்த வல்லன. அண்மைக்காலமாக குடு, பொடி அல்லது பவுடர் என்று அழைக்கப்படும் இரசாயன போதைப்பொருட்களின் பாவனை இளைய தலைமுறையினரிடையே -குறிப்பாக பாடசாலை மாணவர்களிடையே கூடப்பரவிவருவது வேதனைக்குரிய விடயமாகும். இவை குளிசை, மாத்திரை வடிவிலும் கிடைக்கின்றது.

போதைப்பொருட்கள் தனி மனிதனை மாத்திரமன்றி முழுச் சமுதாயத்தையுமே பாதிக்கின்றன. மானுட வர்க்கத்தின் உடல் ஆரோக்கியத்தை மட்டுமன்றி உளஆரோக்கியத்தையும் போதைப்பொருட்கள் பாதிப்பதனால் இதன் விளைவாக சமூக சீர்கேடுகள் பல்கிப்பெருகுகின்றன.

மதுவின் கொடுமையை, அது தனி மனிதனிலும், அவன் சார்ந்த குடும்பத்திலும், சமூகத்திலும் ஏற்படுத்தும் அனர்த்தங்களை நாம் ஓரளவு அறிவோம். இரசாயனப்போதைப்பொருட்கள் சாதாரண மதுபானத்தை விட தீமையானவை. இதற்கு அடிமையாதல் மதுவைவிட பன்மடங்கு அதிகமானது.

போதைப் பொருட்களின் பாவனை ஒரு அமைதியான வாழ்வு நிலையை குழப்புவதுடன், எமது பண்பாடு கலாச்சாரங்களையும் தகர்த்துஎறியும் கொடுமையை நாம் தரிசிக்கின்றோம். தனிமனித வாழ்வின்நிகழ்காலத்தை மாத்திரமன்றி, எதிர்காலத்தையும் சீரழிக்கிறது. தன்னை மறந்து, தன் நாமம் கெட்டு பிறருக்கும் பாதிப்புகளை ஏற்படுத்தி சீரழியவைக்கும் போதைப்பொருட்கள் எமக்குத்தேவைதானா?

உடனடியாக மதியைக்கெடுக்கும் மது காலப்போக்கில் மனிதனை மனநோயாளியாகவும் ஆக்கிவிடுகின்ற கொடுமையை நாம் தெரிந்தோமானால் போதைப் பொருட்களின் பக்கம் தலைவைத்தே படுக்கமாட்டோம்.

ஈரல்அழற்சி, மாரடைப்பு, இரத்த அழுத்தம், குடற்புண், சுவாசப்பை அழற்சி, நரம்புத் தளர்ச்சி முதலான பல நோய்களுக்கு இத்தீய பழக்கங்கள் எம்மை இட்டுச்செல்கின்றது. இளவயது நோய்களுக்கும், மரணங்களுக்கும்இவை இட்டுச்செல்லக் கூடியன. புகைத்தல் மாரடைப்பையும், சுவாசப்பை அழற்சியையும், புற்றுநோயையும் ஏற்படுத்த வல்லன. மேலும் போதைப்பொருளுக்கு அடிமையானவன் சமூகத்திற்குத்தொல்லைதரும் ஒருவனாக இருக்கிறான்.

போதைப்பொருள் வாணிபம் சர்வதேச மட்டத்தில் கோடிக்கணக்கான பணத்தைப் புரள வைக்கிறது. நன்கு திட்டமிடப்பட்ட நாசகாரக்குழுக்கள், பெரும்புள்ளிகள், பாதாள உலகக்கோஷ்டியினர் எனப் பலரும் இவ்வியாபாரத்தினால் குளிர்காய்கின்றார்கள். அப்பாவியான பொது மகன் இதனால் பாதிப்புக்குள்ளாகிறான். இதை இளவயதினர் மாத்திரமன்றி அனைவருமே புரிந்துகொண்டு போதைப் பொருட்களை நிராகரிக்க வேண்டும். போதையில்லாத நாளைய தினமே எமது இலக்கு!

ச.முருகானந்தன்

## மருத்துவம்

# நீரிழிவு நோயும் நிம்மதியற்ற வாழ்வும்

இன்றைய உலகில் பெரும்பாலானவர்களை பீடித்திருக்கின்ற நோய்களில் நீரிழிவும் ஒன்றாகும். 2025 ஆம் ஆண்டளவில் உலகில் நீரிழிவு நோயாளாகளில் எண்ணிக்கை 30 கோடியாக இருக்கும் என உலக சுகாதார தாபனம் கூறுகிறது. நீரிழிவு நோய் பற்றிக்கூறும் அமெரிக்காவின் "Centenrs For Disease Control and Prevention'' இதுவரை 30 வயதை

எனவே மேற்கூறப்பட்ட இரு வழிகளிலும் நீரிழிவு நோய் ஏற்படுகிறது. இதில் முதலாவதாக இளம் வயதினருக்கு பெரும்பாலும் ஏற்படுவதாகும். ஆனால் இரண்டாவது வகையாக ஏற்படும் நீரிழிவு நோய்தான் இன்று உலகை உலுப்பிவருகிறது. இது பரம்பரை நோயாகவும் வரலாம். மேலும்இது ஒரு பரம்பரை நோய் என





தாண்டியவர்களுக்கு மட்டும் இந்நோய் இருப்பதாக கூறியது. ஆனால் நீயோர்க் நகரின் மவுண்ட் ரினாய் மருத்துவக்கல்லூரி வைத்தியரான "ஆதர நபன்ஸ்டின்'' 18 வயதுடையோருக்கும் நீரிழிவு நோய் இருப்பதாகக்கூறியுள்ளார்.

நீரிழிவு நோய் என்பது சிறுநீருடன் குளுக்கோஸ் சேர்ந்து வெளியேறுவதாகும். அதாவது நாம் உட்கொள்ளும் உணவுப் பொருட்கள் பிரதானமாக மூன்றாகப் பிரிக்கலாம்.

01.காபோவைதரற்று(Carbohydrates)
02.புரதப்பொருட்கள்(Proteins)
03.கொழுப்புப்பொருட்கள்(Fats)

இதில் நாம் உட்கொள்ளும் காபோவைதரேற்று உணவுகள் சமிபாட்டிற்குப்பின் குளுக்கோசாக மாறுகிறது. இக்குளுக்கோசை இன்சுலின் எனும் ஓமோன் "கிளைக்கோசனாக'' மாற்றி குருதியில் உள்ள குளுக்கோசின் அளவை கட்டுப்படுத்துகிறது. இத்தொழிற்பாடு பாதிக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் எமக்கு நீரிழிவு நோய் ஏற்படுகிறது. கணையச்சுரப்பில் உள்ள இலங்ககான் சிறுதீவுகள் இன்சுலினை சுரக்கின்றன. சில சமயங்களில் இச்சுரப்புகள் பாதிக்கப்பட்டு இன்சுலின் சுரக்கப்படாமல் விட்டால் குருதியில் குளுக்கோசின் அளவு உயரும் இவ்வாறும் நீரிழிவு நோய் ஏற்படலாம். மற்றையது முற்றிலும் வித்தியாசமானது. இங்கு குருதியில் உள்ள குளுக்கோசின் அளவை கட்டுப்படுத்தும் உயிர்த்தொழிற்பாடுகளின் சந்தம் வேறுபடுவதால் இன்சுலின் ஓமோன் சுரக்கப்படாமலும் குளுக்கோஸ் உடம்பில் உறிஞ்சிக் கொள்ளப்பட மாட்டாது. இதன் போதும் குளுக்கோஸ் மட்டம் குருதியில் உயரும்.

அமெரிக்காவின் ''கெனோமா'' ஆராச்சிகள் சம்பந்தமான வைட்ஹெம் நிலைய ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். இவர்கள் அண்மையில் இந்நோயை கடத்தும் பரம்பரை அலகை (ஜீன்) கண்டுபிடித்துள்ளார்கள். எனினும் இப்போது நீரிழிவு நோயைக் குணப்படுத்தும் மருந்துகளும் இருக்கின்றன.

இனி நாம் ஒரு நீரிழிவு நோயாளியை எவ்வாறு இனங்காணலாம் எனப்பார்ப்போம் அதாவது பின்வரும் அறிகுறிகள் ஒருவரில் காணப்படும்போது தான் அவர் ஒரு நல்ல மருத்துவரை சந்தித்து சிறுநீர் பரிசோதனை செய்து கொள்வது அவசியமாகும்.

01. அடிக்கடி சிறுநீர் கழியும் அப்படி கழிகின்ற ஒவ்வொரு தடவையும் அதன் அளவானது அவருக்கு ஏற்கனவே வழக்கமாக இருந்ததைவிட அதிகமாக இருக்கும்.

02. அவருக்குத்தாகம் அடிக்கடி ஏற்படும். ஏற்கனவே வழக்கமாக அருந்திவந்த நீரை விட இப்போது அதிகமாக அருந்துவார்.

03. வழமையாக இருந்ததை விட இப்போது அதிகமாக பசி எடுக்கும்.

04. உடம்பில் எப்போதும் ஒரு பொதுவான சோர்வு இருந்து கொண்டே இருக்கும்.

05. அடிக்கடி தூக்கம் வரும்.

06. கண்பார்வை மங்கும் அல்லது பார்வையில் ஏதாவது கோளாறு தென்படும்.

07. உடம்பில் ஏதாவது புண் ஏற்பட்டால் விரைவில் குணமாகாது.

08. ஆண்மை குறைவும் அரிதாக ஏற்பட வாய்ப்புண்டு.

09. அடிக்கடி தோல்களில் காயங்கள் ஏற்படலாம்.

இவ்வாறான அறிகுறிகள் தென்படத்தொடங்கினால் உடனே ஒருவர் தனக்கு நீரிழிவு நோய் ஏற்பட்டுவிட்டது எனும் முடிவுக்கு வரத்தேவையில்லை. ஏனெனில் வேறு சில நோய்களுக்கும் இவ்வாறான அறிகுறிகள் தோன்றுவது உண்டு. அத்தோடு மேற்கூறப்பட்ட எல்லா அறிகுறிகளும் ஒரு நீரிழிவு நோயாளிக்கு இருக்கும் என்றும்இல்லை. எனவே நீரிழிவு நோய் உண்டா இல்லையா என ஒரு மருத்துவரை நாடி குருதியையும் சிறுநீரையும் பரிசோதனை செய்து தனக்கு எந்தளவில் நோய் உண்டு என்பதை அறிந்துகொள்ளல் சிறப்பாகும். நீரிழிவு நோய் ஏற்பட்டவர்கள் பெரும்பாலும் இன்று இன்சுலினையே பாவிக்கின்றனர். இவ் இன்சுலின் செம்மறி ஆடுகள், மாடுகள் போன்ற விலங்குகளில் இருந்து எடுக்கப்படுகின்றது. ஆனால் இப்போது பரம்பரை அலகு தொழில் நுட்பத்தின் மூலம் (Recombinant DNA Technique) இன்சுலின் உற்பத்தி செய்யப்பட்டு பயன்படுத்தப்படுகின்றது. இருப்பினும் இந்நோய் ஏற்பட்டால் அது அவரது சகஜ வாழ்க்கைக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்திவிடும். குறிப்பாக 20-74 வயதுடையோருக்கு நீரிழிவு நோய் வந்தால் குருட்டுத்தன்மை, சிறுநீரக நோய்கள், இதய நோய்கள் என்பன ஏற்பட வாய்ப்புண்டு. ஆண்நீரிழிவு நோயாளிகளில் குறிப்பிட்ட சதவீதத்தினருக்கு பாலியல் பலவீனத்தில் கஷ்ரப்படுகின்றனர். அதே போல் சுவாசத்தொகுதிகளிலும் சிக்கல்கள் ஏற்பட வாய்ப்புகள் உண்டு. பொதுவாக கட்டுப்பாடு இன்றி உணவு உட்கொள்பவர்களுக்கு நீரிழிவு நோய் ஏற்பட அதிக வாய்ப்பு உண்டு. எனினும்இந்நோய் ஏற்பட்ட ஒருவர்

*1921 ஆம் ஆண்டு பெண்டிங் என்பவரும் பெஸ்ட் என்பவரும் இன்சுலினை கண்டுபிடித்து உலகில் உள்ள நீரிழிவு நோயாளர்களுக்கு மறுவாழ்வு அளித்தனர். இதற்காக பெண்டிங் என்பவருக்கு நோபல் பரிசு கிடைத்தது.*

01. எதைச்சாப்பிட்டாலும் அளவோடு சாப்பிடுதல் வேண்டும்.

02. மிகையான உடல் எடையைத் தவிர்த்தல் வேண்டும். ஏற்கனவே உருவான பருத்த எடையை குறைப்பதை விட மேலும் உடல் எடை அதிகரிக்காமல் தவிர்ப்பது நல்லது.

03. எப்போதும் மனதை அமைதியாக வைத்திருத்தல் வேண்டும்.

04. மருத்துவ ஆலோசனைப்படி உடல்உறவு வைத்துக்கொள்வது சிறப்பாகும்.

05. ஓய்வு எடுத்துக்கொள்ளல் வேண்டும். அதற்காக உழைக்காமல் நடக்காமல் இருத்தல் ஆகாது.

06. மருத்துவரை அடிக்கடி சந்தித்து கலந்தாலோசித்து அவர் குறிப்பிடும் மாத்திரைகளை ஒழுங்காக பயன்படுத்தல் வேண்டும்.

07. நிலமையினைப்பொறுத்து தினசரி இன்சுலின் போட்டுக்கொள்ளுதல் வேண்டும்.

08. உற்சாகமாக இருத்தல் வேண்டும். நீரிழிவு இருக்கிறது என்ற மனநிலையே இருத்தல் கூடாது.

**தமிழ்ச்செல்வன்**

போன்ற விடயங்களில் கவனம் செலுத்துதல் வேண்டும். முக்கியமாக உணவுக்கட்டுப்பாடு என்பது அவசியமாகும். தற்போதைய மருத்துவ உலகத்தின் பாதிக்கப்பட்ட கணையச்சுரப்பியினை அகற்றிவிட்டு அவ்விடயத்தில் வேறு ஒரு ஆரோக்கியமான சுரப்பியினை பொருத்தும்முயற்சிகள் கடந்த சில ஆண்டுகளாக நடைபெற்றுவருகின்றது. இம்முயற்சி வெற்றி பெறுமானால் நீரிழிவு நோய் முற்றாக வெல்லப்பட்டதாகவே கொள்ளலாம்.

சிறுநீரில் குளுக்கோஸ் உள்ளதா என்பதனை அறிந்து கொள்வதற்கு நீங்கள் செய்யவேண்டியது இதுதான். ஒரு சோதனைக்குழாயில் 0.5மி.லீ பெனடிக்ஸ் கரைசலை எடுத்து நன்றாக சூடாக்கவும் பின் அதற்கேற்றளவு சோதிக்கப்பட வேண்டிய சிறுநீரை விட்டு சில நிமிடங்கள் சூடாக்கவும் இதன் பின் ஏற்படும் நிறமாற்றத்தை கொண்டு சிறுநீரில் எந்தளவு குளுக்கோஸ் உள்ளது என்பது பின்வருமாறு புலப்படும்.

| நிறம் | சிறுநீரில் குளுக்கோசின் அளவு |
|---|---|
| நீலநிறமாக இருத்தல் | 0%இல்லை |
| பச்சைநிறமாக இருத்தல் | 0.5% |
| மஞ்சள்நிறமாக இருத்தல் | 01% |
| ஒரேஞ்நிறமாக இருத்தல் | 01.5% |
| சிகப்புநிறமாக இருத்தல் | 02%அதிகூடியது |

அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு என்பார்கள் இது உண்மையே எதையும் அளவுக்கு அதிகமாக உட்கொள்வதை தவிர்த்து, வருமுன் காப்பது சிறந்தது. நீரிழிவு நோயாளி தனது உணவில் குறிஞ்சி, பப்பாப்பழம், விளாம்பழம் பேன்றவற்றை அதிகமாக சேர்த்துக்கொள்ளுதல் அவசியமாகும்.

---

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

கரோலினாவிற்கு இடையில் யுத்தம் உண்டாகியிருந்தது. அவர்களது சொத்துகள் நாசமாகியிருந்தன. சென்க்கிடம் 6700 டொலர்களும், என்க்கிடம் 2600 டொலர்களும் மாத்திரமே மீதமாக இருந்தன. அதன் பிறகு தொடர்ச்சியாக உடலால் ஒன்றுபட்டிருந்தாலும் என்க் தனது சகோதரனை விட மிகவும் வறியவனாகவே இருந்தான்.

இருவரும் தொடர்ச்சியாக கண்காட்சியை நடத்துவதற்கு ஆரம்பித்தார்கள். ஆனால் கிடைத்த முதலின் அளவு குறையத்தொடங்கியது. 1868இல் இருவரும் தங்கள் மனைவிமாரோடும், இளைய பிள்ளைகளோடும் இங்கிலாந்துக்குப்போனது இதனாலேயே. அப்பொழுது என்க்கிற்கு 12 பிள்ளைகளும், 10 பிள்ளைகள் சென்கிக்கும் இருந்தனர். இங்கிலாந்துக்கண்காட்சி பயனுள்ளதாக அமைந்ததோடு, இருவரும் மீண்டும் வேறு வேறாகப்பிரிந்து கொள்வதற்கு முயற்சி செய்தார்கள். ஆனால் அது மீண்டும் பயனற்றுப்போயிற்று. 1870 இல் பிரான்சுக்கும் ரஷ்யாவிற்கும் இடையில் யுத்தம் ஏற்பட்டமையால் மீண்டும் அவர்கள் அமெரிக்காவிற்கு வரநேர்ந்தது.

ஒரு தடவை சென்க் கத்தியைக்காட்டி என்க்கை கொன்று விடுவதாக எச்சரிக்கை செய்தார். இதனால் இருவரும் தம்மை வேறாக்கி விடும்படி வைத்தியரிடம் சென்று கேட்டுக்கொண்டார்கள். ஆனால் இருவரையும் பிரித்தால் இருவருக்கும் மரணம் நேருமென வைத்தியர் உணர்த்திய பின்பு மோதல் நின்றது. எப்படியாயினும் பலவீனமான சென்க் இறந்து போன பின்பு என்க்கை பிரித்து வேறாக்குவதாக வைத்தியர் உறுதியளித்தார். ஆனால் வைத்தியருடைய உதவி தேவையற்றுப்போயிற்று.

1874 ஜனவரியில் ஒரு இரவில் சென்க்பன்கர் இறந்து போனார். என்க்பன்கர் கத்தினார். "இப்பொழுது நானும் முடிந்தேன்.'' அவர் கத்தியது அச்சம் கலந்த குரலில் வேறாக்கும் சத்திர சிகிச்சை செய்வதற்கு வைத்தியர் வருவதற்கு முன்பு அதாவது சென்க்கினுடைய மரணத்தின் பின் சில மணி நேரத்தில் என்க் இறந்துபோனார். சென்க்கினுடைய மரணத்திற்குக் காரணம் மூளையில் இரத்தம் உறைந்து போனதே எனக்கண்டறியப்பட்டது. என்க் அதிர்ச்சியினால் மரணமானார் எனமுடிவுசெய்யப்பட்டது.

இருவரினதும் மரணங்ளின் பின்பு இருவரைப்பற்றியும் அதிக விபரங்கள் வெளியாகின. ஒரு காலத்தில் உலகின் எட்டாவது அதிசயமாக அறிமுகப் படுத்தப்பட்ட இந்த இருவரினது மரணத்தின் பின்பு அதிக விபரங்கள் வெளியாகின.உலகின் செல்வந்த இரட்டைப்பிள்ளைகள் என பிரகடனப்படுத்தப்பட்ட இந்த இருவரும் இறக்கும் போதென்றால் செல்வந்தர்கள் அல்ல. ஆனால் இருவருமே உலகின் புதுமையானவர்கள் என்பது இரகசியமானதல்ல.



# வரலாறு தந்த துயரம்

## ஈராக்கியகுடிமகனின் வாக்குமூலம் -10

"இயங்கக்கூடியவராக இருக்கிறாரா?" என்றேன்.

*"ஓம் ஒரு விசயத்தில் தவிர மற்றம்படி இயங்குவார்."* என்றார் சிரித்துக்கொண்டு.

நானும் சிரித்தேன் வேறு என்னதான் செய்வது. இவர் இதைச்சொல்லும்போது இந்திரா காந்தியின் மூத்தபுதல்வன் சஞ்சை காந்தி தான் நினைவில் வந்தார். அவரும் 'இந்தவிடயத்தில்' ஒரு மோசமான நபர் என்று பரவலாக அறியப்பட்டிருந்தது. இந்தியாவில் அவரது பேரனார் நேருவைக்கூட தேசபிதா என்று இரட்டைத்தொனிபட விழிப்பவர்கள் இருக்கிறார்கள்.

எனது பல்வேறு உரையாடல்களையும்வைத்து அவர் என்னிடம் கேட்டார்.

*"நீங்கள் அரசியல் பற்றி அதிகம் கதைக்கிறீர்களே உங்களிடம் ஒரு கேள்வி கேட்கலாமா" என்றார்.*

நான் அச்சத்தோடு "ஓம் நிச்சயமாக" என்றேன்.

*"ஈராக் வங்கிகளில் வைப்பிலிட்ட பணத்தை அமெரிக்க நிர்வாகம் மக்களுக்குத்திருப்பி வழங்குமா?" என்றார்.*

உண்மையாகச்சொன்னால் எனக்குச் சரியானபதிலை உடனடியாகச்சொல்ல முடியவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். நான் சிரித்துக் கொண்டே "ஏன் உங்களுக்குப் பெரும் இழப்பு நேர்ந்துவிட்டது போல" என்றேன்.

*"ஓம்....ஓம் ஒரு நாற்பது லட்சம் எனது கணக்கில் வைப்பில் இருக்கிறது. நான் எனது வங்கிப் புத்தகத்தை பாதுகாப்பாகக்கொண்டு வந்துவிட்டேன். யுத்தம் நடக்கும்போது வங்கிப்புத்தகத்தை இழக்க நேர்ந்தால் அது பணத்தை இழந்ததிற்கு நிகரானதுதானே"*

"அமெரிக்கா இடைக்கால அரசாங்கத்தைப்பொறுப்பேற்றால் வங்கியில் வைப்பில் இட்டவர்களுக்கு பணத்தை வழங்கும் என்றுதான் நினைக்கிறேன். ஆனால் சில இழுத்தடிப்புகள் நிகழலாம். ஈராக்கிய மக்களைப்பகைத்துக்கொள்ள அமெரிக்கா விரும்பாது. தவிரவும் அங்கிருந்து கவர்ந்து செல்லப் படப்போகும் எண்ணெய் வளத்தின் பெறுமதியில் இவை ஒரு அற்பமான பெறுமதியாகத்தான் இருக்கும்." என்றேன் நான் அவருக்கு நம்பிக்கையூட்டி.

அன்று ஒன்றாக உணவருந்தினோம். அவர் மனைவிக்கு இங்குள்ள சாப்பாட்டு வகைகள் அதிகம் ஒத்துவரவில்லை. சுட்டி மகன் சமாளித்துக் கொண்டான். அவர் பல நாட்டு உணவுமுறைக்கும் பழக்கப் பட்டிருந்ததால் அவரிற்கு இங்கு பிரச்சினை பெரிதாக இருக்கவில்லை. மனைவி எங்களுடன் இருந்து மீன் பொரியலையும் பிஸ்கற்றையும் மட்டும் உண்டார். தன் மனைவி பிஸ்கற்றுடன் மட்டுமே தனது காலத்தைக் கழிப்பதாக அவர்சொன்னார். தனது குடும்பத்தை பிரிந்திருக்கும் அவரது மன அழுத்தமும் அதற்குக்காரணமாக இருக்கக்கூடும் என்று எண்ணிக் கொண்டேன்.

நீங்கள் நாடு திரும்பும் விடயம் எந்தளவில் இருக்கிறது ஏதாவது சரிவந்ததா? என்று நான் கேட்டதற்கு. அதுபற்றி தான் முயற்சி எடுத்திருப்பதாகவும் விமான சேவையைப்பார்த்துக் கொண்டிருந்தால் அலுவல் சரிவரப்போவதில்லை என்றும் அவர் சொன்னார். அதனால் வேறு வழிகள் மூலம் போக முயற்சி எடுப்பதாகவும் இனி மனைவியைத்தாக்காட்ட முடியாது என்றும் அவர் கூறினார்.

"வேறு வழி இருக்கிறதா? எப்படி?" என்றேன் நான்.

*"இங்கிருந்து யோர்தானுக்கு விமானம் மூலம்போய் அங்கிருந்து தரைவழியாக காரில் ஈராக்போக முடியும். சண்டைகள் முடிந்து ஒரு சீருக்கு வந்துள்ளமையால் இனி ஒரு பெரும்யுத்தம் நடக்கப்போவதில்லை என்று நான் நினைக்கிறேன். பிறகேன் நாங்கள் தாமதிக்கவேண்டும்." என்றார்.*

**பிரவீன்**

அன்றைய உணவை முடித்துக்கொண்டு அந்த இனிமையான பொழுதுக்காகவும் உறவுக்காகவும் அவர்களுக்கு நன்றி கூறிக்கொண்டேன். என் மனதில் எனக்குக்கிடைத்த வாய்ப்பிற்காகத்தான் நான் உண்மையாகவே நன்றி கூறினேன் என்று நினைக்கிறேன்.

அவரது சுட்டி மகன் எனக்கு மிகவும் உறவாகிவிட்டது போல பழகிக்கொண்டான். அதிகம் ஒதுங்கிநடக்கும் சுபாவம் கொண்ட அவரது அழகான மனைவி அன்போடு முன்வந்து வழியனுப்ப நான் அவருக்கு கைலாகு கொடுத்து "நீங்கள் நாடுதிரும்ப நான் கடவுளைப் பிரார்த் திக்கிறேன்" என்றேன். உள்ளார்ந்த மனதோடு அவர் மனைவி அதை ஏற்றுத்தலையாட்டினார். நான் எனது நண்பரோடு அவர்களிடமிருந்து விடை பெற்றேன். பொருத்தமில்லாத இந்த வசனத்தைச்சொல்லி: "மீண்டும் சந்திப்போம்" என்று. (முற்றும்)













# நேர்நோக்கு

## பேசுவாரே யொழிய...

1983 ஆம் ஆண்டு ஜூலை கலவரத்துக்கு மன்னிப்புக்கோருவது குறித்து சனாதிபதி ஆராய்ந்து வருகின்றாராம். அவரது வெளிவிவகார ஆலோசகரும் முன்னாள் வெளிவிவகார அமைச்சருமான லக்ஸ்மன் கதிர்காமர் கூறுகிறார்.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நியமித்த உண்மையைக் கண்டறியும் குழு 20 வருடங்களின் பின் இந்த உண்மையைக் கண்டறிந்து அரசியல்வாதிகள் மன்னிப்பு கோரவேண்டும் என சிபார்சு செய்திருக்கிறதாம். அதன் அடிப்படையில் - இன்னமும் மன்னிப்புக்கோரக்கூட மனம் வராமல் - மன்னிப்புக் கோருவது பற்றி ஆராய்கிறார்களாம்.

லண்டனின் ஒரு மூலையில் கறுப்புக் கோட்டுடன் திரிந்த லக்ஸ்மன் கதிர்காமர் சிறிலங்காவின் தேசியப்பட்டியல் உறுப்பினராகி வெளிவிவகார அமைச்சராகி தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான தீவிர பிரச்சாரத்தில் ஈடுபடத் தொடங்கியபோது ஜூலை வன்முறை நடைபெற்று 11 வருடங்கள் ஆகியிருந்தன. அவர் தமிழ் தெரியாதவராக இருந்தபோதும் தமிழர் என்றபெயரில், தமிழ்மக்களின் விடுதலைப்போராட்டத்தைப்பயங்கரவாதப்போராட்டமாக வெளியுலகிற்கு காட்டமுற்பட்டபோது 1983 ஜூலையில் இடம்பெற்ற தமிழ் மக்கள் மீதான வன்முறைகள் குறித்து உலகம் கேள்விஎழுப்பியது. இன்றும் கூட சிறிலங்கா ஆட்சியாளர்களால் கழுவமுடியாதகறையாக அது உள்ளது.

ஆனால் அந்தக்கறையைக் கழுவும் ஒரு முயற்சியை சனாதிபதி சந்திரிகாவோ அவரது விசுவாசி கதிர்காமரோ மேற்கொள்கிறாரா? அல்லது கழுவி விட்முடியுமா? என்று கேட்டால் இல்லை என்றே கூறலாம்.

அவ்வாறாயின் 20 ஆண்டுகளின் பின் இவ்வாறான நடவடிக்கையை எடுக்கக்காரணம் என்ன? என்ற கேள்வி எழுந்தால் அதற்குப்பதில் ஐ.தே.க. புரிந்த படுகொலையைச் சுட்டிக்காட்டி இப்போதுள்ள ஆட்சி மீது சேறுபூசும் முயற்சியே இது என்பதாகும்.

1994இல் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சனாதிபதி வேட்பாளராகப்போட்டியிட்ட போது அவரின் பிரதான போட்டியாளராக காமினி திசாநாயக்கா இருந்தார். அவருக்கும் யாழ் நூல்நிலைய எரிப்புக்கும் இருந்த தொடர்பைச்சுட்டிக்காட்டி சந்திரிகா குமாரதுங்க தீவிரபிரச்சாரம் செய்தார். அதன் பின்னர் ஆட்சிபீடம் ஏறிய சந்திரிகா குமாரதுங்க தமிழ்மக்கள் என்றுமே அனுபவித்திராத துயரங்களுக்கு காரணமாக இருந்தார்.

இடையிடையே ஐ.தே.கவுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் தேவைப்பட்ட போது புத்தகமும் செங்கல்லுமென்று வெண்தாமரை இயக்கத்தினூடாக பிரச்சாரம் செய்தாரேயொழிய அவரது ஆட்சிக்காலம் முடியும்வரை நூல் நிலையம் தமிழ் மக்களிற்கு கிடைக்கவில்லை.

அவர் நடத்திய ஒவ்வொரு தேர்தல் காலத்தின்போதும் ரணில்விக்கிரமசிங்கவுடன் தொடர்புடைய பட்டலந்தவதை முகாம் குறித்து பிரச்சாரம் செய்யாதுவிட்டதில்லை.

ஆனால் ஏழுவருடகாலத்தில் ரணில் விக்கிரமசிங்கமீது நடவடிக்கை எடுத்ததுமில்லை.

சந்திரிகா குமாரதுங்க ஆட்சிக்கு வந்ததே ஜே.வி.பி.யை ஒடுக்குவது என்ற பெயரால் ஐ.தே.க. புரிந்த படுகொலைகளைப்பிரச்சாரம் செய்தே. அதிலும் குறிப்பாக சூரியகந்த மாணவர் புதைகுழியை வைத்துப் பிரச்சாரம் செய்தே அவர் ஆட்சியைக்கைப்பற்றினார்.

ஆனால் அவரது ஆட்சியில் செம்மணியில் கிருசாந்தி குமாரசுவாமி எனும்மாணவி உட்பட பலர் புதைக்கப்பட சூரியகந்த புதைகுழிக்காரரே காரணமாக இருந்தனர்.

இவ்வாறான நிலையில் 1983ஜூலை வன்முறைக்கு மன்னிப்புக்கோரவோ, பட்டலந்த, சூரியவெவ, செம்மணி புதைகுழிகளுக்காக நடவடிக்கை எடுக்கவோ சனாதிபதி சந்திரிகா முன்வரமாட்டார். ஆனால் எதிரணி மீது சேறு பூசமட்டும் இடையிடையே அவர் அதுபற்றி பேசிக்கொண்டிருப்பார்.

**வேலவன்**

# பொருண்மை வாசல்

## காற்றாலை மூலம் மின்

நீர் வீழ்ச்சி மூலம் மின்சாரம் பெறுவது போன்று சூரிய வெப்பத்தாலும், காற்றாலும் கூட மின்சாரம் பெறலாம். சூரிய வெப்பத்தினால் சோளர் மூலமும், காற்றினால் காற்றாலை மூலமும் பெறலாம்.

காற்றாலை மூலம் மின்சாரம் பெறலாம் என கண்டறிந்த நாடு டென்மார்க். காற்றாலை மின் பிறப்பாக்கக்கருவி வட்டக்கச்சி ஒருங்கிணைந்த மாதிரிப் பண்ணையில் ஜெர்மன் நிறுவனக் கிளையினரால் கிட்டத்தட்ட 25 இலட்சம் ரூபா செலவில் நிறுவி உள்ளது. எமது நிறுவனத்தின் மின் பாவனையைப் பூர்த்தி செய்யுமுகமாக இந்த நிறுவனம் காற்றாலை மின் பிறப்பாக்கியை அறிமுகம் செய்துள்ளது. இயற்கை வளத்தைக்கொண்டே மின்சாரம் பெறலாம். எமது நிறுவனத்தின் சுய தேவைகளை பூர்த்திசெய்து கொள்வதற்கு ஏற்ற வகையில் இது அமைக்கப் பட்டுள்ளது.

**காற்றாலையின் செயற்பாடு :-**

இந்தக் காற்றாலையானது A.C - 220 வோல் மின்சாரத்தை உற்பத்தி செய்கிறது. காற்றாலையுடன் பொருத்தப பட்டிருக்கும் சோளர் D.C. - 48 வோல்ட் மின்சாரத்தை உற்பத்தி செய்கிறது. சோளர் மூலம் சூரிய ஒளியில் இருந்தும் காற்றாலை மூலம் காற்றில் இருந்தும் மின்சாரம் கிடைக்கிறது..

காற்றாலையால் வரும் A.C மின்சாரமும், சோளரால் வரும் D.C மின்சாரமும் சேமிக்கப்பட்டு அங்கே பொருத்தப் பட்டிருக்கும் பற்றிகளுக்கு அனுப்பப்படுகிறது. இதன் மூலம் ஏனைய இடங்களுக்கு மின்சாரம் வழங்கப்படுகிறது.

காற்றாலை மூலம் A.C - 220 வோல்ட் (3கிலோ வோல்ட்) மின்சாரத்தை (றெகுலேட்டா) REGULATOR ஐ அடைகிறது. சோளரில் இருந்து பெறப்படும் D.C - 48 வோல்ட் (2 கிலோ வோல்ட்) மின்சாரத்தை றெகுலேட்டரில் இருந்து பற்றிக்கு கடத்தப்படுகிறது. அங்கே சேமிக்கப்பட்டு பின் பற்றியில் இருந்து (இன்வெயிட்டர்) INWATTER ரின் மூலம் பெறப்படும் மின்சாரம் பாவனைக்கு எடுக்கப் படுகிறது இந்தவகையில் மின்சாரம் சேமிக்கப்பட்டு பாவனைக்கு பெற்றுக் கொள்வதால் காற்று குறைவான காலங்களிலோ அல்லது சூரிய வெப்பம் இல்லாத காலங்களிலோ மின்சாரத்தட்டுப்பாடு, மின் வெட்டு இடம்பெற வாய்ப்பில்லை.

எமது பிரதேசத்தில் மின் பாவனைக்கான காற்றாலைகள் நிறுவப்பட்டால் நமது தேவைகளை பூர்த்திசெய்யக்கூடிய மின்சாரத்தை காற்றாலையில் இருந்தே பெற்றுக் கொள்ளலாம். அரசாங்கத்தை நம்பி இருக்கவேண்டிய நிலை இருக்காது அல்லவா?

எமது பிரதேசத்தைப் பொறுத்த மட்டில் வளம் இருப்பதால் குழுக்களாகச் சேர்ந்து காற்றாலை அமைத்து நாடும் பயன் பெறலாம், எமது நாடு கடலால் சூழப்பட்டதால் கடற்கரையை அண்டிய பகுதிகளில் காற்றாலையை நிறுவினால் கிராமங்களுக்கும் மின்சாரம் வழங்கலாம் என்பது குறிப்பிடத்தக்கது. ●



**இராசா தங்கவேல்**

## எங்கள் மண்ணின் மாண்பு

**சிதம்பரதிரு**



அமெரிக்கா வெள்ளையர்களால் வெற்றி கொள்ளப்பட்ட பின் அதன் உண்மை குடி மக்களான செவ்விந்தியர்கள் அவர்களது நிலங்களை விற்கும்படி கட்டாயப்படுத்தப்பட்டார்கள். விளைவு அவர்களது சொந்த நிலங்கள் அற்பசொற்ப விலைக்கு விலைபோனது.

வெறிபிடித்த வெள்ளையரின் ஆயுதவலிமையின் முன்னால் வேறெதும் செய்ய முடியாத ஒரு செவ்விந்தியத் தலைவர் வெள்ளைக்கார தலைவருக்கு தன் மன உணர்வுகள் தொடர்பாக எழுதிய கடிதத்தின் சில பகுதிகள்.

இந்தப் பூமியின் ஒவ்வொரு பாகமும் எனது மக்களுக்குப் புனிதமானது. தேவதாரு மரத்தின் பிரகாசிக்கும் ஒவ்வோர் ஊசியும், மணல் பரப்பும் அடர்ந்த கானகத்தின் மூடுபனியும் புனிதமானவையே. எமது நினைவுகளிலும் நிஜ அனுபவங்களிலும் அவை பூஜிக்கத்தகுந்தவையே. இந்த மரங்களின் ஈரமும் சாரமும் செவ்விந்தியனின் சுகந்த நினைவுகளைச்சுமந்து வருகின்றன.

மரித்துப்போன வெள்ளை மனிதர் நட்சத்திரங்களுக்கு மத்தியில் நடக்கும் போது தான் பிறந்த மண்ணை முற்றிலும் மறந்து விடுகின்றனர் ஆனால் மரணித்த செவ்விந்தியனோ இந்த அழகிய பூமியை தன்னை ஈன்றெடுத்த தாயை ஒரு போதும் மறப்பதில்லை.

நாம் இந்த மண்ணில் ஒரு பாதி. இந்த மண்ணோ எம்மில் ஒரு பாதி. வாசனை பரப்பும் வண்ண மலர்கள் எமது சகோதரியர். இந்த மான்,குதிரை,ராஜாளி ஆகியன எமது சகோதரர்கள். பனிச்சாரல் வீசும் பசும் புல்வெளிக்கும் பாறைப் பாங்கான மலைச் சிகரங்களும் சிறுகதிரைகளின் உடற்சூடும் மனிதனும் எல்லாம் ஒரே குடும்பத்தின் அங்கத்தவர்களே.

எமக்குத்தெரியும் வெள்ளை மனிதனால் எமது வழி முறைகளை விளங்கிக்கொள்ள முடியாது. அந்த அந்நியனுக்கு இந்த பூமியின் எப்பாகமும் ஒரே மாதிரியானதே. ராத்திரியில் வந்து எங்கள் நிலங்களிலிருந்து தான் விரும்பியதை எடுத்துச்செல்பவன் அவன்.

(சி-8233) ●


# Hotels and Guest Houses

**WELCOME TO JAFFNA**

*Discover the charm of Jaffna*
*We will make it easy*

TILKO Holidays

- ✲ யாழ் நகரின் மையம் உட்பட நான்கு பிரதான இடங்களில் அமைந்துள்ள Guest Houses.
- ✲ நவீன வசதிகளுடன் புதிதாக கட்டப்பட்ட மிகவும் சுத்தமாகப் பராமரிக்கப்படும் அறைகள்.
- ✲ A/C and non A/C rooms with hot water வசதிகளுடன்
- ✲ Single, Double and twin rooms from Rs.1000 per night
- ✲ சுத்தமாகவும் சுவையாகவும் யாழ்ப்பாணச் சுவையுடன் பரிமாறப்படும் உணவு வகைகள்.
- ✲ வாகனச் சேவைகள்.

மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து அழையுங்கள்

JAFFNA - 021-222 5969
mobile- 0777-575958
077-6002621
077-6146535
COLOMBO- 074-614447
LONDON -++44-2084720029







சி-8316

தமிழீழத்திலிருந்து வீசிய

# ந. கேசவராஜனின் கடலோரக்காற்று

முழு நீளத்திரைப்படம்



ஆழ்கடலுக்கு செல்வதை "உயரப்போவது" என்கிறார்கள். அவர்களது வட்டாரமொழி வழக்கில். அப்படி 'உயரப்போபவர்கள் எந்நேரமும் கடற்படையினரின் நரவேட்டைக்கு பலியாகலாம். அவர்களின் பிடியி லிருந்து தப்பிப்பது கடினம். தனது சுயஉழைப்பில் முன்னேறத் துடிக்கும் சம்மாட்டியாரின் மகன் பலர் தடுத்தும் கேளாமல் உயரப்போகிறான். உயரப் போனால் தான் நிறைய மீன்பிடிக் கலாம் அப்படி உழைத்தால் தான் தன் காதலியின் குடும்பம் தனது தகப்பனாரிடம் பட்ட கடனை அடைக் கலாம். அன்றும் ஒருநாள் மீனவர்கள் கடலுக்கு செல்கிறார்கள். சம்மாட்டி யார் மகன் உயரப்போகிறான். நேவிகலைக் கிறான். பலரும் தப்பினோம் பிழைத்தோம் எனக்கரை திரும்பு கிறார்கள். சம்மட்டியார் மகன் மட்டும் வரவில்லை எல்லோர் முகங்களிலும் தவிப்பு. மறுநாள் அதிகாலை கடற்கரையில் எல்லோரும் காணாமல் போனவர் களை எதிர்பார்த்து காத்திருக்கிறார் கள். கமரா எல்லோர் முகங்களையும் ஊடுருவி அதன் உணர்வுகளை நமக்கு காட்டுகிறது. முரட்டு சுபாவமுள்ள சம்மாட்டியார் முகத்திலும் புத்திரசோகம். ஆனாலும் அதைக் காட்டிக்கொள்ளாத 'அவன் எப்படியும்' வருவான் என்ற உறுதி யான நம்பிக்கை. காதலியின் முகத் தில் இனம்புரியாத தவிப்பு. கமரா உயரே நோக்கி வானத்தைப் பார்க்கிறது. அதிகாலை இருளில் கடற்பறவைகள் மேலே வட்டமிடு கின்றன. ஒருவிதமான மரண ஓலத்தை காட்டும் பறவைகளின் ஒலியுடன் கூடிய பின்னணி இசை. நாமும் அவர்களுடன் சேர்ந்து பரிதவிக்கிறோம். திடீரென சம்மாட்டி

**சுவிஸில் இருந்து**
**அனலை- அரிகரபுத்திரன்**

யாரின் மகன் மீண்டு வருகிறான் நமக்கும் அப்பாடா! ஏன்றிருக்கிறது. இப்படியாக பலகாட்சிகளை நாம் உற்று நோக்கலாம். இசையமைப் பாளர், இயக்குநர், ஒளிப்பதிவாளரின் தனித்திறமைக்கும் ஒன்றிணைந்த செயல்பாட்டிற்கும். பொருத்தமான கூட்டிணைவு.

இசையமைப்பாளர், பின்னணி இசையால் தனது படைப்பாற் றலையும் வெளிப்படுத்தியிருக்கிறார். வசதிகுறைந்த தொழில்நுட்பத் துடனும் இவ்வளவு தூரம் உழைத் திருப்பது பாராட்டத்தக்கதே.. இருப்பினும் பாடல்களில் அவரது தனித்துவம் வெளிப்படவில்லை என்றேசொல்லவேண்டும். ஆயினும் ஒரு படைப்பாற்றலுள்ள பின்னணி இசைக்கலைஞனாக வளர்வதற் கான சாத்தியங்களை அவர் வெளிப் படுத்தியிருக்கிறார். என்றே சொல்ல வேண்டும். குறிப்பாக நகைச்சுவைக் காட்சிகளுக்கு இசைப்பிரியனின் இசைதான் மெருகூட்டுகிறது.

கதை வசனத்தைப்பொறுத்த வரையில் பல பாத்திரங்கள் உரை யாடும் பேச்சு மொழி நமக்கு புரிவ தற்கு சற்று சிரமமாக இருந்த போதும், வசனங்களைக் குறைத்து காட்சிப்படுத்தலுக்கு முக்கியத்துவம் கொடுத்திருப்பதினால் அவர்களின் உணர்வுகளுடனும், உணர்ச்சி களுடனும் நாமும் ஒன்றிக்கிறோம். பக்கம் பக்கமாக வசனங்களைப்பேசி வீடியோ நாடகமாக மாற்றாமல் இதனை ஒரு சினிமாவாக ஆக்கியி ருப்பதன் மூலம் ஒரு இயக்குநர், வசனகர்த்தா என்றவகையில் கேச வராஜா வெற்றிபெற்றிருக்கிறார் என்றே சொல்ல வேண்டும். ஆனால் இடைக்கிடை பேச்சுவழக்கில் இரு ந்து திடீரென எழுத்து நடைக்கு (இலக்கணபாணி) மாறிப்பாத்திரங்கள் உரையாடுவது. உறுத்தலாக வேயுள்ளது. உதாரணமாக மக்களு க்கு நிவாரண உதவி வழங்குவதற் கான பெண்போராளிகளின் உரை யாடல், மற்றும் சம்மட்டியாரின் மகனு டைய காதலியின் குடும்பத்துடன் சண்டைக்கு நிற்கும் போது போராளி களின் உரையாடல் போன்ற காட்சி களைக்குறிப்பிடலாம்.

படத்தின் கதையோட்டத்தை குழப்பியடிக்காமலும். காட்சிகளின் தொடர்பினை உறுத்தாவண்ணமும் செய்யப்பட்டுள்ள படத்தொகுப்பில் சில தொய்வான காட்சிகளையும், நீண்ட பாடல்காட்சிகளையும் வெட்டிச்



சுருக்கியிருந்தால் படத்திற்கு இன்னமும் விறுவிறுப்பும், செறிவும் கூடியிருக்கும். பிரச்சாரப்பாணியில் அமைந்த காட்சிகளையும், போராளி களின் கடல் சாகசக்காட்சிகளையும் தவிர்த்திருந்தால் இதன் கலை ஆளுமை இன்னமும் சோபித்தி ருக்கும். சில சமரசங்களின் நிமித்தம் இயக்குநர் இந்த காட்சிகளை சேர்த்தி ருந்த போதும் அவை திரைக்கதை ஓட்டத்துடன் ஒட்டாமலே தனித்து நிற்கிறது. உண்மையில் மேற்படி சாகச காட்சிகளைவிட போராளி களின் வாழ்வை திரைக்கதை யோட்டத்துடன் பொருந்தும் படி சொல்லியிருக்கும் காட்சிகள் அழுத்தமானவை. உணர்வு ரீதியா னவை. மாறாக உப்பு தாராளமாகக் கிடைக்கிறது என்பதற்காக அதை அளவுக்கு மீறிச்சேர்ப்பது உண வையே கெடுத்துவிடும் என்பது இயக்குநர் கேசவராஜனுக்கு தெரியா ததல்ல.

எது எப்படியிருப்பினும் இயக்குநர் கேசவராஜனும் அவரது அணியினரும் தமது உழைப்பில் வெற்றி பெற்றி ருக்கிறார்கள் என்றே சொல்ல வேண் டும். விமர்சகன் என்ற நிலைக்கு அப் பால் ஒரு ரசிகனாக, வாசகனாக சோகம், துக்கம், மகிழ்ச்சி, அழுகை, உணர்வைத் தொடுதல் என எல்லாமுமாக என்னை ஆட்டி வித்ததினால் அவர்கள் சாதித்தி ருக்கிறார்கள் என்றே சொல்ல வேண் டும் அவர்களின் சாதனைகள் தொடர வேண்டும். பொ.தாசன் போன்ற படைப்பாளிகளின் பணியினை இவர்க ளால் ஈடுசெய்ய முடியும் என்ற நம் பிக்கை பிறக்கிறது. இந்த திரைப்படம் தமிழீழ சினிமாவுக்கு நல்ல முன் மாதிரியாகவும் திகழப்போகிறது. இதன் வழியே தமிழ் சினிமாவை தரணியின் தரத்துக்கு தமிழீழச் சினிமா உயர்த்தும் என நம்புவோம். •

SHAN SHAN SHAN SHAN SHAN SHAN SHAN SHAN SHAN

SHAN Computer Institute
PROFESSIONAL

SHAN
COMPUTER & TYPEWRITING INSTITUTE

கணனி தொழிநுட்பக் கலைஞர்களுக்காக

வவுனியாவில் முதன்முறையாக

மல்ரிமீடியா
Multimedia

15-08-2003 திகதிக்கு முன் பதிவு செய்யும் மாணவர்களுக்கு 60% கழிவு வழங்கப்படும்.

வகுப்புக்கள் ஆரம்பம் : 18-08-2003
நேரம்: 10.00 AM & மாலை 06.00 PM

உடன் தொடர்புகொள்ளவும்

SHAN COMPUTER & TYPEWRITING INSTITUTE
இல-37,வைரவர் கோவில் வீதி, வைரவபுளியங்குளம், வவுனியா.
☎024-20143 email-shancomputer institute@hotmail.com

British Business college - Colombo
IDPM -UK
IMS -UK
ஆகிய நிறுவனங்களுடன் இணைந்து

தமிழ் மக்களுக்காக!
(சி-8312)

SHAN SHAN SHAN SHAN SHAN SHAN SHAN SHAN SHAN

# "உறவுச்சங்கமம்"

## தமிழ் பேசும் மக்களின் இதயத்தோடு இரண்டறக்கலந்த வெரித்தாஸ் வானொலி, தமிழ்ப்பணிக்குழுவினரின் மன்னார் விஜயம்.

மனிலா, பிலிப்பைன்ஸ் நாட்டிலிருந்து தமிழ் நெஞ்சங்களோடு உறவுகொள்ளும் வெரித்தாஸ் வானொலி தமிழ்ப்பணியினர் மன்னார் நேயர்களைச் சந்திக்க ஓடோடி வருகின்றார்கள்.

இவர்களைச்சந்திக்க, அவர்களோடு சேர்ந்து சிந்திக்க, கருத்துக்களைப் பரிமாறஅவர்களை வரவேற்க உங்களை அன்போடு அழைக்கின்றோம்.

காலம்: 2003.08.07
நேரம்:-காலை 09.30-12.00
இடம்:-மன்னார் நகரசபை கேட்போர் அரங்கம்.

நாளாந்தம் வெரித்தாஸ் வானொலி தமிழ் நிகழ்ச்சிகளைக் கேளுங்கள் கருத்துக்களை பகிர்ந்துகொள்ளுங்கள்.

அனைவரும் வாருங்கள் நம் வெரித்தாஸ் உறவுகளோடு சங்கமமாவோம்.

தொடர்புகளுக்கு:
அருட்பணி. கி. அந்தோனிதாஸ் டலிமா.
இயக்குநர்,
மன்னார் மறைமாவட்ட சமூகத் தொடர்புகள் பணி,
புனித வளன் திருமறைப்பணி நிலையம்,
புனித செபஸ்தியார் பேராலய வீதி, மன்னார். (சி-8314)


# சனசமூக நிலையங்களிற்கு வெள்ளிநாதம் இலவசம்

ஈழநாதம் பத்திரிகையின் வாரவெளியீடான வெள்ளி நாதத்தினை சனசமூக நிலையங்களிற்கு காலாண்டிற்கு இலவசமாக நிலவன் வெளியீட்டகத்தின் நிதி ஆதரவுடன் வழங்கத் தீர்மானித்துள்ளோம்.

கீழ்காணும் விபரங்களோடு எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்.

01. சனசமூக நிலையங்களின் விபரத்துடன் நிர்வாகத்தினரின் கடிதம்.

02. அந்தந்த கிராமசேவையாளர்களிடம் உறுதிப்படுத்திய கடிதம்.

03. சனசமூக நிலையத்திற்கு அண்மையிலுள்ள ஈழநாதம் விற்பனை முகவரின் முகவரி.

என்பவற்றுடன் கீழ்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளுங்கள்.

ஆசிரியர்,
வெள்ளிநாதம்,
யாழ்சாலை,
கிளிநொச்சி.

குறிப்பு :-
நீங்கள் எம்முடன் தொடர்பு கொண்ட திகதியிலிருந்து காலாண்டிற்கு வெள்ளிநாதம்வழங்கப்படும்.




## விவசாயப்பெருமக்களே!
## சைவ உணவக உரிமையாளர்களே!
## ஆயுர்வேத வைத்திய சிகாமணிகளே!

## எமது ஸ்தாபனத்திற்கு ஒருமுறை விஜயம் செய்யுங்கள்

நேரில் வரவும்

எம்மிடம்
- * நெல் குற்றும் இயந்திரம்
- * உமி நீக்கும் இயந்திரம்(CHINA)
- * அரிசி பொலிசர்(CHINA)
- * மிளகாய் ,உழுந்து, கோப்பி அரைக்கும் (நவின்கெனடிபிறாண்ட்) உலகப்பிரசித்தி பெற்ற இயந்திரம்
- * எந்தவிதமான கடின உழைப்பிற்கும் அதிசக்தி வாய்ந்த(லிஸ்ரரைப்) டீசல் எஞ்சின் (கெனடிநவின்) மார்க் 20H.P,10H.P குதிரை சக்தி கொண்டவை. பெற்றரைப் 25H.P, 15H.P,7 1/2 H.P,6H.P,(குதிரை சக்தி) கொண்டவை. விசை கூடிய எஞ்சின் (கெனடி நவின் R.P.M 1500)
- * கோப்பி அரைக்கும் இயந்திரம். சைவஉணவகத்துக்கு உழுந்து சட்ணி சம்பல் போன்று நீர் சேர்த்து அரைப்பதற்கு கெனடி நவின் ஈர அரையல் இயந்திரம் 2,3,5,7 1/2 ,10,15,20 கிலோ வரை அரைக்கும் அளவுகளில் உண்டு. இவற்றில் மருந்து மூலிகைகளும் அரைக்க முடிவதால் வைத்தியசிகாமணிகளுக்கும் உகந்தது. ஈரஅரிசி அரைக்கும்(CHINA) மில் 17,23,37,42 போன்ற தங்கள் தேவைக்கேற்ப அளவுகளில் இயந்திரங்களைப்பெற்றுக்கொள்ளலாம். இவற்றுக்கான சகல உதிரிப்பாகங்கள் றபர்,றோமம் ஆகியவற்றால் உருவாக்கப்பட்ட பட்டி வகைகள் எல்லா அளவுகளிலும் 'V'பெல்ட்(பட்டி) வகைகள் றபர் ஹோஸ் கிரைண்டர் பிளேட்சல்லடை வகைகள் மோட்டார் ஸ்ராட்டர் எல்லாம் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ளலாம்.

* வங்கிக்கடன் வசதி அல்லது குத்தகை வசதி தேவையானால் ஒழுங்கு செய்துதரப்படும்.(40% வரை)

## ஏக இறக்குமதியாளரும் விநியோகஸ்தரும்

(சி-8315)

# சமுத்திரா ரேட்ஸ் லிமிட்டட்

117, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம் . T.P 021– 2222938

ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டஸ்
212,K.K.S வீதி,
யாழ்ப்பாணம்.
T.P 021-2225542

● ஆடிஅமாவாசை அன்று கீரிமலைக் கடற்கரையில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டமைக்குக் காரணம் ?

றிசானா,
தொல்லிப்பளை.

நீண்டநாட்களின் பின் கடலில் குளிப்பவர்கள் தவறி கடலில் மூழ்கினாலும் காப்பாற்று வதற்கு.

● அழகு ஆபத்து என்கிறார் களே உண்மைதானா அனுமாரே?



# அனுமார் பதில்கள்

எஸ்.வசந்தி,
வட்டக்கச்சி.

கறுப்பும் அழகென் கிறார்கள், வெள்ளையும் அழகென் கிறார்கள். அப்போ ஆபத்து எங்கே? ஒரே குளப்பமாய் உள்ளது.

● எஸ்.பி.திசநாயகாவை பொ.ஐ.மு.சேர்க்க முயற்சிநடை பெறுகிறதாம்! திசநாயகாவின் மனச்சாட்சி கட்சிமாற இடமளிக்குமா?

ஆர்.றதீஸ்,
திருநெல்வேலி.

ஏன் முழங்காலுக்கும் மொட்டந்தலைக்கும் முடிச்சுப் போட்டுப்பார்க்கிறீர்கள். அவர் களுக்குத்தான் 'அது' இல்லையே.

● கடன் கொடுத்தவர் வாங்கியவரின் வீட்டுப்படலை திறக்கும்போது "உந்த அறுவான்ர காசைக் கெதியாக்குடுத்திடுங்கோ" என்று மனைவி சொல்லிய வார்த்தை கடன் கொடுத்தவரின் காதில் எட்டும்போது அவர் என்ன நினைத்துக் கொள்வார்.?

க. இரத்தின சிங்கம்,
களிநொச்சி.

தன் மனைவிக்காக கவலைப்படுவார். 'அறுவான்' என்கிறார்களே.

● அன்புள்ள அனுமாரே! சமாதானம் நிலவவேண்டுமானால் மக்கள் என்ன செய்யவேண்டும்?

சே.காந்தரூபன்,
ஆவரங்கால்.

தமிழ் மக்கள் யுத்தத் திற்கும் தயாராக இருக்கிறார்கள் என்று கொழும்பு உணரும் வண்ணம் நடந்துகொள்ளவேண்டும்.

● அனுமாருக்கு! கண்டதும் காதல் என்றுதான் சொல்லுவார்கள். கண்டதும் ஏற்படும் பாசம்!

ச.புஸ்பராணி,
கிளிநொச்சி.

இலக்கியத்தில் ராமனைக் கண்டபோது குகனுக்கு ஏற்பட்டது. அரசியலில் சசிகலாவைக் கண்ட வுடன் ஜெயலலிதாவுக்கு ஏற்பட்டது என்று சொல்லமுடியாது.

● நாட்டுப்பற்றாளர் கூட்ட ணிக்கு வைத்தார்களே வேட்டு. ஏன்?

என்.சின்கொ,
வன்னி.

எல்லாம் 'வோட்டு'ப் பிரச்சினைதான்.

● கடி ஜோக் ஒன்று அனுமாரே?

எஸ்.பிரபா,
வவுனியா.

வகுப்பில் ஒரு முறை ஐந்து நிமிடம் கண்களை இறுகமூடி சிந்தியுங்கள் என்றார் வாத்தியார். பின்னர் நீங்கள் நினைத்ததை எழுதி பக்கத்தில் உள்ளவர்களிடம் படிக்கக் கொடுங்கள் என்றார். எனக்குக் கிடைத்த சிந்தனை "வாத்தியார் பக்கத்துவகுப்பு ரீச்சரைப்பார்க்கத் தான் இப்படிச் சொல்லியிருக்க வேண்டுமென்று நினைக்கிறேன்."

● டியர் அனுமாரே! நீங்கள் மலையைத் தூக்கிப் பறந்துவரும் போது உங்களை ஆமிக்காறர் சோதனை செய்யவில்லையா?

ப.தனுசன்,
வவுனியா.

அவர்கள் பஞ்சைத் தூக்கிப் பறந்தால்தான் சோதிப் பார்கள். மலையைத் தூக்கிப் பறந்துபாருங்கள். பஞ்சுபோல் பறந்துவிடுவார்கள்.

● ஹாய் அனுமாரே! பெண் களைக் காணும் ஆண்காள், 'பாய' சொல்கிறார்களே ஏனாக இருக்கும்?

ஆ. சுதர்சிகா,
உழவனூர்.

நீங்கள் 'ஹாய்' சொல் லித் தொடரும்போது அவர்கள் 'பாய்' தான் சொல்லுவார்கள். நீங்கள் 'பாய்'என்று சொல்லத் தொடங்குங்கள் 'ஹாய்' என்று சொல்லிப் பின்னால் வருவார்கள்.

● இலங்கைக்கும் இந்தி யாவுக்கும் இடையில் பாலமும், ஜெயலலிதாவும், வைக்கோவும் எப்படி அனுமாரே?

செல்வராசா,
காரைநகர்.

ஜெயலலிதாவின் தன்னலத்தையும் வைக்கோவின் பொதுநலத்தையும் சிறிலங்காவின் நரித்தனத்தையும் கோடிகாட்டுகிறது.

● அனுமார் அங்கிள் வணக்கம்! தென்னிலங்கை அரசி யலில் ஏன் இந்தக் குழப்பம். சொல்லுங்களேன் தெளிவான விளக்கம்.

எம்.எஸ். தூரன்,
முள்ளியவளை.

இப்பொழுது மட்டுமில்லை இக்குழப்பம். ஈழத்தமிழரில் கைவைத்தபொழுதே ஏற்பட்டது இந்தக்கலக்கம். தென்னிலங்கை மட்டுமில்லை இதின் அடக்கம். மொத்த உலகமே இதற்குத் தொடக்கம். திருப்தியா? இந்த விளக்கம் தூரன். ●

## 6ம் ஆண்டு நினைவலைகள்

| தாயின் மடியில் | | தாயக மண்ணில் |
|---|---|---|
| 05 - 03 - 1977 |  | 01 - 08 - 1997 |

### வீரவேங்கை ஈழத்தமிழன்

(பத்மநாதன் மதியழகன்)
சம்பியன் லேன் கொக்குவில் கிழக்கு

வீசும் காற்றும் மதியழகா உன்னை
நேசம் அனைத்தும் ஈழத்தமிழா என
பேசும் புகழ் பரப்பும் புலிவீரா....!
ஆண்டாவென்ன அகிலம் உளமட்டும்
ஈழப்பரணியிலே உன் பெயரும்
தொடர்ந்து வரும் தமிழீழ
விடுதலையில் உன் தாகம் தீரும்
வாடி மலரும் புதுப்பூக்கள் உங்கள்
புகழ்பாடி வாழ்வார்கள் இஃது உறுதி.

தற்காலிக முகவரி:-
சுரேஸ் குடியிருப்பு,
கைவேலி.

(3590)

என்றென்றும்
உன் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.


கணக்கீடு
திரு.பாலவாசன்
B.B.A.[F.M.spl]
A/L 2004 DAY
Mon, Tue, Thur
6.30-8.00AM
ஆரம்பம்
07.08.2003
Thurs
6.30AM
விஃனா
கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்.


## படத்திற்கு மெருகூட்டுங்கள் -29



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.

படத்திற்கு மெருகூட்டுங்கள் -29

.............................................................

.............................................................

.............................................................

.............................................................

பெயர் : .............................................
முகவரி : .............................................
.............................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் -28



V. கவி,
புதியமதியரசி
நகைமாடம்,
முல்லைவீதி,
தர்மபுரம்.

### பரிசுக்குரிய வரிகள்

மழலை நான் மகிழ்வடைகிறேன்
பூசணியால் நான் புதைக்கப்படவில்லை
என்பதற்காகவல்ல. தமிழனின் உண்மைகள்
மறைக்க முடியாதவை என்பதற்காய்

### பாராட்டுக்குரிய வரிகள்

*புட்டிப்பாலகனே - தமிழனின்*
*புதையுண்ட வாழ்வினை*
*பூசனிக்காயினுள் தேடுகிறாயா?*
*புரிகிறது உன் முகத்தில்*

கனி,
வட்டகச்சி.

*வட்டபூசணி நடுவினிலே*
*வாகை சூடும் மலரிது இதன்*
*வாசம் நாளை செழித்திட - நாட்டின்*
*பொருண்மியத்தை வளர்த்திடு*

கார்த்திக் ஸ்ரூடியோ,
வட்டக்கச்சி.

*நாட்டின் விடுதலை பெற்றிடினும்*
*நலமாய் இங்கு நாம் வாழ - பொருண்மிய*
*விடுதலை பெறவேண்டும். - இன்றே*
*விதையாய் நடுகை செய்திடுவீர்.*

சு.கார்த்திக்,
வன்னி.

*மண்மூட்டை என்று எண்ணி*
*பூசணிக்குள் பதுங்கினாயோ*
*விடிவு நெருங்கி விட்டதென்று*
*தலையை நிமிர்த்தி சிரிக்கிறாயோ.*

மாணிக்கவல்லி,
தொல்புரம்.

*என்ன வளம் இல்லை? என்ற*
*பூரிப்போ! உனக்கு? இது வளமான*
*திருநாடு என்பதில் நிச்சயமில்லை*
*என்ற வார்த்தை தான் உன் பூரிப்பில்.*

தி.ஸ்ரீரஜீவன்,
கிளி/இந்துக்கல்லூரி.

*எங்கிருந்தும்*
*எங்கள் இலட்சியத்தை நிறைவேற்ற*
*வீரமுடம் நோக்குகின்ற*
*சிறுவர்களுள் ஒருவன்.*

M.பேணாட்ஷா,
முருங்கன்.

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை
**அருச்சுனா புகைப்படக் கலையகம்**
புதுக்குடியிருப்பு கிளிநொச்சி.
வழங்குகின்றது.

உண்மையாய் இருக்கத் துணிவு கொள்; எதற்குமே பொய், தேவைப்படுவதில்லை. - ஜார்ஜ் ஹெர்பொட்.




இப் பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 01 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.